

பார்சிலோனாவை வீழ்த்தியது ரியல் மெட்ரிட்

பக்கம் 18


# உதயன்

சுடர்: 29 கதிர்: 335 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 10, திங்கள் 27.10.2014

stay connected with: uthayan.print uthayanprint

Uthayan - A lively National Tamil Daily

யாழ். - 20/=
வன்னி - 20/=


## காலநிலை

மேகமூட்டம்/ மழை

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலையில் இடியுடன் கூடிய அதிகளவிலான மழைக்கு சாத்தியம் நிலவுகின்றது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக இந்த மழை வீழ்ச்சியானது மேல் மாகாணங்களிலும் காங்கேசன்துறை பொத்துவில் ஊடாக திருகோணமலை வரையான கடலோரப்பகுதிகளில் காற்றுடன் கூடிய மழை தொடரக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்கும்படி வானிலை அவதான நிலையம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

# முதல் கைது

## ஐ.நா.விசாரணைக்கு ஒத்துழைத்த நபர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் காவலில்

யாழ்ப்பாணம், ஒக்.27

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் முன்னெடுக்கப்படும் இலங்கை தொடர்பான போர்க்குற்ற விசாரணைக்கு பகிரங்கமாக ஆதரவளித்த ஒருவர் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்படும்போது அவரிடம் ஐ.நா. விசாரணைக்கு சாட்சியமளிப்பதற்கான படிவங்கள் இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி, கிராஞ்சியைச் சேர்ந்த சின்னத்தம்பி கிருஸ்ணராசா (வயது-57) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று குடும்பத்தினருக்கு நாச்சிக்

19 ஆம் பக்கம் பார்க்க



எதிரணியினர் சிறுபான்மையினரை அரவணைக்க வேண்டிய தருணமிது

பக்கம் 12

## ஐ.நா. உடனடியாக தலையிட வேண்டும்

### வலியுறுத்துகின்றது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

ஐ.நா. சாட்சியமளிப்பு விண்ணப்பப் படிவத்தை வைத்திருந்த ஒருவர் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டமையை வன்மை யாகக் கண்டித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அவரை உடனே விடுவிக்க வேண்டும் என்றும், இந்த விடயத்தில் ஐ.நா தலையிட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சர்வதேச விசாரணை தொடர்பிலான சாட்சியம் வழங்கும் படிவத்தை விநியோகித்த ஒருவர் கிளிநொச்சி இரணைமாதா நகரில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.



இந்தக் கைது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையி லேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இலங்கை அரசின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை யில், காணாமற் போனவர்கள், போரின் இறுதியில் நடைபெற்ற குற்றங்கள் தொடர்பில் விசாரிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் போது மக்கள் சாட்சியமளிக்கின்றனர். இவ்வாறு இலங்கை அர சின் பொறிமுறைக்கு முன்பாக சாட்சியமளித்ததை, ஐ.நா விசாரணைக்குழு முன்பு சாட்சியமளிப்பது எப்படி குற்றமாகும் ?

இவரது கைதை நாம் கண்டிக்கின்றோம். அவர் விடுவிக்கப்பட வேண்டும். இதில் ஐக்கிய நாடுகள்

22 ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்களின் அறவழிப் போராட்டத்தில் கைகோர்க்க முஸ்லிம்களுக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் முஸ்லிம் மக்களும் எமது அஹிம்சைப் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, வடக்கு மாகாணசபைக்கு அரசு முழுமை யான அதிகாரங்களை வழங்கினால், வெளியேறிய முஸ்லிம்களை மீளவும் அவர்களது சொந்த நிலங்களிலேயே குடிய மர்த்துவோம் என்றும் தெரிவித் துள்ளார். அகில இலங்கை முஸ்லிம்

22 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா.வுக்கான சாட்சியம் 31ஆம் திகதியுடன் நிறைவு பெறும்

கொழும்பு, ஒக்.27

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது நிகழ்ந்தன என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு சாட்சியங்களைக் கையளிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த காலஅவகாசம் இந்த வாரத்துடன் நிறைவடைகிறது.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதிமுதல் 2011 நவம்பர் 15ஆம் திகதி வரை இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்

22 ஆம் பக்கம் பார்க்க

## "எங்களப் படிக்க விடுங்கோ..!"



யாழில் மதுபாவனையைத் தடுத்து நிறுத்தக் கோரி யாழ்.நாவாந்துறை மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது. கரிதாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாவாந்துறை ஜே/85 பிரிவு மக்கள் மற்றும் சென். மேரிஸ் சனசமூக நிலையத்தினர், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை மேற் கொண்டிருந்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் மீள எழுந்தால் தலையிலேயே அடிப்போம்

### சுசில் பிரேமஜெயந்த இப்படிக் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஒக். 27

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தலை தூக்கினால் அவர்களின் தலையை அடித்து அழிப்போம் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்

22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்குக்கான பயண தடையில் இலங்கையருக்கு சலுகையாம்

கொழும்பு, ஒக். 27

வடக்குக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாட்டில், இலங்கையில் பிறந்து வெளிநாட்டு கடவுச்சீட்டுடன் வருபவர்களுக்கு மாத்திரம் சலுகை வழங்கப்படும் என்று பாது

22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு விசேட இணக்க சபை

### நீதி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்கின்றது

யாழ்ப்பாணம், ஒக். 27

வடக்கு - கிழக்கு அரச காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு விசேட அதிகாரம் கொண்ட இணக்க சபை நிறுவுவதற்கு நீதி அமைச்சு நடவடிக்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## கமலேஷ் சர்மாவுடைய சந்திப்புகள் நேற்று மூடிய கதவுகளுக்குள்ளே

### அரசுக்குச் சாதகமான செயல்திட்டங்களை மட்டுமே பார்வையிட்டார் எனவும் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்.மாவட்டத்திற்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மாவின் சந்திப்புக்களில் இரகசியம் பேணப்பட்டது. அத்துடன் இலங்கை அரசுக்கு

22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மூதாட்டி கொலை தொடர்பில் ஒருவர் பொலிஸாரால் கைது

வலி.வடக்கு, ஒக்.27
இளவாலை பொலிஸ் பிரிவில் கடந்த புதன்கிழமை அதிகாலை வீட்டில் தனிமையாக இருந்த 75 வயது மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த ஒரு இளம் குடும்பஸ்தர் இளவாலைப் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இளவாலைப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சூராவத்தைப் பகுதியில் வைத்து நேற்றுவெள்ளிக்கிழமை மதியம் இளவயதினரான குடும்பத் தலைவர் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் பிற்பகல் பொலிஸார் மனைவியையும், கைக்குழந்தையையும் அழைத்துச் சென்றுள்ளனர்.

தொடர்ந்து நள்ளிரவுவரை நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையில் இரவு 11 மணியளவில் மனைவியையும் குழந்தையையும் விடுவித்த பொலிஸார், குறித்த குடும்பத்தலைவரை தடுத்து வைத்து விசாரணைக் குட்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-86)

# மஹிந்தவின் அரசை விட்டு விலகும் எண்ணமில்லை

## ஹெல உறுமய கட்சி உதய கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.27
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசை ஹெல உறுமய கட்சி நேசிக்கின்றது என்று தெரிவித்துள்ளார் அதன் முக்கியஸ்தரான உதய கம்மன்பில.

'மவ்பிம' பத்திரிகைக்கு அளித்துள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பதற்கு ஏற்ப தேர்தல் நேரத்தில் தான் எங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும். அதன் காரணமாகவே நாங்களும் சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளோம். ஆனாலும் நாங்கள் ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசை நேசிப்பவர்கள். இந்த அரசு தொடர்ந்திருக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகின்றோம். எனினும் எங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் பட்சத்தில்தான் நாங்கள் தைரியமாக அரசுடன் இணைந்திருக்க முடியும். அதே நேரம் அரசை விட்டு விலகும் எண்ணம் எங்கள் கட்சிக்கு இல்லை. மக்கள் எங்களை அரசியல் நடிகர்கள் என்று முத்திரை குத்திவிடக் கூடாது. அவ்வாறு நாங்களும் எங்கள் கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொள்ள மாட்டோம்"-என்று தெரிவித்துள்ளார். (ந)

**விபத்து**

கண்டி

### வாகன விபத்தில் ஒருவர் காயம்

கண்டி-வத்துகாமம் வீதியில் பொல்கொல்லை பிரதேசத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர். ஜீப் வண்டி ஒன்று மோட்டார் சைக்கிளில் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில், ஆர்.எம். கருணாரத்ன (வயது 56) என்பவரே உயிரிழந்துள்ளார். கண்டி- தெல்தெனியா பிரதேசத்தை சேர்ந்த 18 வயதுடைய மாணவன், மது போதையில் இந்த ஜீப் வண்டியை செலுத்தி உள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந)

# க.பொ.த. சாதாரணதர பரீட்சை திகதிகளில் மாற்றங்கள் இல்லை

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.27
க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைகள் திட்டமிட்ட திகதிகளில் நடைபெறும். அவற்றில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று தெரிவித்துள்ளார் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.என்.ஜெயந்த புஷ்பகுமார. திட்டமிட்டபடி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதியிலிருந்து 18 ஆம் திகதி வரை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2015 ஜனவரி மாதத்தில் பாப்பரசரின் இலங்கை வருகையும் ஜனாதிபதித் தேர்தலும் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுவதால், பரீட்சை தினங்களிலும் மாற்றம் வரலாம் என கருதப்பட்டது. இந்நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இந்த ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 5 இலட்சத்து 77 ஆயிரத்து 84 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். திட்டமிட்டபடி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதியிலிருந்து 18 ஆம் திகதிவரை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடைபெறும். இதுவரை இந்தத் திகதிகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. அதனால் திட்டமிட்டபடி டிசெம்பரில் உரிய காலப்பகுதியில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை நடைபெறும்"- என்று தெரிவித்துள்ளார்.

க.பொ.த. சாதரண பரீட்சையானது 1176 நிலையங்களில் நடைபெறவுள்ளது. பரீட்சைக்கான நேர அட்டவணையை திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தள முகவரியில் பார்வையிட முடியும். (ந)



சீனாவின் இராணுவ விஞ்ஞானப் பிரதிநிதிகள் சீன மக்களின் இராணுவ அறிவியல் நிறுவகத்தின் துணைவேந்தர் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லியற்னோனன்ற் தலைமையிலான ஆறுபேர் கொண்ட குழு இலங்கை கடற்படை தலைமையகத்தில் கடற்படை அதிகாரி அட்மிரல் ஜயந்த பெரேராவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இருநாட்டு வியாபார முக்கியத்துவங்கள் மற்றும் விருப்பங்கள் தொடர்பாக இரு நாட்டு இராணுவ தலைமைகளும் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கலந்துரையாடலைத் தொடர்ந்து இருவருக்குமிடையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (ந)

# நடைபெறவுள்ள தேர்தலில் மஹிந்தவுக்கு தோல்வியே

## மறுப்பவர்கள் தர்க்கரீதியில் காரணம் கூறவேண்டும் அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.27
நாட்டில் இடம்பெற்றுள்ள தேர்தல்கள் தொடர்பான புள்ளி விவரத்தரவுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள நம்பகமான மற்றும் தர்க்கரீதியிலான பகுப்பாய்வொன்றுக்கு அமைய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவால் வெற்றிபெற இயலாது என்பது தெளிவாகியுள்ளது. அப்படி நடக்காது என்று யாராவது கூறுவார்களேயானால் அதுபற்றி தர்க்கரீதியிலான விமர்சனமொன்றை முன்வைக்க வேண்டும் - இவ்வாறு கடந்த 15 ஆம் திகதி மாலையில் அலரிமாளிகையில் இடம்பெற்றிருந்த சுதந்திர முன்னணியின் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் வைத்து அமைச்சர் டியூ குணசேகர சவால் விடுத்தார் என்று சிங்கள மொழி ஊடகமான 'ராவய' தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெற்றிருந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்ந்த அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்கள் சமுகமளித்திருந்ததோடு, ஹெல உறுமய சார்பாக மாகாண சபை அமைச்சரான உதய கம்மன்பில கலந்துகொண்டிருந்தார். கூட்ட ஆரம்பத்தில், சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த ஜனாதிபதித் தேர்தலொன்று நடத்தப்படவிருப்பது பற்றி அறிவிப்பதற்கே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது என்று தெரிவித்தபோது, அது பற்றித் தாம் அரச தரப்பின் ஊடகங்கள் மூலமாகத் தெரிந்து கொண்டிருந்ததாக அமைச்சர் டியூ குணசேகர பதில் வழங்கியிருந்தார்.

இங்கு ஜனாதிபதி உரையாற்றும்போது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பது பற்றித் தாம் தெரிந்து கொண்டுள்ளேன் என்றும், அரச தரப்பினருள் பெருமளவானோர் அந்த ஆய்வைப் பார்த்திருந்த போதிலும் தம்மால் இன்னமும் அதைப் பார்வையிட இயலாது போயுள்ளது என்றும் தெரிவித்தார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டியூ குணசேகர, அது மிகச் சரியானதொரு ஆய்வேயாகும். வெற்றியீட்டுவதென்பது சிரமத்துக்குரியதாகவே இருக்கும். அது ஊவா மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாகத் தமது கோரிக்கை. மீது மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வொன்றே. ஊவா தேர்தலுக்குப் பின்னர் நிலைமை மேலும் மோசமடைந்துவிட்டிருப்பதற்கு இடமிருந்துள்ளது. அந்த அறிக்கை சம்பந்தமான பொறுப்பை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றேன் - என்று தெரிவித்துள்ளார். அதுபற்றி பல தரப்பட்ட கருத்துக்களை முன்வைத்திருந்தபோது இதைவிட மிகச் சரியான பகுப்பாய்வொன்று வேறு எவர் வசத்திலும் இருக்குமானால் அதை முன்வைக்குமாறு அமைச்சர் டியூ குணசேகர சவால் விடுத்துள்ளார். ஆனால் எவரொருவரிடமிருந்தும் அதற்குப் பதிலொன்று கிடைத்திருக்கவில்லை.

அமைச்சர் டியூ குணசேகர முன்வைப்பது அமைச்சர் டலஸ் அழகப் பெருமவின் கீழுள்ள நிபுணத்துவ அபிவிருத்தி நிதியத்தின் தலைவரான மலிக் ஜயதிலக்கவினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆய்வறிக்கையொன்றாகும். அந்த அறிக்கையில், ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினக் கட்சிகளின் வாக்குகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையே. கடந்த காலம் முழுவதிலுமாக மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருந்துள்ள சிறுபான்மையினங்களின் ஈர்ப்பு குறைந்து போனதன் காரணமாக சிங்களப் பௌத்தர்களின் வாக்குகளால் மாத்திரம் அவர் வெற்றியடைவதென்பது பெரும் சிரமத்துக்குரியது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்தப் பகுப்பாய்வுக்கு அமைய, நாட்டின் ஒட்டுமொத்த வாக்குகளில் 70 % சிங்களப் பௌத்தர்களின் வாக்குகள். ஆயினும் ஜனாதிபதித் தேர்தலொன்றில் வெற்றியடைவதற்குத் தேவைப்படும். 51 % வாக்குகளையும் அந்த 70 % மான வாக்குகளிலிருந்தே மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனாலும் சிறுபான்மையினத்தவர்களின் ஒத்துழைப்பைப் பெறுகின்ற வேட்பாளரொருவர் 100% மான வாக்குகளிலிருந்து 51% தையே பெறவேண்டியுள்ளது.

இந்த ஆய்வறிக்கை மற்றும் சம்பந்தமான விளக்கவுரை ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சார்ந்த கட்சிகள் அனைத்தினதும் தலைவர்கள் உள்ளிட்ட மூத்த அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ந-22)

# சடலமில்லாது வீட்டுக்கு வந்திறங்கிய சவப்பெட்டி

மீகஹாகிவுல, கரந்தகஹாமட, தம்பலகெட்டிய கிராமத்திலுள்ள வீடொன்றுக்கு, பதுளையிலுள்ள மலர்ச்சாலையிலிருந்து சவப்பெட்டியொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதனால் அந்த வீட்டிலிருந்தவர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

சவப்பெட்டியொன்றை ஏற்றிய மலர்ச்சாலை வாகனமொன்று, குறித்த வீட்டின் முகவரியை கேட்டு விசாரித்துக் கொண்டுள்ளது என்று அந்த வீட்டின் உரிமையாளரான எஸ்.எம்.சோமபாலவுக்கு தொலைபேசி அழைப்பொன்று கிடைத்துள்ளது. தன்னுடைய உறவுமுறை மகன் ஒருவரே இந்த அழைப்பை மேற்கொண்டு தனக்கு தகவல் கொடுத்தார் என்று அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதன்பின்னர், சவப்பெட்டியை கொண்டுவந்தவர்களும் தனக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு வீட்டுக்கு வருவதற்கான வழியைக் காண்பிக்குமாறு கேட்டனர். ஆயினும் தான் சவப்பெட்டி கேட்கவில்லை என்று தெரிவித்ததாகவும் அவர் கூறினார். குறித்த மலர்ச்சாலைக்கு தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்ட சிலரே, மேற்படி வீட்டின் முகவரியைக் கொடுத்து, அங்கு சவப்பெட்டியொன்றைக் கொண்டுவந்து தருமாறு கேட்டதாக மலர்ச்சாலையில் உள்ளவர்கள் தெரிவித்தனர். (ந)

விற்பனையாகிறது!
முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்
தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4 மாணவர்களுக்கு 3ஆம் தவணை மாதிரி வினாத்தாள் விடையுடன்
யாழ் எக்ஸ்பிரஸ்
தமிழ்
கணிதம்
சுற்றாடல்
ஆங்கிலம்
அச்சிட்டு விநியோகிப்போர்
யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
10-1/5, முதலாம் மாடி, Trust Complex,
கொழும்பு 13. - 077 6258778
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
விலை. 100/-
(க.17238)
2015 முதல் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை ஒவ்வொரு தவணைக்கும் வெளிவருகிறது.

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 10 திங்கள் (27.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 335


# அரசுக்கு எதிரான கருத்துடையவர்கள் மீது இலங்கையில் தொடர்ந்தும் அடக்குமுறை

## குற்றஞ்சாட்டுகின்றது சர்வதேச மன்னிப்புச் சபை

கொழும்பு, ஒக்ரோபர் 27

**"அரசுக்கு எதிராகத் தமது அதிருப்தியை வெளியிடுபவர்கள் மீது இலங்கையில் அடக்குமுறை தொடர்கிறது. கடந்த வாரம் நாடாளுமன்றுக்கு அரு கில் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட போராட்டத்தை ஒடுக்கிய செயலும் இதன் ஓர் அனுகு முறையே." - இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை.**

மாணவர்களின் போராட்டங்களை ஒடுக்குவதை அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ளனர் என்பதையே இந்தச் சம்பவம் உணர்த்துகிறது. எனவே மாணவர்களை ஒடுக்கிய செயல் கண்டிக்கத்தக்கது. - என்றும் மன்னிப்புச் சபை மேலும் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மன்னிப்புச் சபை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"கடந்த 21ஆம் திகதி நாடாளுமன்றுக்கு அருகில் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டத்தைத் தடுக்க கண்ணீர்ப் புகைக்குண்டு வீசப்பட்டதுடன், தண்ணீர்ப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட் டது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசு மீது தடைகள் வரக்கூடும்

### எச்சரிக்கின்றார் தயான் ஜயதிலக

கொழும்பு, ஒக்.27

போர்க்குற்ற விவகாரத்தில் இலங்கை மீது சர்வதேச தடைகள் விதிக்கப்படலாம் என்று தயான் ஜயதிலக எச்சரித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை நீக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாட்டை விமர்சிக்கும் நீதித்துறை விவகாரம்.

எனினும் இந்த விவகாரத்தில் இலங்கை அரசின் வெளியுறவுத்துறை சரியான முறையில் செயற்பட்டிருந்தால், குறித்த தடை நீக்கத்தை தவிர்த்திருக்க முடியும்.-என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் சிரேஷ்ட ராஜதந்திரியான தயான் ஜயதிலக நேற்று சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு

(22 ஆம் பக்கம் பார்க்க)

## நால்வரை கடித்த நாயின் தலை கொழும்புக்கு

வலி.வடக்கு, ஒக்.27

தெல்லிப்பழை பகுதியில் நால்வரை கடித்த பின்னர் உயிரிழந்த நாயுடைய தலை பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி ப.நந்தகுமார் தெரிவித்தார்.

தெல்லிப்பழை சந்தியில் கடந்த வெள்ளிக்கிழமை நடமாடித்திரிந்த குறித்த நாய் வீதியால் சென்ற நால்வரை கடித்துள்ளது. கடியுண்டவர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். அதனையடுத்து. நாயை பிடித்து கட்டி வைத்தபோது நாய் திடீரென வெள்ளிக் கிழமை மாலை இறந்தது.

அதையடுத்து நாய் இறந்தமைக்கான காரணத்தை கண்டறியவும், நாயினுடைய நோய் தன்மையை அறியவும்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மீள் எழுச்சி சாத்தியம்; மஹிந்த அரசு கவிழ்வதும் உறுதி

### சோதிட சிகாமணிகள் கூறுகின்றனர் என்கின்றது சிங்கள ஊடகம் ஒன்று

கொழும்பு, ஒக்.27

விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி சாத்தியம் என்பதுடன் எதிர்வரும் நாள்களில் தற்போதைய அரசு கவிழ்வது நிச்சயம் என்றும் சோதிடர்கள் கூறுகின்றனர் என்று கூறுகின்றது சிங்கள மொழி ஊடகமான 'மவ்பிம'.

இதுகுறித்து மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள சனிப்பெயர்ச்சியை மையமாகக் கொண்டு சோதிடர்களின் கணிப்புகள் வெளியாகியுள்ளன, பிரபல சோதிடர்களான சுமணசிறி பண்டார, எஸ்.ஜே. சமரக்கோன் ஆகியோர் விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி நிச்சயம் என்று அடித்துக் கூறியுள்ளனர்.

அதே நேரம் சர்வதேச மற்றும் உள்நாட்டு நெருக்கடிகள் காரணமாக அரசு கவிழும் நிலைமை காணப்படுகின்றது என்றும் அவர்கள் சூசகமான முறையில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

1976, 2001ஆம் ஆண்டுகளிலும் இவ்வாறான சனிப் பெயர்ச்சியின்போது சுதந்திரக் கட்சிக்கு நெருக்கடிகள் ஏற்பட்டதை சுமணசிறி பண்டார சுட்டிக்காட்டுகின்றார். இம்முறையும் அதேபோன்ற நெருக்கடிகள் ம்றறும் ஆட்சியிழப்பு ஏற்படலாம் என்பதை அவர் மறைமுகமாக கூறியுள்ளார்.

அதேவேளை, அரசுக்கு நெருக்கடி இருப்பதை ஏற்றுக் கொண்டுள்ள சோதிடர் போத்தலகே, விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி இனி ஒருபோதும் சாத்தியமில்லை என்றும், அதற்குப் பதிலாக சர்வதேச நெருக்கடி சாத்தியம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே சோதிடர்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## புலித் தடை நீக்கம் குறித்து ஆராய்கின்றதாம் பிரிட்டன்

கொழும்பு, ஒக். 27

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீக்கம் தொடர்பில், உறுப்பு நாடுகளுடன் நாங்களும் ஆராய்ந்து வருகின்றோம் என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான பிரிட்டன் தூதரகப் பேச்சாளர், கொழும்பு ஊடகமொன்றுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஐரோப்பிய நீதிமன்றம், விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பாக சமீபத்தில் அளித்துள்ள தீர்ப்புக் குறித்து ஆராய்ந்து வருகின்றோம். 2000 ஆம் ஆண்டு பயங்கர வாத தடைச் சட்டத்தின் கீழ் பிரிட்டனில் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டது.

இது ஐரோப்பிய ஒன்றிய ஏற்பாடுகளிலிருந்து வித்தியாசமானது. அதேவேளை இந்தத் தீர்ப்பு உறுப்பு நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் ரீதியிலான ஒன்றல்ல என்ப

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இராமாவில் நலன்புரி நிலையம் சென்று பார்த்தார் கமலேஷ் சர்மா



தென்மராட்சி, ஒக்.27

யாழ்ப்பாணம் வந்துள்ள பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா தலைமையிலான குழு நேற்று பிற்பகல் தென்மராட்சி பிரதேசத்துக்குச் சென்று இராமாவில்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றுக்குள் வீழ்ந்து 4 வயது குழந்தை சாவு

### வட்டுக்கோட்டையில் பரிதாபச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக்.27

வீட்டுக் கிணற்றினுள் தவறி விழுந்து 4 வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. வட்டுக்கோட்டை வடக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த சத்தியராஜ் அர்ஜுன் (வயது -4) என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

வீட்டில் குழந்தையின் தாய் கிணற்றடியில் உடுப்புகள் தோய்த்துக் கொண்டிருந்த போது அருகில் நின்று குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. அப்போது குழந்தை கிணற்றினுள் தவறி விழுந்து விட்டது. அயலவர்களின் உதவியுடன் குழந்தையை கிணற்றிலிருந்து வெளியே தூக்கிய போதும், குழந்தை உணர் விழந்திருந்தது.

அதையடுத்து உடனடியாக சங்கானை வைத்திய சாலைக்கு குழந்தையை எடுத்துச் சென்றனர். ஆயினும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டமை உறுதிப்படுத்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## 9 லட்சம் பேருக்கு தே.அ.அட்டை இல்லை

கொழும்பு, ஒக்.27

இலங்கையிலுள்ள் வாக்காளர்களில் 9 லட்சம் பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லை என்றும் இவர்களில் 6 லட்சம் பேருக்கு வாக்களிப்பதற்குரிய எந்தவொரு ஆவணமும் இல்லை என்றும் கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனால், எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது 6 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க முடியாது போவர் என்று தெரிவித்துள்ள அந்த அமைப்பு, குருநாகல் மாவட்டத்திலுள்ளவர்களில் பெரும்பாலானவர்களே அடையாள அட்டை இன்றி உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது. (ற)

## வியாழக்கிழமை வரையிலும் ரயில் ஆசனப் பதிவு இல்லை

### அனைத்துப் பதிவுகளும் முற்பதிவாகியமையால்

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான ரயில்களின் ஆசனப் பதிவுகள் அனைத்தும் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஐந்து தினங்களுக்கு முற்பதிவு செய்யப்பட்டு பூர்த்தியாகியுள்ளன என்றும், அதனால், எதிர்வரும் வியாழக்கிழமை வரையில் ஆசனப் பதிவுகள் இடம்பெறாது எனவும் யாழ். புகையிரத நிலைய பிரதம அதிபர் என்.தவானந்தன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"யாழிலிருந்து கொழும்பு செல்வதற்கான ரயில்களை

(22 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் தொடர்பில் ஆசிரியர்களுக்கு விளக்கம்

கொழும்பு, ஒக்.27

புதிய முறைமையின் கீழ், அடுத்தாண்டு நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில் ஆசிரியர்களை தெளிவுபடுத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் புதிய திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

இதன்கீழ், பரீட்சை திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாப்பத்திரம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர்நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே புஷ்பகுமார கூறினார்.

அத்துடன் ஆசிரியர்களுக்கு பரீட்சை தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்தாண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஒரு வினாப் பத்திரமே வழங்கப்படவுள்ளது என்றும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (ற)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மின்சார நிலைய வீதியின் அவலம்
## வெள்ளம் தேங்கிய நிலையில்



வலி.வடக்கு. ஓக். 27
கோப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட மின்சார நிலைய வீதி மழை காலத்தில் பொதுமக்கள் செல்ல முடியாத அளவுக்கு வெள்ளம் தேங்கி பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.
கடந்த பல வருடங்களாக திருத்தப்படாது காணப்படும் குறிப்பிட்ட வீதியால் தினமும் பாடசாலை செல்லும் மாணவர்கள் சுன்னாகம் மருதனார் மடம் சந்தைக்குச் செல்லும் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் எனப் பல ஆயிரக் கணக்கான மக்கள் தினமும் பயன்படுத்தும் வீதியை திருத்தாமல் விடப்பட்டுள்ளதையிட்டு பொது மக்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.
குறித்த வீதியில் உடுவில் பிரதேச சபைக்குரிய பகுதி திருத்தப்பட்டுள்ள போதிலும், கோப்பாய் பிரதேச சபைக்குரிய பகுதியே பெரியளவில் குண்டும் குழியுமாக காணப்படுகின்றது. எனவே வீதியை பிரதேச சபையோ அன்றி வீதி அபிவிருத்தி திணைக்களமோ திருத்தமுன்வர வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
(வ-86)

# மக்களின் சமூகப் பிரச்சினையை தீர்க்க சமூக சீர்திருத்தக் குழு

குருநகர், ஓக்.27
றெக்கிளமேசன் சென்.றோக்ஸ் சனசமூக நிலையத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் மக்களின் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நோக்குடன் சமூக சீர்திருத்தக் குழு ஒன்று இயங்கத் தொடங்கியுள்ளது.
சென் றோக்ஸ் சனசமூக நிலையத் தலைவர் அ.க.திருவம்பலம் தலைமையில் இந்த நிலையத்தில் கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற இந்தக் குழுவின் ஆரம்பக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் இருந்து 15 பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.
அவர்களில் யே.யேந்தன், எஸ்.ராஜிப், எஸ்.எழில்தரன் ஆகியோர் இயக்குநர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.
இந்தப் பகுதியில் அதிகரித்து வரும் சட்டவிரோத செயற்பாடுகளான மதுபானம், கஞ்சா, போதைப் பொருள் பாவனை ஆகியவற்றை இல்லாதொழிப்பதுடன் கணவன்-மனைவியரிடையில் உருவாகும் பிணக்குகளைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதுமே இந்தக் குழுவை ஊக்கப்படுத்தியமைக்கான நோக்கம் என்றும் நிலையத் தலைவர் தெரிவித்தார்.
அந்தக் குழுவின் நோக்கும் பற்றி குறித்த பகுதி மக்களுக்கு விளக்கமளிப்பதற்கான கூட்டம் ஒன்று விரைவில் இந்தச் சனசமூக நிலையத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் இந்தக் கூட்டத்துக்கு அந்தப் பகுதி கிராம சேவையாளர் மற்றும் குருநகர்ப் பொலிஸாரும் அழைக்கப்படவுள்ளனர் என்றும் சென்.றோக்ஸ் சனமூக நிலையத் தலைவர் மேலும் தெரிவித்தார்.
(வ-51)

## பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு, ஓக். 27
நல்லூர் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட கல்வியன்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை வகுப்பறைகளின் செயற்பாட்டை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்துக்கு யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் 50 ஆயிரம் ரூபா நிதியை பன்முகப்படுத்திய வரவு -செலவுத் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளார்.
வகுப்பறைகளின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிக்கச் செய்ய முடியும் என்று ஆசிரியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

## நாவற்குழியில் மருத்துவமுகாம்

தென்மராட்சி, ஓக்.27
தென்மராட்சி கல்வி வலயத்தினர் தென்மராட்சி பிரதேச செயலகம், யாழ். பிராந்திய மருத்துவர்கள் ஆகியோருடன் இணைந்து எதிர்வரும் 4 ஆம் திகதி நாவற்குழிப் பிரதேசத்தில் மருத்துவ முகாமை நடத்தவுள்ளனர்.
'வலயத்தின் நேயமுடன்'' என்ற தலைப்பிலான செயற்றிட்டத்துக்கு 'வேள்ட் விஷன்' நிறுவனத்தினர் அனுசரணை வழங்குகின்றனர்.
சிறுவர் தம் உரிமைகளை வலுவூட்டும் நோக்குடன் அவர்களது உடல், உள, ஆரோக்கிய மேம்பாட்டுக்கான திட்டமிடல் பயணம் 2 நிகழ்வே நாவற்குழியில் நடத்தப்படவுள்ளன.
பயணம் - 1 ஏற்கனவே கொடிகாமம் சாவகச்சேரி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட போது ஆயிரக்கணக்கான மாணவர்களும் பெற்றோரும் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.
சுகதேகியான மாணவர்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கண், காது, பல் போஷாக்கு போன்றவை அவர்களின் பெற்றோர் முன்னிலையில் பரிசோதிக்கப்பட்டு அவர்களின் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்யும் விதமாக வலயத்தினால்' பயணம்' செயற் றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
பயணம்-2 இற்கான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்துக்கு பிரதேச செயலர், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள மருத்துவர்கள், வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள உயர் அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## பயிற்சி கற்கைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம், ஓக். 27
இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் பகுதிநேர முழுநேர தொழில் பயிற்சி கற்கை நெறிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாய், வல் வெட்டித்துறை ஆகிய நிலையங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
தொழில் பயிற்சி நெறிகளுக்கு ஜி.சீ.ஈ.சாதரண தரம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இந்தக் கற்கை நெறிகள் கற்க விரும்புவோர் தமது சுயவிவரங்களையும் கற்க விரும்பும் கற்கை நெறியையும் குறிப்பிட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் இல.12, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது மாவட்ட அலுவலகம் முதலாம்மாடி, வீரசிங்கம் மண்டபத்தில் பதிவுகளை மேற் கொள்ளலாம்.
(வ-ரி)

## 48 மணிநேர அகண்ட மந்திர உட்சாடனப் பிரார்த்தனை

கரணவாய், ஒக்.27
கரணவாய் மூத்தவிநாயகர் கோயிலடி சுயம்பு மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம் நடத்தும் 48 மணித்தியால அகண்ட மந்திர உட்சாடனப் பிரார்த்தனை எதிர்வரும் 4 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி வார வழிபாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
யாழ். குடாநாட்டில் முதல் முறையாக நடத்தப்படும் இந்தப் பிரார்த்தனை மனித குல மேம்பாட்டுக்கும் உலக நலன் நாட்டு குடும்ப நலன் நிதியும் இயற்கையின் சீற்றம் தணிக்கும் வகையில் அன்னையின் அவதாரமான ஆன்மிகக்குரு பங்காரு அடிக ளாரின் அரு ளாசியுடன் இடம் பெறவுள்ளது.
அன்றையதினம் பக்தர்கள் அனைவரும் அகண்ட மந்திர பிரார்த்தனையில் கலந்து கொண்டு அன்னையின் அருளைப்பெறுவதுடன் அன்று பகல் நடைபெறும் அன்னதான நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ-108)

## பாடசாலைகளில் நடமாடும் நூலக சேவை இன்று ஆரம்பம்

தென்மராட்சி, ஒக்.27
சாவகச்சேரி பிரதேச சபையின் நர்வற்குழி பொது நூலகத்தினர் தேசியவாசிப்புமாதசெயற்றிட்டத்தில் இன்று தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வரை முன்பள்ளிகள், பாடசாலைகளில் நடமாடும் நூலக சேவையை நடத்தவுள்ளனர்.
நூலக நடமாடும் சேவையில் நூலக அங்கத்துவம் வழங்கல், அங்கத்துவத்தைப் புதுப்பித்தல், நூல்கள் இரவல் வழங்கல், புதிய நூல்களை காட்சிப்படுத்தல், கல்விசார் பத்திரிகை இணைப்புகள் காட்சிப்படுத்தல், விஜய், ஜூனியர் ஸ்ரார் போன்ற அறிவுசார் வெளியீடுகள் காட்சிப்படுத்தல் பதாகைகள் காட்சிப்படுத்தல் கொடி அணிவித்தல் கருத்துரை வழங்கல் போன்றவை இடம்பெறும் என்று நூலகர் அறிவித்துள்ளார்.
(வ-9)

## நிர்வாகிகள் தெரிவு

உரும்பிராய் வடக்கு நாகலிங்கம் அறநெறிப் பாட சாலை நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு கடந்தவாரம் இடம் பெற்றது. தலைவர்- திருமதி மகேஸ்வரி விஜிதன், செயலாளர்-திருமதி உதயகுமாரி சுபாஸ்கரன், பொருளாளர்- செல்வி சிவலைலா கந்தசாமி, உப தலைவர் - செல்வி பகீர்தா தவேந்திரராசா மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் களாக செல்வி யோ. சுமங்கலி, திருமதி சு. சுமித்திரா, திருமதி எஸ். தர்சிகா,திரு. எஸ். அகில், போஷகர் திரு வ. மேகநாதன் அறநெறிப் பாடசாலை இணைப்பதிகாரி திரு மேகலாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
(வ-36)

**மோட்டார் சைக்கிள் விற்பனை**
NP X B- XXXX, LML வெஸ்பா
06230 Km, விலை 60,000/=
தொடர்பு: 077 825 4657
(53623) (45.6.3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி காந்தரூபி புவனேந்திரன்



இளவாலையைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காந்த ரூபி புவனேந்திரன் 25.10.2014 அன்று கால மாகிவிட் டார்.
அன்னார் காலஞ்சென்ற காத்தி மற்றும் செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், புவனேந்திரத்தின் அன்பு மனைவியும், விமலேந்திரன், காலஞ் சென்ற மகேந்திரன், தமேந்திரன் (பிரான்ஸ்), பத்மலோஷினி, யோகேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சதீஸ்குமார் (அஜேய் பட்டுச்சோலை, மானிப்பாய்), சாந்தினி, நந்தினி (ஜேர்மனி), வினோதினி (இத்தாலி), நிசாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லதில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.
(53625) (45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.
அஜேய்பட்டுச்சோலை, மானிப்பாய்.

### திருமதி கருணாதேவி (புஷ்பம்) சிவராசா



மானிப்பாய் வடகிழக்கு, ஆனந்தா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கருணாதேவி (புஷ்பம்) சிவராசா 25.10.2014 சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சீர்மை சின்னத்தம்பி-ராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தமுத்து- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிவராசாவின் அன்பு மனைவியும், விக்னராஜா (ஜேர்மனி), உமாசுதன் (சுதாகர்- TRANS WORLD COMPUTER மோதரை கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மினியின் அன்பு மாமியாரும், பசுவலிங்கம் தவமலரின் (திரவியம்-கனடா), அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வட கிழக்கு,
ஆனந்தா வீதி,
மானிப்பாய்.
(53622) (4.6)

தகவல்:
க.சிவராசா (கணவர்)

## மரண அறிவித்தல்

### திருமதி காமாட்சி செல்லையா



அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காமாட்சி செல்லையா நேற்று (26.10.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவி ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2014) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி. (பி/17248) (7.6.3)


தகவல்: க.தர்மகுலசிங்கம்
(மருமகன் - நிருத் படமாடம்-சாவகச்சேரி)

# தகுந்த முறையில் துப்புரவு செய்யாத வடிகால்வாய்கள்

## வெள்ளம் குடியிருப்புக்குள் தேங்கும் நிலை

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ். நகரை அண்டிய கரையோரப் பகுதியில் உள்ள வடிகால்வாய்கள் சிறந்த முறையில் துப்புரவு செய்யப்படாத நிலையிலும் மற்றும் கழிவுகள் அகற்றப்படாத நிலையிலும் காணப்படுவதால் குடியிருப்புக்களை வெள்ளம் முற்றுகையிட்டு அதிகமாக தேங்க முக்கிய காரணமாக உள்ளதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.



குறிப்பாக கொட்டடி முத்தமிழ் வீதி, நாவாந்துறை மீனாட்சிபுரம், பண்ணை, பொம்மைவெளி, காக்கைதீவு போன்ற பகுதியில் உள்ள வடிகால் வாய்கள் உரிய முறையில் துப்புரவு செய்யப்படவில்லை.

கொட்டடி முத்தமிழ் வீதியில் உள்ள வடிகால்வாய் துப்புரவு செய்யப்படாது கழிவுகள் தேங்கி சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

அந்த வடிகால்வாயில் இருந்து துர்நாற்றம் வீசுவதால் மக்கள் அசௌகரியங்களுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கரையோரப் பகுதியில் உள்ள அனேகமான வடிகால்வாய்கள் இவ்வாறு துப்புரவு செய்யப்படாமல் உள்ளதால் மழை காலங்களில் வெள்ளம் வழிதோட முடியாது குடியிருப்புப் பகுதிகளில் தேங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கொட்டடி மீனாட்சிபுரத்தில் உள்ள வடிகால்வாய்கள் துப்புரவு செய்யப்படாது கழிவுகள் தேங்கி காணப்படுகின்றன.

மழை தொடர்ந்து பெய்யும் பட்சத்தில் அந்தப்பகுதி குடியிருப்புக்களில்வெள்ளம்தேங்கும் நிலைமை ஏற்பட் டுள்ளது.

வடிகால்வாய்களின் துப்புரவுப் பணிகள் குறித்து மாநகர கழிவகற்றும் பிரிவு அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் இது குறித்து கூறுகையில்:

"நகரிலும் நகரை அண்டிய கரையோரப் பகுதியில் உள்ள வடிகால்வாய்கள் தொடர்ந்தும் தொழிலாளர்களால் மழைக்கு மத்தியில் துப்புரவாக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஆஸ்பத்திரி வீதி, பொலிஸ் நிலைய வீதி வடிகால்வாய்கள் துப்புரவாக்கப்பட்டு வெள்ளம் வழிந்தோடுவதற்கு சீர் செய்யப்பட்டது.

வடிகால்வாய்களில் உள்ள கழிவுகள், சேறுகள் என்பனவும் அகற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறு பிரதேசத்தில் துப்புரவு செய்யப்படாத நிலையில் உள்ள வடிகால்வாய்களை இனங்கண்டு மக்கள் எமக்கு அறிவித்தால் அவை உடன் துப்புரவு செய்யப் படும்" என்று அந்த அதிகாரி கூறினார். (வ-17)

## ஆபரண வடிவமைப்பில் நவீனத்துவம் குறித்த பயிற்சி

யாழ்ப்பாணம்.ஒக்.27

யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றமும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையும் இணைந்து சிறிய மற்றும் நடுத்தர ஆபரண தொழிற்றுறையினருக்கான 'ஆபரண வடிவமைப்பில் நவீன நுட்பங்கள் மற்றும் புதிய பரிமாணங்கள்' என்ற தலைப்பிலான பயிற்சிப்பட்டறை நாளைமறுதினம் புதன்கிழமை வர்த்தகத் தொழிற்றுறை மன்ற அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் நவீன ஆபரண வடிவமைப்பு நுட்பங்கள், அவற்றின் வடிவமைப்பு தொடர்பிலான புதிய பரிமாணங்கள், சர்வதேச தரநிர்ணயம் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப் படவுள்ளன.

ஆர்வமுடையவர்கள் நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக இல.124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (வ-14)

## கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த அறிவுறுத்து

வரணி, ஒக்.27

கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தி உதவுமாறு வரணி வடக்கு விவசாய சம்மேளனம் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்களைக் கேட்டுள்ளது.

வயல் விதைப்புக்கள் பரவலாக முடிவடைந்துள்ள நிலையில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக பயிர்கள் செழித்து வளர்ந்து வரும் நிலையில் கட்டாக்காலி கால்நடைகளால் பயிர்கள் சேதமடைகின்றன. குறித்த பிரதேச வயல் நிலங்களை அண்டிய கிராமத்தவர்களின் கால்நடைகளின் நடமாட்டம் கூடுதலாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-122)

## கவிதைப் பயிலரங்கு

வடக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன், பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் கவிதைப் பயிலரங்கு நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்றும் நாளையும் பிரதேச செயலக மாநாட்டு மண் டபத்தில் காலை 9 மணியிலிருந்து பி.ப 2 மணிவரை பயிலரங்கு இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## கலந்துரையாடல்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கைப் பணி யாளர்களின் எதிர்கால அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு கைப்பணி யாளர்களுக்கான பிரதேசமட்ட சங்கம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும். நல்லூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கைப் பணியாளர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (வ-7)

## அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி, செப்.27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)


பாராட்டிவாழ்த்துகின்றோம்



திரு.திருமதி
பாலகுமார் தம்பதிகளின் செல்வப்புதல்வி
பா.சௌமியா
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
மாணவி
2014 - தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற உளமார வாழ்த்துகின்றோம்.
அத்தோடு அவரது உயர்விற்கு உழைத்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.
வாழ்த்துவோர்:
மாமா - த.சிறீதரன், மாமி - சி.மைதிலி
(மலேசியன் றெஸ்ரோறன்ட்), K.K.S.றோட், கொக்குவில்.
(53464)(12.3.6)

வேலையாள் தேவை
புடைவை வியாபாரத்தில் அனுபமுள்ளவர்களும், பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தேவை. மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 949 8308
(53603) (45.6.3)

வீடு வாடகைக்கு
கச்சேரி நல்லூர் வீதியில் 68ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மாடிவீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங் கள் விரும்பத்தக்கது.
தொடர்பு- 077 582 3346, 077 969 0615

ஆள்கள் தேவை
பிரபல கட்டடப் பொருள் விற்பனை நிலையத்துக்கு 25 வயதுக்கு மேற்பட்ட ஆள்கள் தேவை.
தொடர்பு: சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல.55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(f/17240) (4.6.3)

வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம், நீராவியடி, இலங்கை வேந்தன் மண்டபத்திற்குப் பின்னால் சகல வசதிகளுடன் மேல் மாடியில் இரண்டு அறைகளும் கீழே மூன்று அறைகளுடைய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 071 667 2859, 071 610 7388
(51975) (4.6.3)

கண்ணீர் அஞ்சலி



25.10.2014 அன்று அமரரான
கைலாசபிள்ளை நந்தகுமார்
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
அவரின் ஆத்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அலுவலர்கள், அதிபர்கள்.
யாழ்ப்பாணக் கல்விக் கோட்டம்.
(53616)(7.6.3)

கண்ணீர் காணிக்கை



எமது வித்தியாலயத்தின் பிரதி முதல்வர்
திருமதி சிரோமினி
அவர்களின் அன்புக் கணவர்
கைலாசபிள்ளை நந்தகுமார்
எல்லோர்க்கும் நல்லவராய் இனிய வாழ்வு வாழ்ந்தவரே
பள்ளியின் வளர்ச்சிக்குப் பக்க பலமாய் நின்றவரே
அத்திபாரம் தொடக்கம் கட்டடம் வரையும்
அத்தனைக்கும் நீங்களே ஆணிவேராய் இருந்தீர்கள்
வித்தியாலயக் குழுமம் விழிநீர் சொரிகிறது.
பாடசாலைச் சமூகம்
யா/உயரப்புலம் மெதடிஸ்த மிசன் வித்தியாலயம், ஆனைக்கோட்டை.
(53611)(7.6.3)



ஆறாத் துயருடன்
ஆறாம் ஆண்டு நினைவலைகள்
தவராசா குகேஷன்
திதி : 27.10.2014
மலர்வு 21 . 11 . 1989
உதிர்வு 01 . 11 . 2008
எமது குடும்பத்திற்கு கார்த்திகை என்பது
ஓர் கறுப்பு மாதம் எங்கள் தலைமகனே!
நீ உதித்தும் உதிர்ந்ததும் இந்த மாதத்தில் தானே!
அன்று கந்தனின் ஆறுநாள் நோன்பின்
நாலாவது நாளிலே
அரக்கரின் அழிப்பில் நீ ஆகுதியாய்ப் போனாயே!
ஆறு வருடங்களாகத் துயரத்தில் தவிக்கின்றோம்
நூறு வருடங்களானாலும் நிலைத்திருக்கும்
உன் நினைவு
துள்ளித்திரிந்த பருவம் மாறி பள்ளிப்பருவமும் கடந்து
இப்போது இருபத்தைந்து வயது இளைஞனாக
இருப்பாயே!
உன்னை ஈன்றவரும் உடன் பிறந்தவரும்
கலங்கி நிற்கின்றோம்
மீண்டும் ஒரு கடவை எம்மிடம் வருவாயா செல்வமே!



விழிநீர் சிந்தி நிற்கும்
அப்பா, அம்மா, தம்பிமார், தங்கை,
அம்மம்மா மற்றும் உறவுகள்.
உடுத்துறை வடக்கு, தாளையடி.
(51979)(7.6.3)

இரண்டாம்-ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பிமுத்து
சந்திரசேகர்
தோற்றம் 28.08.1962
மறைவு 18.10.2012
ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ!
ஆறவில்லை எம் இதயம்
உங்கள் அன்பு முகம் பார்க்காமல்
வாடுகின்றோம் தினம்.
குடும்பத்தினர்.
2ஆம் ஒழுங்கை,
அரசடி நல்லூர்.

# முஹர்ரம் வாழ்த்துக்கள்

## நல்லிணக்கம் காண்போம்



இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு எனது இஸ்லாமிய புதுவருட வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இஸ்லாமிய புதுவருடம் முஹர்ரம் மாதத்தின் முதலாம் நாளில் ஆரம்பிக்கின்றது. இஸ்லாம் காலக்கணிப்பு குறித்து குறிப்பிடும்போது நிச்சயமாக அல்லாஹ் விடத்தில் அல்லாஹ்வுடைய (பதிவுப்) புத்தகத்தில் வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும் அவற்றில் நான்கு (மாதங்கள்) புனிதமானவை, இதுதான் நேரான மார்க்கமாகும் ஆகவே அந்த மாதங்களில் (போர் செய்து) உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள். (அல் குர்ஆன் 9ம் அத்தியாயம் :36 ஆம் வசனம்).

நிச்சயமாக வானங்கள் பூமிக்கு படைக்கப்பட்ட நாள் முதலே காலம் சுழன்று கொண்டிருக்கின்றது. வருடம் என்பது பன்னிரண்டு மாதங்களாகும். அதில் நான்கு மாதங்கள் புனிதமானவையாகும். மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக வரக்கூடியவை. அவை: துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம். ரஜப் முழர் என்பது ஜுமாதா (ஜமாதுஸ் ஸானி)வுக்கும் ஷஃபானுக்கும் மத்தியிலுள்ளதாகும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபீ பக்ரா (ரலி). ஆதாரம்: புஹாரி.

எனவே இஸ்லாம் அமைதியை விரும்புகின்ற மார்க்கம், நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் அதிகம் போதிக்கின்ற மார்க்கம் அந்தவகையில் நாம் வாழ்கின்ற நாட்டிலும் இங்கு வாழ்கின்ற ஏனைய சமூகத்தவர்களுடன் முஸ்லிம்களாகிய நாம் நல்லிணக்கத்துடன் வாழ்தல் அவசியமாகின்றது. அதுமட்டுமன்றி அவர்களுடைய உணர்வுகளையும், உரிமைகளையும் புரிந்துகொள்வதும் அவசியமாகின்றது. இவ்வாறான ஒரு நல்ல நாளில் இதுகுறித்து நான் அனைவருக்கும் ஞாபகமூட்டுவதற்கு விரும்புகின்றேன். நல்லிணக்கமே சிறுபான்மை சமூகத்தவரின் பலமாகவும் இருக்கின்றது. இந்த நன்னாளில் அனைவருக்கும் முஹர்ரம் புதுவருட வாழ்த்துக்களை பகிர்ந்துகொள்கின்றேன்.

**மௌலவி அப்துல் அஸீஸ் (காஸிமி)**

*தலைவர்- அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா- யாழ்.கிளிநொச்சி மாவட்டம்*

## புதுவருடத்தில் மாற்றம் வரட்டும்

இந்த மண்ணின் அனைத்து இஸ்லாமிய அன்பர்களுக்கும் உறவுகளுக்கும் இஸ்லாமிய புதுவருடமாம் முஹர்ரம் புதுவருட வாழ்த்துக்களை பகிர்ந்துகொள்கின்றேன். பொதுவாக உலக முஸ்லிம்கள் மத்தியில் புதுவருடப்பிறப்பை ஒரு விசேட தினமாக அனுஷ்டிக்கும் வழமை இல்லாதிருந் தாலும் அண்மைக்காலமாக இது குறித்து கவனம் செலுத்தும் ஒரு வழமை உருவாகிவருகின்றது. இதுகுறித்து நிலவுகின்ற வாதப் பிரதிவாதங்களுக்குள் உள்நுழைவதைவிடவும்; முஹர்ரம் குறித்து ஒரு சில பகிர்வுகளை முன்வைப்பது மிகவும் சிறப்பானதாகவும், பய னுள்ளதாகவும் இருக்கும் என எண்ணுகின்றேன். முஹர்ரம் இஸ்லாமிய சமூகத்தின் வரலாற்றுத்திருப்பத்தோடு தொடர்புறுகின்ற ஒரு நிகழ்வை மையப்படுத்தியிருக்கின்றது. நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய மறைவின் பின்னர் ஆண்டுக் கணிப்பை எங்கிருந்து தொடங்குவது என சிந்தித்த இஸ்லாமிய தலைமைத்துவம் நபிகளாரின் ஹிஜ்ரத் பயணத்தை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய வருடக் கணிப்பீட்டை தொடங்கினார்கள். அதாவது மக்கா நகரில் பிறந்து இஸ்லாமிய போதனைகளை முன்வைத்த நபி முஹம்மத்(ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு மக்கா வில் இருக்கின்ற இறை நிராகரிப்பாளர்கள் சவாலாக இருக்கின்றார்கள் என்பதை கணித்து, மக்காவில் இருந்து மதீனா என்கின்ற நகருக்கு இடம்பெயர்ந்து சென்றார்கள். இந்த நிகழ்வே ஹிஜ்ரத் எனப்படுகின்றது. எனவே ஹிஜ்ரத் இடம்பெற்ற மாதம் முஹர்ரம் ஆகும், அத்தோடு இஸ்லாமிய ஆண்டுக் கணிப்பின் முதலாவது ஆண்டும் அப்போதிருந்தே கணிக்கப்படுகின்றது. ஹிஜ்ரத் நிகழ்வுக்கு முன்னர் நிகழ்ந்த விடயங்களை ஹிஜ்ரத்துக்கு முன்னர் (ஹி.மு) என்றும்



அதற்குப் பிந்தியவைகளை ஹிஜ்ரத்துக்குப் பின்னர் (ஹி.பி) என்றும் இஸ்லாமிய வரலாற்றில் காணமுடியும். ஹிஜ்ரத் என்பது இஸ்லாமிய சமூகத்தின் பெரிய மாற்றத்துக்கானதொடக்கமாக அடையாளப்படுத்தப் படுகின்றது. அதாவது போதனை இஸ்லாம் என்ற நிலை மாறி நடைமுறை இஸ்லாம் என்ற நிலைக்கு இஸ்லாமிய சமூகத்தைத் திருப்பிய நிகழ்வே ஹிஜ்ரத் ஆகும். இலங்கை முஸ்லிம்களின் சமகால அரசியலிலும் ஒரு ஹிஜ்ரத் அவசியப்படுகின்றது. அதாவது போலியான, இனவாத உணர்ச்சியூட்டலை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் வாக்காளர்களை அடைவுவைக்கின்ற தற்போதைய பாரம்பரிய அரசியலில் இருந்து இலங்கை முஸ்லிம் மக்கள் விடுதலைபெற்று புத்திசாலித்தனமான, அறிவுபூர்வமான, தேசிய நலன்களுக்கு முதன்மைதருகின்ற, மக்களுக்கு விசுவாசமான அரசியலை நோக்கி இலங்கை முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செல்லவேண்டும். அப்போது மாத்திரம்தான் இலங்கை முஸ்லிம்கள் இந்த நாட்டில் தலைநிமிர்ந்து வாழ்கின்ற நிலை உருவாகும். இத்தகைய சோரம்போன அரசியல் வாதிகளின் பின்னால் எமது மக்களின் வாக்குகளைக் கொண்டு சென்று தாரை வார்ப்போமாக இருந்தால் அவர்கள் மக்களை நடுத் தெருவில் விட்டுவிட்டு தமது சொந்த நலன்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து தமக்குரியதைப் பெற்றுக்கொள்வார்கள். எனவே பிறந்திருக்கும் இஸ்லாமியப் புதுவருடம் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். அதனடியாக அனைத்து விடயங்களிலும் மாற்றங்கள் ஏற்படட்டும் என வாழ்த்துகின்றேன்.

*வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ. அஸ்மின்*

# நெஞ்சைக் கதவைக் கொஞ்சம்........

## வேடிக்கை பார்க்கக்கூடாது

பழுப்படைந்து இத்துப்போகும் நிலையிலிருந்த 37 வருடங்களுக்கு முந்திய பிரதேச நாளிதழ் ஒன்றில் "கையில் வாளுடன் நின்ற ஒருவருக்கு ஒரு மாதம் கடூழியம்" என்றிருந்த செய்தியை தன்னுடன் கூட இருந்தவருக்குக் காட்டிக் கொண்டிருந்தார் ஒருவர். வாளுடன் நின்றதற்கே அந்தக் காலத்தில் இந்தத் தண்டனையா? என வாயைப் பிளந்த மற்றவர், அப்போ உந்தவாள்களைக் கர்விக் கொண்டு திரியிறவைக்கும் வெட்டிறவைக்கும் என்னமாதிரி? என்றவரை இடைமறித்த முதலாமவர், சும்மா வாள், வாள் என்று கத்திப் பிரயோசனமில்லை. வாள் வைத்திருந்தவர்களைக் கைது செய்தும் இவற்றை எங்கிருந்து பெற்றனர் என்பதைக் கறக்க முடியாதிருப்பதாக சம்பந்தப்பட்டவர்கள் கையை விரிக்கின்றமை தான் கவலையளிக்கிறது - என்றார்.

கைப்பற்றப்பட்ட சில வாள்களில் "பிரேஸில்" எனப் பொறிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். கருப்பந்தடிகளை வெட்டுவதற்கு கரும்புத் தோட்டங்களில் பாவிக்கும் இவை குடாநாட்டுக் கடைகளுக்கு வெளியிலிருந்து கொண்டு வரப்பட்டே விற்பனை செய்யப்பட்டி ருக்கின்றன. இங்கு இவை 800 முதல் 900 ரூபா வரை விலைபோயின. நட்டாமுட்டித்தனங்களுக்கு இவை பாவிக்கப்படுவதை பத்திரிகைகளில் பார்த்து மிரண்ட கடைக்காரர்கள் இவற்றை தமக்கு தந்தவர்களுடன் தொடர்பு கொண்டு மீளப் பெறக் கோரியும் பயனேதும் இல்லா நிலையில் பயந்து போய் ஒளித்து வைத்திருக்கின்றனர். வாழை வெட்டுவதற்கு எனக் கேட்டு வாங்கியவர்கள் ஆளை வெட்டுவது தான் இந்த பிரேஸில் உபத்திரவத்தை ஒளித்து வைக்கக் காரணமாகிவிட்டதோ?

கத்திக்குத்தும் வாள் வெட்டும் முன்னர் பாரதூரமான குற்றங்களாகக் கருதப்பட்டமையால் இவற்றைக் கட்டுப் படுத்தக் காவல்துறையினரால் முடிந்தது. வில்லுக்கத்தி, கிறிஸ்கத்தியை இடுப்பில் செருகி வைத்திருப்போர் சமூகத்தில் ஒதுக்கப்பட்டனர். சபை சந்திகளிலும் அவர்களை அடுப்பதில்லை. வாள்களுடன் பக்கத்துணைக்கு கத்திகள், கோடரிகள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் பாவனை மேலும் அதிகரித்துச் செல்வதைப் பார்த்தால், வாள் வெட்டுச் சம்பவங்களுக்கென்றே பத்திரிகைகள் தினமும் ஒரு பகுதியை ஒதுக்கலாம் போலுள்ளது.

"குற்றங்களைப் பொலிஸார் வேடிக்கை பார்க்கக் கூடாது" என நாட்டின் அதி உயர் பொலிஸ் அதிகாரி தெரிவித்திருப்பதுதான் கவனத்துக்கு வருகிறது.

*செல்வவேலாயுதம்*


# மங்கலகரமான திறப்பு விழா

சீபேங்க் அசெட் மனேஜ்மன்ட் லிமிடட் இன்
யாழ்ப்பாணப் பிரதேசக் காரியாலயமானது
(Ceybank Asset Management Ltd. Regional Office-Jaffna)
இன்று (27.10.2014) திங்கட்கிழமை
முற்பகல் 10.30 மணியளவில்
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள
இலங்கை வங்கி - அதி மேற்தரக் கிளைக் கட்டடத்தின்
முதலாம் மாடியில் இலங்கைவங்கியின்
பொது முகாமையாளர்,
D.M.குணசேகர அவர்களால்
மங்கலகரமாகத் திறந்து வைக்கப்படும்
என்பதை வாடிக்கையாளர்கள் அனைவரும்
மகிழ்ச்சியுடன்
அறியத் தருகின்றோம்.

Ceybank Asset Management Ltd.
Regional Office - Jaffna.

(53621)(7.6)



# மு/உடையார்கட்டு அ.த.க. பாடசாலையில்

2014ஆம் ஆண்டு தரம் 5 மாணவருக்கான
புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.




| பி.நிலாப்பிரியன் 163 | | செ.தசானிகா 166 | | கி.சாருஜன் 157 | |
|---|---|---|---|---|---|
| ம.தமிழவன் | - 144 | கு.கலையழகன் | - 131 | பா.கலைநிலா | - 122 |
| ந.சிந்துஜன் | - 144 | சு.விதுர்சன் | - 119 | சி.மகிழினி | - 148 |
| ம.இனுசிகன் | - 100 | இ.அனோஜன் | - 133 | சி.டினீசியா | - 149 |
| தி.திருசன் | - 123 | ச.பிரதீஸ் | - 114 | சூ.இசைநிலா | - 126 |
| செ.கவிப்பிரசாத் | - 100 | ச.வர்மிலன் | - 121 | த.வற்சனா | - 120 |
| பா.சுடர்ந்தன் | - 100 | பா.கலைப்பிரியன் | - 125 | ஸ்ரீ.சங்கவி | - 114 |
| பா.ஆர்த்திகன் | - 114 | ச.கொன்சியூஸ்ஜான் | - 126 | சி.ஜெயசுதானி | - 122 |
| கி.கஜேந்திரன் | - 151 | ஞா.சர்மி | - 135 | ர.கேசவன் | - 123 |
| தே.தனஞ்சயன் | - 124 | க.தரணிகா | - 139 | ம.மிதுசன் | - 101 |

வாழ்த்துவோர் :
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
மு/உடையார்கட்டு அ.த.க.பாடசாலை

Best Wishes

(C/17249)(7.6.3)



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



# பாராட்டி வாழ்த்துகின்றோம்




கல்வி அமைச்சினால் 06.10.2014 அன்று
நடைபெற்ற நல்லாசிரியர்களுக்கான
" பிரதீபா பிரபா "
விருதைப் பெற்ற எமது ஆசிரியை
திருமதி பாமினி தனபாலசிங்கம்
அவர்களை பாராட்டுவதுடன்
இவர் மேலும் மேலும் பல
விருதுகளைப்பெற வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்
மு.அனுதர்சன், தி.அபிஷேக், செ. சபர்ணா,
ப.கிஷாளினி, வ. மிதூன், செ.சதுர்ஜன்
(நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை - மாணவர்கள்)

## பஸ் தரிப்பிடத்துக்கு இன்று அடிக்கல் நடல்

கரணவாய், ஒக்.27
நெல்லியடி நகரத்துக்கான புதிய பஸ் தரிப்பிடத்துக்கான அடிக்கல் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நெல்லியடிச் சந்திப் பகுதியில் பழைய பஸ் தரிப்பிடம் அமைந்திருந்த இடத்தில் நடப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தால் ஒதுக்கப்பட்ட சுமார் 35 லட்சம் ரூபா நிதி உதவியுடன் நவீன வசதிகளுடன் இந்த பஸ் தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் பொ.வியாகேசு தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வட மாகாண மீன்பிடி போக்குவரத்துத்துறை அமைச்சர் பொ.டெனீஸ்வரன் மற்றும் பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் எஸ்.கந்தசாமி உட்படப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-108)

## 4 பேரைக் கடித்த நாயின் தலை பரிசோதனைக்கு

வலி.வடக்கு, ஒக்.27
தெல்லிப்பழை சந்தியில் நாயால் கடியுண்ட பொது மக்கள் நால்வர் வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளதுடன் அவர்களை கடித்ததாகக் கூறப்படும் நாய் இறந்த நிலையில் நாயின் தலை வெட்டி கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தெல்லிப்பழை சந்தியில் நடமாடிய நாய் திடிரென அந்தப் பகுதியில் நடமாடியவர்களை கடிக்கத் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் நாயை உரியவர்கள் பிடித்துக் கட்டி வைத்த வேளையில் நாய் இறந்துள்ளது.

நாய் இறந்தமைக்கான தகுந்த காரணம் தெரியவராத நிலையில் நாயினுடைய தன்மையை அறியும் வகையில் தெல்லிப்பழை பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார வைத்தியர்களால் நாயின் தலை வெட்டப்பட்டு கொழும்பு ஆய்வு கூடத்துக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (வ-86)

# மதுவுக்கு எதிரான பேரணி

### நாவாந்துறையில் நேற்று





யாழ்ப்பாணம், ஒக்.27
மதுபாவனைக்கு எதிரான பாடசாலை மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை நாவாந்துறையில் நடைபெற்றது.

கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் சென்.மேரிஸ் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட மதுவுக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அதேசமயம் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டு மைதானத்துக்கு முன்பாக முதியவர்கள் ஒன்று கூடி மதுவுக்கு எதிரான சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'கரையோரப் பகுதிகளில் மது பாவனையை உடன் நிறுத்த வேண்டும். மதுவுக்கு அடிமையானவர்கள் இந்தப் பாவனையை உடன் கைவிட வேண்டும்" போன்ற சுலோகங்கள் அங்கு காணப்பட்டன.

மதுவுக்கு அடிமையாவதால் குடும்பங்கள் இடையே பிணக்குகள், சச்சரவுகள் அதிகரித்துள்ளன. இந்த வகையில் நாம் இன்று இந்த மதுபாவனையை உடனடியாகக் கைவிட வேண்டும் என்ற விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை பிரதேசத்தில் நடத்தப்படும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை தாம் எதிர்காலத்தில் மேலும் முன்னெடுக்கவுள்ளோம்.

தற்போது மதுவுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்துச் செல்கின்றது. இளம்வயதினர் முதல் முதியவர்கள் கூட இந்த மதுபாவனைக்கு அடிமைப்பட்டு வருகின்றனர்.

இதன் பின்னணியில் குடும்பத்தகராறுமற்றும் பிணக்குகளே அதிகரித்துச் செல்வதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முதியவர் ஒருவர் தெரிவித்தார். (வ-17)

## மதுவுக்கு அடிமையானோரில் அதிகமானோர் இளவயதினரே

### உள்ளக மருத்துவ நிபுணர் சிவமோகன் தெரிவிப்பு

தென்மராட்சி, ஒக்.27
யாழ்.மாவட்டத்தில் தற்போது மது பாவனை உச்ச எல்லையைத் தாண்டியுள்ளது. இள வயதினரே மது அருந்துவதில் தீவிர அக்கறை காட்டி வருகின்றனர். சந்தோசத்துக்காக ஆரம்பித்து அதனை இழந்து தவிக்கும் இளம் சமுதாயத்தினரை எம் மத்தியில் காண முடிவதாக உள்ளக மருத்துவ நிபுணர் க.சிவமோகன் தெரிவித்தார்.

சாவகச்சேரி மருத்துவ மனையின் 'குருந்தம்' விடுதியின் ஓராண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. இதன் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:

"தகுந்த கல்விசார் சமூகம் மதுபாவனையில் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான கருத்தரங்குகளை பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை நடத்த வேண்டும். சுகாதாரத் திணைக்களம் அதற்கான அனைத்து வகையிலும் கைகொடுக்கத் தயாராக வேண்டும்.

இளம் சமூகத்தினர் மது பாவனைக்கு அடிமையாவதைத் தடுக்க கல்வித் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் மட்டுமல்ல அனைத்துத் திணைக்களங்களும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். ஆரம்பத்திலேயே இளம் சமூகத்தினர் மது பாவனைக்கு அடிமையாவதைத் தடுக்காது விடின் எதிர்காலத்தில் இந்த மருத்துவமனையில் உள்ளது போல் அனைத்து மருத்துவ மனைகளிலும் 'குருந்தம்' நிலையம் ஆரம்பிக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்படும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சனத்தொகையில் குறைந்தது 75 ஆயிரம் பேர் மது பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

இவ்வாறான குடி நோயாளர்களைக் குணப்படுத்த பயிற்சி பெற்ற வளவாளர்கள் உள்ளனர். ஒரு நோயை ஆரம்பத்தில் குணப்படுத்த பெற்றோர், உளவளர் அக்கறை கொள்வதுபோல் குடிநோயாளர்களை ஆரம்பத்திலேயே இவ்வாறான நிலையத்தில் இணைத்து சமூகத்தில் ஓர் அங்கமாக திகழச் செய்யுங்கள்"- என்றார். (வ-9)

## சாரதி, நடத்துநர்களுக்கு சீருடை விரைவில் அறிமுகம்

### தூர சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்

யாழ்ப்பாணம், ஒக்.27
தூர சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு மிகவிரைவில் சீருடை வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதனைவிட சங்கத்தின் ஊழியர்களுக்கு அடையாள அட்டையும் சீருடையும் தற்போது வழங்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் சி.சிவபரன் தெரிவித்துள்ளார்.

பயணிகளுக்கு இடையில் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்கும் முகமாக இந்த அடையாள அட்டை மற்றும் சீருடைகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய 5 மாவட்டங்களிலும் தூர சேவைகளில் ஈடுபடும் பஸ்களின் உரிமையாளர்களில் பஸ்களின் திருத்தப்பணிகள் மற்றும் இதர தேவைகளுக்காக சுழற்சி முறையிலான வொத்தர் அடிப்படையிலான வட்டியில்லா 50 ஆயிரம் ரூபா கடன் உதவியையும் முதற்கட்டமாக 5 பேருக்கு சங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்தக்கடனை குறித்த 5 மாத காலத்தில் மீளச்செலுத்துவதுடன் அதனைத் தொடர்ந்து ஏனைய உரிமையாளர்களுக்கும் சுழற்சி முறையில் கடனை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்துள்ளது.

42 பஸ் உரிமையாளர் தற்போது சங்கத்தில் இணைக்கப்பட்டுள்ளதால் பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாதவகையில் பஸ்சேவையை வழங்குவதற்கான ஏற்பாடுகளை சங்கம் மேற்கொண்டு வருகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-14)

## முற்றவெளியில் வீசப்பட்ட பொலித்தீன் அகற்றும் பணி



யாழ்ப்பாணம், ஒக்.27
யாழ். முற்றவெளியில் தேங்கிய பல்லாயிரக்கணக்கான பொலித்தீன்களை அகற்றும் பணியில் யாழ்.மாநகர சபைத் தொழிலாளர்கள் நேற்று ஈடுபட்டனர்.

தீபாவளிக்கான நடைபாதை வியாபாரத்தின் போதே இந்த பொலித்தீன்கள் அதிகளவில் தேங்கிக் காணப்படுகின்றன.

சுற்று சூழலுக்கும் சுகாதாரத்துக்கும் பங்கம் விளைவிக்கும் இத்தகைய பொலித்தீன் பைகளை அகற்றும் பணிகள் இன்னும் ஒரு சிலதினங்கள் இடம்பெறும் என்று மாநகர சபைத்தொழிலாளர்கள் தெரிவித்தனர். இந்தப் பொலித்தீன்களை சேகரிப்பதற்கு விசேடமாக கூடைகள் மாநகர சபையால் இந்தப் பிரதேசத்தில் வைக்கப்பட்டன. நடைபாதை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் இந்த சேகரிப்பு தொட்டிகளில் இந்தப் பொலித்தீன்களை போடவில்லை என்று மாநகர சபை சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


பொலித்தீன்கள் கண்டபடி வீசப்பட்டதால் முற்றவெளி பிரதேசம் பொலித்தீன்களால் நிறைந்து காணப்படுகிறது. (வ-17)

## பகலிலும் ஒளிரும் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட வீதி விளக்குகள்

தென்மராட்சி, ஒக்.27
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சபையினரால் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் பகலிலும் ஒளிர்வதைக் காண முடிகிறது.

சபையினால் சுமார் 600 இற்கு மேற்பட்ட வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு பராமரித்து வருவதுடன் அதற்கான மின் கட்டணத்தையும் செலுத்தி வருகிறது. இரவு வெளிச்சத்துக்காக பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகளை காலையில் அணைப்பதற்கு பொதுமக்கள் எவரும் முன் வராத நாள்களில் இரவு பகலாக ஒளிர்ந்தவாறு இருப்பதை தினமும் காண முடிகிறது.

சாவகச்சேரி நகரப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகளில் பெரும்பாலானவை அணைக்கப்படாமல் ஒளிர்ந்த வண்ணம் உள்ளதைக் காணமுடிகிறது.



வீதி விளக்குக்காக மாதாந்தம் பெருமளவு தொகையை மின்கட்டணமாகச் செலுத்துவதுடன் வருடாந்தம் 5லட்சம் ரூபா வரை பராமரிப்பு செலவுக்குப் பயன்படுத்துகிறது.

ஒரு விளக்கு எரியாது விட்டால் வீதியில் உள்ள பலர் நகரசபைக்கு முறைப்பாடு செய்கின்றனர். ஆனால் அதே விளக்கு பகல் இரவாக ஒளிர்வதை எவரும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

குறிப்பாக நகரசபை உறுப்பினர்களோ அல்லது அங்கு பணியாற்றுபவர்களோ பகலில் தெரு விளக்குகள் ஒளிர்வதை அவதானிப்பதில்லை என்பது கண் கூடு. மக்களின் வரிப் பணம் வீணாவதற்கு மக்களின் பங்களிப்பின்மையே காரணம் எனலாம். (வ-9)

# மாவட்ட அலுவலகம் எனும் பெயரில் காணியை அபகரிப்பதற்கு முயற்சி

## முறியடித்து விட்டோம் என்கிறார் மன்னார் நகரசபைத் தலைவர்

மன்னார், ஒக்.27

கைத்தொழில் வாணிப அமைச்சின் மாவட்ட அலுவலகம் என்னும் பெயரில் சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான காணிகளை அபகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார் மன்னார் நகர சபையில்தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம்.

மன்னார் நகரில் அண்மைக் காலங்களாக அரசியல் செல்வாக்கை பிரயோகித்து பெறுமதியான காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகளில் ஒரு சிலர் ஈடுபட்டு வருவதாகவும், இந்த நிலையில் மன்னார் நகரில் உள்ள பெறுமதியான மேற்படி காணிகளை அமைச்சரின் மாவட்ட காரியாலயம் எனும் போர்வைக்குள் அபகரிக்கும் நடவடிக்கை தொடர்பில் மன்னார் நகர மக்கள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்:

"மன்னார் நகரில் புகையிரத நிலைய வீதியில் இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தின் மன்னார் மாவட்ட தலைமை அலுவலகத்துக்கு அருகாமையில் சுமார் 120 பேர்ச் விஸ்தீரணம் கொண்ட காணி உள்ளது. குறித்த காணியில் கடந்த 1986 ஆம் ஆண்டு வரை வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார் டிப்போ காரியாலயம் இயங்கி வந்தது. பின்னர் டிப்போ காரியாலயம் மன்னார்-தாழ்வுபாடு வீதியில் உள்ள பட்டித்தோட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து குறித்த காணி நீண்டகாலமாக கைவிடப்பட்டிருந்தது. பின்னர் இந்த வருட ஆரம்பத்தில் குறித்த காணியில் இராணுவத்தினர் முகாமொன்றை அமைத்து அங்கு நிலை கொண்டிருந்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன் இராணுவச் சிப்பாய் ஒருவர் பனங்கொட்டு காட்டுப் பகுதியைச் சேர்ந்த சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்திருந்த நிலையில் மக்களின் பலத்த எதிர்ப்பை அடுத்து அந்தக் காணியில் இருந்த இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறினர். அதன் பின்னர் சில வாரங்களுக்கு முன் மன்னார் நகர சபை நிர்வாகம் குறித்த காணியைத் தமது பொறுப்பில் எடுத்து நிலையில் குறித்த காணி மன்னார் நகர சபைக்குச் சொந்தமானது என பெயர் பலகையை நடமுற்பட்டது. ஆயினும் இராணுவத்தினரால் அது தடுக்கப்பட்டது.



நிலைமை இவ்வாறிருக்க, கடந்த புதன்கிழமை குறித்த காணிக்குள் அதிகளவான கட்டட நிர்மாணப்பொருள்கள் எடுத்து வரப்பட்டு நகர சபையின் அனுமதியின்றி சுற்று மதில் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது என்று எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அதையடுத்து துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டன.

நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் பணியாளர்கள் குறித்த காணி கைத்தொழில் வாணிப அமைச்சர் ரிஷாத் பதியூதீனின் மன்னார் மாவட்ட அலுவலகம் அமைப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது என்றும், அது தொடர்பான ஆவணப் பிரதியையும் நகர சபை அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர். ஆயினும் சுற்று மதில் மற்றும் ஏனைய கட்டட நிர்மாணப் பணிகளுக்காக மன்னார் நகர சபையின் முறையான அனுமதி பெறப்படாததால் குறித்த காணியில் கட்டட நிர்மாணப் பணிகள் எவையும் செய்ய வேண்டாம் என நகர சபை உத்தியோகத்தர்கள் உத்தரவிட்டனர்.

குறித்த ஆவணம் தொடர்பில் மறுநாள் வியாழக்கிழமை பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில், அமைச்சரின் மாவட்ட காரியாலயத்துக்கு கடந்த 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மன்னார்-தலைமன்னார் (ஏ-14) பிரதான வீதியில் அமைந்துள்ள சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான 40 பேர்ச் காணியொன்று அப்போதைய மனார் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்டுள்ள விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. அத்துடன் மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் வழங்கப்பட்ட 40 பேர்ச் அரச காணியில் இதுவரை அமைச்சரின் மன்னார் மாவட்ட காரியாலயத்துக்கான எந்தவித நிர்மாணப் பணிகளும் மேற்கொள்ளப்படாது நான்கு பக்கத்துக்கும் சுற்று மதில் அமைக்கப்பட்டு இரும்புக்கதவுகள் போடப்பட்டு காணி வெறுமனே பூட்டப்பட்டு அமைச்சரின் சகோதரர் ஒருவரால் பராமரிக்கப்பட்டு வருவதும் தெரிய வந்துள்ளது"- என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் கைத்தொழில் வர்த்தக வாணிப அமைச்சர் ரிஷாத் பதியூதீனைக் கேட்டபோது:

"குறித்த காணி கைத்தொழில் வர்த்தக,வாணிப அமைச்சின் வடமாகாண தலைமை காரியாலயம் அமைப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் எழுதி பிரதேச செயலாளர் ஊடாக குறித்த காணி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எமது அமைச்சினூடாக குறித்த காணியில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள இன்று மன்னார் நகர சபையிடம் அனுமதி கோரி கடிதம் அனுப்பப்படும்.

மன்னார் மூர்வீதியில் வாடகைக்கு சிலிட்டா எனும் பெயரில் அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. தற்போது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள காணியில் ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை, நிறுவனங்களை பதிவு செய்தல், சிலிட்டா போன்ற வேலைத்திட்டங்களை ஒரே அலுவலகத்தின் கீழ் கொண்டு வரும் நோக்குடன் குறித்த காணி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது."- என்று தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் மன்னார் மாவட்ட அரச அதிபர், மன்னார் பிரதேச செயலர் ஆகியோரின் கருத்துக்களைப் பெற முடியவில்லை. (ற-56)

## வன்னோிக்குளம் ம.வியில் ஆசிரியர் பற்றாக்குறை

கிளிநொச்சி வன்னோிக்குளம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட போதும் உரிய ஆசிரியர்கள் இல்லாமையால் உயர்தர வகுப்பு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கவலை வெளியிடப்பட்டுள்ளது. குறித்த பாடசாலையில் க.பொ.த. உயர்தர கலைத்துறை பிரிவு, பலரின் முயற்சிகளால் வட மாகாண கல்வி அமைச்சு மற்றும் மத்திய கல்வி அமைச்சு என்பவற்றின் அனுமதி பெற்று ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களுக்கான தமிழ் பாட ஆசிரியர் நியமனம் செய்யப்படவில்லை. அத்துடன் புவியியல் பாடத்துக்கான ஆசிரியர் வாரத்தில் இருநாள்கள் மட்டும் பகுதி நேரமாகக் கடமையாற்றுகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-86)



வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மன்னார் பனங்கட்டிக்கொட்டு கிழக்கில் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்துக்கு அமைக்கப்படவுள்ள அரைக்கும் ஆலைக்கான (மில்) அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை நடைபெற்றது. சுமார் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள குறித்த அரைக்கும் ஆலைக்கான அடிக்கல்லை வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் வைபவ ரீதியாக நட்டார். அதனைத் தொடர்ந்து பனங்கட்டிக்கொட்டு கிழக்கு மீனவ கூட்டுறவுச்சங்க கட்டடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், அமைச்சருடன் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை,மன்னார் நகர சபை தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம்,உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ்,நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ்,பனங்கட்டிக்கொட்டு மீனவ சங்க தலைவர் எஸ்.ஜஸ்ரின் உட்பட கிராம மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (ற-56)

## மன்னாரில் இருந்து புதிய பஸ் சேவைகள்

### இ.போ.ச. இன்று ஆரம்பிக்கின்றது

மன்னார், ஒக்.27

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலையில் இருந்து மேலும் புதிய மூன்று சேவைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அரச போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலை நேரக் கணிப்பு பொறுப்பதிகாரி எஸ்.எம்.சஞன் தெரிவித்தார்.

மன்னாரில் இருந்து அக்கரைப்பற்றுக்கான சேவை இன்று இரவு 8.15 மணிக்கு மன்னார் சாலையில் இருந்து ஆரம்பமாகும். குறித்த பஸ் மறுநாள் அதிகாலை 3 மணிக்கு அக்கரைப்பற்றை சென்றடையும்.

இரண்டாவது சேவையாக மன்னாரில் இருந்து முல்லைத்தீவுக்கான சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது. காலை 5.15 மணிக்கு மன்னார் சாலையில் இருந்து செல்லும் பயணிகள் பஸ் - வவுனியா சென்று அங்கிருந்து கிளிநொச்சி, பரந்தன் ஊடாக முல்லைத்தீவை மு.ப. 10 மணிக்கு சென்றடையும். குறித்த பஸ் மீண்டும் நண்பகல் 12 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து குறித்த பாதைகளூடாக மன்னாரை வந்தடையும்.

மூன்றாவது சேவையாக மன்னாரில் இருந்து புத்தளத்துக்கான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. மன்னார் சாலையில் இருந்து காலை 5.30 மணிக்கு செல்லும் பயணிகள் பஸ் இலவங்குளத்தினூடாக மு.ப. 11.45 மணிக்கு புத்தளத்தை சென்றடையும். மீண்டும் குறித்த பஸ் நண்பகல் 12.15 மணிக்கு புத்தளத்தில் இருந்து மன்னாருக்கு தனது பயணத்தை தொடரும் - என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலை நேரக்கணிப்பு பொறுப்பதிகாரி எஸ்.எம்.சஞன் தெரிவித்தார். (ற-ரி.56)



## மழைவீழ்ச்சி குறைந்துள்ளதால் அளவான நீர் பாவனை தேவை

### விவசாயிகளிடம் வவுனியா மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் கோரிக்கை

இந்த ஆண்டு காலபோகத்துக்கான பருவமழை ஆரம்பித்துள்ள போதும், நீரேந்து பகுதிகளில் போதியளவு மழைவீழ்ச்சி இன்மையால் நீர்பாசனத்துக்குரிய போதிய நீர் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் விவசாயதிணைக்களவானிலை ஆய்வாளர்களின் ஆலோசனைக்கு இணங்க விவசாயிகள் தற்போதுள்ள நீரைப் பயன்படுத்தி நெல் விதைப்பை ஆரம்பித்து வினைத் திறனான நீர்முகாமைத்துவத்தை மேற்கொள்ள வேண்டும் என்று வவுனியா மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் திருமதி அ.சகீலாபானு கேட்டுக்கொண்டுள்ளார். "இரண்டாவது இடைக்கால பருவபெயர்ச்சி மழை கார்த்திகை மாத பிற்பகுதி வரை பெறப்படும்.வட கீழ்பருவமழை எதிர்வரும் தை மாத நடுப்பகுதிவரைபெறப்படும். 2015ஆம் ஆண்டில் வழமையான மழைவீழ்ச்சி பெறப்படும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளமையால் விவசாயிகள் மழை தொடர்பான ஐயங்களைத் தவிர்த்து தமது வழமையான 2014/2015 காலபோக பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டும் - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-402)

# அரசின் வரவு- செலவு திட்ட அறிக்கையில் அச்சுப் பிழை

## பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம ஒப்புக்கொண்டார்

கொழும்பு, ஒக்.27
வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் அச்சுப் பிழைகள் காணப்பட்டன என்று பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.
அரச நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பிலான அட்டவணையில் பல்வேறு அச்சுப் பிழைகள் காணப்பட்டன என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குற்றஞ்சுமத்தியிருந்தார்.
அதையடுத்தே அந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்வதாக சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.
அட்டவணையில் பில்லியன்கள் என அச்சிடப்பட்டிருந்தன என்றும், உண்மையில் அவை மில்லியன்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். பிழையை சுட்டிக்காட்டியமைக்காக நன்றி பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும், இதனை அச்சகம் மேற்கொண்ட அச்சுப் பிழையாக கருதவில்லை எனவும், ஒவ்வொரு ஆவணத்தையும் நிதி அமைச் சரும் அதிகாரிகளும் சரிபார்த்ததன் பின்னரே இறுதி அச்சிடும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சுனில் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார். (ற)

# இளைஞருக்காகவே வரவு-செலவுத் திட்டம்


## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

இளைஞர்களை இலக்குவைத்தே வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமாகும். நாட்டின் பொருளாதார நன்மைகள் மெது மெதுவாக இளைஞர்களை சென்றடைந்து கிராமம் அபிவிருத்தி அடையக் கூடிய வகையில் அமைந்துள்ளது. கிராமத்தைச் சேர்ந்த பலர் வேலையில்லாப் பிரச்சினை குறித்து முறைப்பாடு செய்துள்ளனர்.
இது குறித்து ஜனாதிபதியிடம் அறிவித்திருந்தேன். கிராம மக்களின் நாடித் துடிப்பை அறிந்த தலைவர் என்ற ரீதியில் இந்தமுறை வரவு- செலவுத் திட்டத்தை சிறந்த முறையில் சமர்ப்பித்துள்ளார். கிராமத்தை மையமாகக் கொண்ட தொழில் வாய்ப்பு உருவாக்கமே ஜனாதிபதியின் திட்டமாக அமைந்துள்ளது. கிராம பொருளாதாரத்தை வலுப்படுத்தி அதன் ஊடாக நாட்டை மேம்படுத்துவதே ஜனாதிபதியின் நோக்கம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஜனாதிபதிக்கே திகா ஆதரவாம்



கொழும்பு, ஒக்.27
அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பிரதியமைச்சர் திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கமும் ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளது.
அந்தச் சங்கம் எடுத்த முடிவை பிரதியமைச்சர் திகாம்பரம் தலைமையிலான தூதுக் குழுவினர், ஜனாதிபதிக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்தனர்.
இது சம்பந்தமான விசேட கலந்துரையாடல் அலரி மாளிகையில் நடைபெற்றது. அதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது என்றும் கூறப்படுகின்றது. (ற)



பௌத்த சமயத்தின் இரண்டு முக்கியமான அம்சங்களைத் 20 ஆம் நூற்றாண்டில் தொடக்கி வைத்ததில் முன்னணி வகித்தவரும், எழுத்தாளருமான அநகாரிக தர்மபாலவின் உருவம் பொறிக்கப்பட்ட முத்திரை, இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியால் இந்திய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமான சாஸ்திரி பவனில் வைத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. (ற)

# எதிர்வரும் தேர்தல் அபாயகரமானதே

## மங்கள சமரவீர கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.27
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மிகவும் அபாயகரமானது என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர. சுதந்திரத்தின் பின்னர் நடைபெறும் மிகவும் மோசமான தேர்தலாகவே இதனை குறிப்பிட வேண்டும். அவசர அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு நாம் கோரவில்லை. அரசே அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த முயற்சிக்கின்றது. - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:
"மக்கள் அரசை நிராகரித்து வருகின்றமையை உணர்ந்து கொண்டதனால் இவ்வாறு முன்கூட்டியே தேர்தல் நடத்தப்படுகின்றது. நீண்ட காலம் எதிர்க்கட்சியாகவே இருக்கும் போது சில முரண்பாடுகள் ஏற்படும் என்பதை மறுப்பதற்கில்லை. அதன் காரணமாகவே கட்சி மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துள்ளன.
இந்த நாட்டைச் சேர்ந்த கட்சி என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உதாசீனம் செய்ய முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியும். இந்தத் தேர்தலை சுலபமாக வெற்றியீட்ட முடியாது.
ராஜபக்ஷ அரசுடன் கடுமையாக மோதியே வெற்றியீட்ட நேரிட்டுள்ளது. நாட்டை பாதுகாக்கவும் பௌதிக ஒருமைப்பாட்டை உறுதி செய்யவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம் என்ற பிழையான நிலைப்பாடு காணப்படுகின்றது.
இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாகவே தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்பதற்கில்லை. மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு அரசினால் தீர்வுத் திட்டங்களை வழங்க முடியவில்லை. சர்வதேச அழுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. எனவே இந்த முறைத் தேர்தலில் ஜனாதிபதியால் வெற்றியீட்டக் கூடிய சாத்தியம் கிடையாது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு சிறுபான்மை கட்சிகளின் ஆதரவும் கிடைக்கப் பெற்றுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# கொழும்பில் டெங்கு அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.27
கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் வீதம் அதிகரித்துள்ளது என்று கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.
மாவட்டத்தில் இடைக்கிடை நிலவும் சீரற்ற காலநிலை டெங்கு நோய் பரவுவதற்கு காரணம் என்று கொழும்பு மாநகர சபையின் தலைமை சுகாதார வைத்திய பரிசோதகர் ருவன் விஜயமுனி குறிப்பிடுகின்றார். கொழும்பு மாவட்டத்தில் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் மூன்றாம் திகதி வரை மாத்திரம் 177 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் தலைமை சுகாதார வைத்திய பரிசோதகர் ருவன் விஜய முனி சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# ஆளும் கட்சி தொகுதி அமைப்பாளருக்கு ரூ.50 லட்சம்

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக ஆளும் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கு முதல் கட்டத்தில் 50 லட்ச ரூபா பணம் வழங்கப்பட உள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட தொகுதி அமைப்பாளர்களுக்கு ஏற்கனவே இந்த பணம் வழங்கப்பட்டுள்ளது.
நவம்பர் மாதத்தில் தேர்தல் பற்றிய அறிவிப்பு விடுக்கப்பட்ட உடன் பரப்புரைப் பணிகளை ஆரம்பிப்பதே ஆளும் கட்சியின் திட்டமாகும். தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக தொகுதி அமைப்பாளர்களுக்கு தலா ஒரு கோடி ரூபா பணம் வழங்கத் தயார் என அண்மையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். ஆளும் கட்சி மிகவும் பிரமாண்டமான அடிப்படையில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

# 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கத் தயார்

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது



கொழும்பு, ஒக்.27
19ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளிக்கத் தயார் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. அரசியல் கட்சிகள் இணங்கினால் நாடாளுமன்றில் விவாதம் நடத்தாமலேயே சட்டத்தை நிறைவேற்ற முடியும் என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.
இதுகுறித்து அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதாவது:
"19ஆம் திருத்தச் சட்டத்தை அரசு அவசர சட்டமாக நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது என்று சில இணைய ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் அதுரலிய ரத்ன தேரரால் இந்த 19ஆம் திருத்தச் சட்டம் குறித்த யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி முறைமையை ரத்து செய்து பிரதமர் பதவியை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமெனவும் ரத்ன தேரர் தனது யோசனைத் திட்டத்தில் பரிந்துரை செய்துள்ளார்.
ரத்ன தேரரின் 19ஆம் திருத்தச் சட்டத்துக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவளிக்கின்றது. அவசர சட்டமாக இதனை நடைமுறைப்படுத்த முயற்சித்தால் ஏனையோரிடம் பேசி இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும். ஏனைய அனைத்துக் கட்சிகளும் இணங்கினால் நாடாளுமன்றில் விவாதம் நடத்தாது சட்டத்தை நிறைவேற்ற முடியும்."- என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை, இணைய தளங்களில் வெளியாகும் கிசுகிசுக்களுக்கு பதிலளிக்க அரசு தயாரில்லை என்று அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் சட்டமொன்றை நடைமுறைப்படுத்த விரும்பினால் அரசு உரிய சட்டங்களின் அடிப்படையிலேயே நடைமுறைப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)



# விலங்குகளுடன் வாழ்க்கை

பிரிட்டன் தம்பதியர் தனது இரு குழந்தைகளுடனும், 145 விலங்குகளுடனும் வசித்து வருகின்றார். பிரிட்டனின் கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஜாமி- மிச்சேல் தம்பதியினருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். இவர்கள் தங்களது வீட்டில் 145 விலங்குகளை வளர்த்து வருகின்றனர். குட்டி முதலை, தேள், தவளை உட்பட பாம்புகளுடன் படுத்து உறங்குகின்றனர். உரிமையாளர்களால் கைவிடப்பட்ட விலங்குகளை எடுத்து பராமரிப்பதற்கென பிரத்தியேக உரிமமும் வைத்துள்ளார் ஜாமி.

விலங்குகளின் நாற்றம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக தினமும் வீட்டை சுத்தம் செய்வதுடன், விரைவில் குட்டி அருங்காட்சியகம் ஒன்றை தொடங்க உள்ளதாகவும் ஜாமி தெரிவித்துள்ளார்.

# மறந்துபோன நடிகை



நடிகை ஸ்ரேயாவை தமிழ்த் திரையுலகம் மறந்து விட்டாலும், தெலுங்குத் திரையுலகம் அவரை மறக்காமல் 'மனம்' படம் மூலம் மீண்டும் ஒரு மறுவாழ்வைக் கொடுத்திருக்கிறது. 'எனக்கு 20 உனக்கு 18' படத்தில் அறிமுகமானாலும் ஜெயம் ரவி நடித்த 'மழை' படம் மூலம்தான் யார் இவர் என தன்னைப் பற்றிப் பேச வைத்தார்.

அதன் பயனாக ரஜினிகாந்த் நடித்த 'சிவாஜி' படத்திலும் நாயகியாக நடித்து நடிப்பிலும், நடனத்திலும் அந்தப் படத்தில் அசத்தியிருந்தார். விஜய் நடித்த 'அழகிய தமிழ் மகன், விஷால் நடித்த 'தோரணை', தனுஷ் நடித்த திருவிளையாடல் ஆரம்பம், விக்ரம் நடித்த 'கந்தசாமி' உட்பட பல படங்களில் நாயகியாக நடித்தவர், வடிவேலு நடித்த இந்திர லோகத்தில் நா.அழகப்பன் படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடியதைத் தொடர்ந்து நாயகர்களும், இயக்குநர்களும் அவரை கைகழுவி விட்டனர்.

அதன் பின் அவரால் தமிழ்த் திரையுலகில் பெரிதாக ஜொலிக்கவே முடியவில்லை. இருந்தாலும் மனம் தளராமல் முயற்சிகளை மேற்கொண்ட ஸ்ரேயாவுக்கு சில மாதங்களுக்கு முன் வெளிவந்த 'மனம்' படம் தெலுங்கில் மீண்டும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

நடிக்க ஆரம்பித்து 13 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் அதே ஒல்லியான தோற்றத்துடனும், பொலிவான அழகுடனும் ஸ்ரேயா இருப்பதற்கு என்ன காரணம். தினமும் பவர் யோகா, நடனப் பயிற்சி ஆகியவற்றை செய்யத் தவறுவதில்லை. அத்தோடு உணவையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டுள்ளார்.

அதனால்தான் அன்று முதல் இன்று வரை ஒரே மாதிரி இருக்கிறேன் எனச் சொல்லியிருக்கிறார் ஸ்ரேயா. தற்போது 'கோபாலா கோபாலா' என்ற ஒரே ஒரு தெலுங்குப் படத்தில் மட்டுமே நடித்து வரும் ஸ்ரேயாவுக்கு தமிழ்த் திரையுலகம் மீண்டும் கதவைத் திறக்குமா...?

# கூகுளில் கலக்கும் தமிழன்




கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி லார்ரி பேஜ் ஜிடமிருந்த முக்கியமான பொறுப்புக்கள் பலவும் அண்ட்ரொய்ட் பிரிவை நிர்வகிக்கும் சுந்தர் பிச்சையிடம் கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளன.

சென்னையைச் சேர்ந்த பிச்சை சுந்தர்ராஜன் (வயது-42), சுந்தர் பிச்சை என்ற பெயரால் புகழடைந்தவர். முன்னணி நிறுவனமான கூகுளில் இவர் 2004 ஆம் ஆண்டுதான் வேலைக்குச் சேர்ந்த போதிலும், திறமை காரணமாக உயர் பதவிகளை விரைவாகவே எட்டிப்பிடித்தார்.

கூகுளின் முக்கியமான தயாரிப்பான அண்ட்ரொய்ட் பிரிவை நிர்வகிக்கும் பொறுப்பு பிச்சையிடம் அளிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி குரோம், கூகுள் அப்ஸ் ஆகியவற்றையும் பிச்சை தான் நிர்வகித்து வருகிறார்.

தற்போது இவற்றுக்கு மேலாக, கூகுள் மப்ஸ், கூகுள் பிளஸ், ஆய்வு, விளம்பரம் மற்றும் கட்டமைப்பு ஆகிய பிரிவுகளும் பிச்சையின் பொறுப்பிலேயே கொடுக்கப்பட்டுள்ளன.

புதிதாக வழங்கப்பட்டுள்ள பிரிவுகளில் பணியாற்றும் ஊழியர்கள், தற்போது சுந்தர் பிச்சையின் கட்டுப்பாட்டில் வேலை பார்க்கிறார்கள்

# நச்சின்னு கடி



அதிபர்: ஏண்டா பாடசாலைக்கு பிந்தி வாறாய்?

மாணவன் : சைக்கிள் காற்றுப் போய்விட்டது. அதுதான் வரப் பிந்தி விட்டது.

அதிபர் : பஸ்ஸில் வரலாம் தானே,

மாணவன் : பஸ்ஸில் போகலாம் என்று சொன்னா... உங்கள் பொண்ணு கேட்க மாட்டேன் என்குது.

அதிபர்:?????

கடவுள் : உன் தவத்தை மெச்சினேன் ஏதாவது 2 வரம் கேள்.

பக்தன் : நான் தூங்கும்போது சாக வேண்டும்

கடவுள் : ஆகட்டும். மற்றொரு வரம்?


பக்தன் : எனக்கு தூக்கமே வரக் கூடாது

கடவுள் : ?????

அமைச்சர் : மன்னா எதிரி நாடு மன்னன் உங்களை 'போருக்கு' அழைக்கிறார்.

மன்னர் : போருக்கு வரமுடியாது, வேண்டுமானால் 'பாருக்கு' வரச் சொல்லு. அடிச்சுப் பாக்கலாம்

அமைச்சர் :?????




# இறந்த இதயம் மீண்டும் துடித்தது



இறந்து போன இதயத்தை மீண்டும் உயிர்ப்பித்து மற்றொரு நோயாளிக்கு வெற்றிகரமாக பொருத்தி மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர். ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள செயின்ட் வின்சென்ட் மருத்துவமனை மருத்துவர்களே இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர். கடந்த இரண்டு மாதங்களில் இதுபோன்று இரண்டு சத்திர சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. இறந்த ஒருவரின் இதயத்தையும் உயிர்ப்பித்து மாற்று சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்த முடியும் என்று இதன் மூலம் நிரூபிக்கப்பட்டமை, மருத்துவ உலகின் புதிய மைல்கல்லாகும். இதுவரையிலும் மூளைச்சாவு அடைந்த ஒருவரிடமிருந்தே உயிர் உள்ள இதயம் பெறப்பட்டு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஆணாதிக்கத்தில் இன்றும் பெண்கள்



சோபனா

பெரும்பாலும் சரித்திரங்களில்,இலக்கியங்களில், பெண்கள் மென்மையானவர்கள், இளகிய மனம் உடையவர்கள் என்று கூறப்படுகின்றனர். அதே சமயம் பெண்களின் மனதின் ஆழத்தை அறிய முடியாது. மனவலிமை உடையவர்கள் பெண்கள் என்றும் கூறப்பட்டிருக்கின்றன. ஆண், பெண் உறவுகள், ஆணாதிக்கம் பெண்ணின் பெருமை, தாய்மையின் சிறப்பு இவற்றை பற்றி வெளிவராத கருத்துக்களும் இல்லை. அந்தளவுக்கு பெண் எப்போதும் வேறுபடுத்திப் பேசப்படுகிறாள். இதற்கு கால மாற்றங்களை எம்மால் வரையறுத்துக் கூற முடியாது. காரணம் ஆணாதிக்கத்தில் பெண் எப்போதுமே வேறு பட்டவள் தான்.

பெண்களும், ஆண்களும் ஒருவருக்கொருவர் வித்தியாசமானவர்கள். பெண்களை ஆண்தள், மலரே, கொடியே, என்று வர்ணித்தாலும், அடிப்படையில் பாலியல் உணர் வில் பெண்களை போக பொருளாக கருதி பெண்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைக்கவே பெண்கள் கற்புடன் வாழ வேண்டும் என்று ஆண்கள் வலியுறுத்துகிறார்கள்.

ஆராய்ந்து சொன்னால் ஒரு பெண் மனைவி தன் கணவனிடத்தே அன்னை போன்ற கருணை உடையவளாய் இருக்க வேண்டும் வேலைக்காரி போல் பணிந்து சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும். ஸ்ரீதேவி போன்ற முகவிலாசம் உள்ளவளாக இருக்க வேண்டும். பூமாதேவியைப் போன்று பொறுமை உள்ளவளாக இருக்க வேண்டும். சிறந்த மந்திரி போலத் துன்ப காலங்களில் சிறந்த யோசனைகள் சொல்ல வேண்டும். அந்தந்தக் காலப்பகுதியில் அவளுக்கு கொடுக்கப்படும் வேடங்களை அவள் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

பெண்கள் அதிகம் பேசக் கூடாது என்கிறது நியதி. ஒரு பெண் உரத்துப் பேசினால் பெரிய இந்த பூமி அதிரும். இரண்டு பேர் சேர்ந்து அவ்வாறு பேசினால் வானத்து நட்சத்திரங்கள் உதிர்ந்துவிடும்; மூன்று பேர் சேர்ந்து அவ்வாறு பேசினால் கடலலைகள் வற்றிவிடும்; பல பெண்கள் சேர்ந்து பேசினால் உலகம் என்னாகுமோ? எனும் நிலைப்பாட்டில் பெண்களைப் பேசுவதற்கு கூட ஒரு வரையறையை வழங்கியிருக்கிறார்கள்.

சமயவாதிகளும் தங்களது சமயப்போதனைகள் மூலம் பெண்களைப் பிற்பட்டவர்களாக வும், வலுவற்றவர்களாகவும் உருவகித்துக் காட்டியுள்ளனர். தாங்கள் தாழ்ந்தவர்கள் என்ற உளப்பாங்கைப் பெண்களிடையே தோற்றுவித்தனர். ஆணாதிக்கத்தை நிலை நிறுத்தக் கணவனைத் தலைவன் எனவும் கடவுள் எனவும் மிகைப்படுத்திக் கூறி யுள்ளனர். இதனாலேயே பெண்கள் காலம் தொட்டு ஆண்களுக்கு அடிமைப்பட்டவர் களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கணவனைத் தலைவன் என்று கூறியவர்கள் மனைவியைத் தாதி என்றும், ஊழி யக்காரி என்றும் வர்ணித்து என்றென்றும் தங்களது ஆணாதிக்கம் நிலைபெற வேண்டு மென்ற எண்ணத்தில் பெண்களை அடக்கி ஆள நினைக்கிறார்கள்.

தாயாக, தாதியாக, சகோதரியாக, மனைவியாக, தந்தை; தாய்க்கு பெண் மகளாக, இல்லத்தரசியாக ஒவ்வொரு நிலையிலும் பெண்ணானவள் திகழ்கிறாள். இவளுக்கு கொடுக்கப்பட்டுள்ள நிலைகளை ஆணாதிக்கம் கொண்ட சமூகத்தினர் தமக்கேற்றால் மாற்றியமைத்து பெண்களை தம் வசப்படுத்துகின்றனர் என்று தான் கூற வேண்டும். இதனையும் மீறி பெண்ணானவள் மீண்டு தனக்கேற்ற முறையில் வாழ நினைத்தால் அவளுக்கு வேற்றுப்பெயர்களைக் கொடுப்பதும் எமது சமூகம் தான். அன்றும் இன்றும் பெண்கள் எப்போதும் ஆணாதிக்கத்தில் அடக்கப்பட்ட சமூகத்தினர் தான்.

## பெண்ணைப் போற்றுவோம்

பெண் பத்திரமாகத்தான்
இருப்பாள்
இடையூறாய் நீயில்லாதபோது
பெண் சுதந்திரமாய்த்தான்
இருப்பாள்
அடிமையென நீ
ஆட்கொள்ளாதபோது

பெண் போற்றும்படிதான்
நடப்பாள்
நயவஞ்சகனாய்
நீயில்லாதபோது
பெண் வீட்டுக்குள்ளேதான்
கிடப்பாள்
மதுக்கடிமையாய் நீயில்லாத
போது

பெண் ஏமாறாமல்தான்
இருப்பாள்
ஏமாற்றுக்காரனாய்
நீயில்லாதபோது
பெண் அடக்கமாகத்தான்
இருப்பாள்
அக்கிரமகாரனாய்
நீயில்லாதபோது ...

மென்மையான பெண்மை
–உன்
வஞ்சகமான வன்மையிடம்
வசப்படுகிறது வசப்பட
வைக்கவே
அன்றாடம் துடிக்கிறாய்

நித்தம் நித்தம் தொடர்கிறாய்
நிதானமான பெண்ணைக்கூட
நிமிர்ந்துப் பார்க்க வைக்கிறாய்
சாதுவான பெண்ணையும்

சாதிக்கதுடிக்க பெண்ணையும்
சம்மதித்தால் காதலைசொல்லி
கொல்கிறாய் இல்லையேல்
கல்லைக்கொண்டு
கொல்கிறாய்

காவலனாய் நீ வேண்டாம்
கள்வனாய் இராதே
தமையனாய் நீ வேண்டாம்
தகராறு செய்யாதே



# பெண் என்பவள் யார்?

சங்கவி



ஒரு பெண் என்பவள் இயற்கையின் மிக அழ கான படைப்புக்களில் ஒன்றாவாள். அவள் விட்டுக்கொடுத்தலை மிகச்சிறியவயதிலேயே செய்யத் தொடங்கி விடு கிறாள், அவள் தன் தாய் தந்தை, சகோத ரிக்காக குடும்ப சூழ் நிலையால்...... பின் தன் காதலை தன் குடும்ப நிலையை எண்ணி தியாகம் செய் கிறாள்.

இவளது தியாகங்கள் வாழ்க்கையின் ஆரம் பமாக இருக்கும். ஆனால் அவளது தியாகங்களை யாரும் மதிப்பதற்கு முன்வருவதில்லை. காரணம் அவள் பெண்.

தன் கணவனின் ஆசைகள் மற்றும் குழந்தைகளுக்காக படிப்பு, திருமணம் என எந்தவித குறையும் இல்லாமல் வைக்க தன்னையே தியாகம் செய்கிறாள். ஆண்களைவிட குடும்பப் பொறுப்பில் முக்கால் பங்கை அவள் பொறுப்பேற்கிறாள் என்று தான் கூற வேண்டும். ஆனால்; அவள் மிகவும் கஷ்டப்பட்டாலும், தன் தந்தை, கணவன் என ஆண்கள் வர்க்கத்தின் திட்டுக்களுக்கும் வன்முறைகளுக்கும் கட்டுப்பட்டு பேசாமடந்தையாக இருக்க வேண்டும்.

எல்லாத் தந்தையும், கணவனும்.; அவளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முயற்சிக்கின்றனர். இறுதியில் மற்றவர்களின் சந்தோஷத்துக்காக விட்டுக்கொடுத்துக் கொண்டிருப்பதன் மூலம் அவள் வாழ்க்கை முடிகிறது.

ஆண்கள் உங்கள் வாழ்வில் ஒவ்வொரு பெண்ணையும் மதியுங்கள். அவள் உங்களுக்காக என்ன தியாகம் செய்துள்ளாள். அவளுக்கு தேவைப் படும்போது உங்கள் கரங்களை நீட்டுங்கள். அவளிடமிருந்து இருமடங்காக நீங்கள் அன்பைப் பெறுவீர்கள். பெண்களுக்கும் உணர்வுகள் உண்டு. அதையும் மதியுங்கள்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசியல் வானில் திடீர் திருப்பம் ஏற்பட வாய்ப்பு

2015 ஆம் ஆண்டு ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது என்ற தீர்மானத்தை மனதில் இருத்தி, வழக்கத்தைவிட இரண்டு வாரங்கள் முன்கூட்டியே வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஆசை யாரை விட்டது? புத்தமத தத்துவங்களை அப்படியே அச்சொட்டாகக் கடைப்பிடிப்பதுபோல் காட்டிக் கொள்ளும் அரசியல்வாதிகளில் அனேகர் நடைமுறையில் ஆசாபாசங்களுக்கு அடிமைகளாகவே இருக்கிறார்கள். அதனை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அவர்களின் வரிசையில் இன்று இந்த நாட்டு ஜனாதிபதியும் ஒருவராகக் காணப்படுகின்றார்.

பகவான் புத்தர், தந்தைக்குப் பின்னர் ஒரு சாம்ராஜ் யத்துக்கே சக்கரவர்த்தியாக முடிசூட்டிக்கொள்ளக்கூடிய வாய்ப்பு வசதிகளைப் பெற்றிருந்தபோதும் அவைகளை துச்சமென ஒதுக்கி ஆசாபாசங்களுக்கு விடைகொடுத்து விட்டு ஆடை அணிகலன்களைத் துறந்து தலையை மழித்து காவியுடை தரித்து உலகத்தை நல்வழிப்படுத்தும் ஞானியாக மாறினார்.

ஆனால் அதே மகானை வழிபடுகின்ற அவர் வழியில் செல்கின்றவர்களான சமயவாதிகள் அரசியல் சகதிக்குள் முற்றுமுழுதாக இறங்கி திக்குமுக்காடி நிற்கிறார்கள். இதில் இந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதியின் நிலை எப்படி இருக்கிறது? பௌத்த தர்மம் முறையாக இங்கு பேணப்படுவதாக அவர் அவ்வப்போது எடுத்து விளாசுவது வழக்கம். அப்படியானவர்தான் இரண்டுமுறை இந்த நாட்டை நிறைவேற்று அதிகாரங்களுடன் ஆட்சி புரிந்துவிட்ட நிலையில் இன்னுமொரு முறையும் அந்த அதிகாரங்களை வைத்துக்கொண்டு ஆட்சி புரிய ஆசைப்படுகிறார் - அந்தரப்படுகின்றார்.

அரசமைப்பின்படி இரண்டுமுறையே ஜனாதிபதியாக ஒருவர் இருக்கலாம் என்பதை நீக்கிவிட்டு எத்தனை தடவையும் அதில் அமர்ந்துகொள்ளும் 18 ஆவது திருத்தத்தின் மூலம் வழிசெய்துகொண்டார். இப்போது அவரது இப்போதைய பதவிக்காலம் முடிவடைய இன்னும் ஏறக்குறைய இரண்டு வருடங்கள் பாக்கியிருக்கும் நிலையில் மூன்றாம் தடவையும் அதிகாரத்தில் அமர்வதற்கு ஆசை கொண்டு முன்கூட்டியே ஜனாதிபதிக்கான தேர்தலை நடத்த அவசரப்படுகிறார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை மனதில் வைத்துக் கொண்டே வரவு - செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் என்ற முறையில் தயாரித்து தாக்கல் செய்துள்ளார் என்று எதிர்க் கட்சிகள் பலவும் குற்றஞ்சாட்டியுள்ளன. சமூகத்தின் சகல பிரிவினரையும் ஏதோ ஒரு வகையில் திருப்திப்படுத் தும் வகையில் அறிவிப்புக்களையும் சலுகைகளையும் வெளிப்படுத்தியுள்ளார். அறிவிக்கப்பட்டுள்ள பலவும் நடைமுறையில் சாத்தியப்படுவது துர்லபம் என்கிறார்கள் விமர்சகர்கள்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாக மஹிந்த சிந்தனை மூலம் அறிவித்துக் கொண்டு பதவிக்கு வந்தவர், அந்த அதிகாரங்களையே இன்னும் வலுப்படுத்திக் கொண்டுள்ளார் என்றால் - வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவை அனைத்தும் நிறைவேற்றப்படுவது எங்ஙனம் என்பது அவர்களின் கேள்வியாகவுள்ளது.

ஆகவேதான், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் அரசமைப்பிலுள்ள நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஒரு தடவை அந்தப் பதவிக்கு போட்டியிடுவது சட்டவிரோதம் என்று கூறி நீதிமன்றத்துக்குப் போகவிருப்பதாக ஜனதா விமுக்தி பெரமுன சூளுரைத்துள்ளது. அவ்வாறான ஒரு நிலையில் நீதிமன்றத் தீர்ப்புவரும் வரை தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டிய ஒரு கட்டாயமும் ஏற்படலாம். அதுபோக ஆளும் தரப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஜாதிக ஹெல உறுமய 19 ஆவது திருத்தம் என்ற முறையில் ஒரு திட்டத்தை முன்வைத்து ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் அது நிறைவேற்றப்பட வேண்டும், இல்லையெனில் அரசிலிருந்து வெளியேறப்போவதாக அறிவித்து பரப்புரையில் இறங்கியிருக்கிறது. அந்தக் கட்சியைப் பொறுத்தவரை ஜனாதிபதியானவர் தமது ஜாதகக் குறிப்பின் பிரகாரம் அவசரப்பட்டு தேர்தலை நடத்த முற்படுகிறார் என்பதும் ஒரு குற்றச்சாட்டு.

கடந்த வாரம் அந்தக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் அதன் பிரமுகர்களில் ஒருவரான வண.அத்துரலியே ரத்ன தேரர் பேசியபோது; அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் தனிப்பட்ட ஒரு மனிதரின் ஜாதகமா அதிகவலுவுள்ளது அல்லது இந்த நாட்டின் 2 கோடி மக்களின் ஜாதகமா அதிக வலுவுடையது என்பது தெளிவாகி விடும். இலட்சக் கணக்கான இந்த நாட்டு மக்களின் ஜாதகம் தான் அந்த ஒரு மனிதரின் ஜாதகத்தை விட பலமானது என்று சோதிடர்களுக்குக் கூறிக்கொள்கிறோம் என்று குறிப்பிட்டார்.

ஜாதிக ஹெல உறுமய முன்வைத்துள்ள திட்டப்படி நிறைவேற்று அதிகாரமுறை ஒழிக்கப்படும் வகையில் 19 ஆவது திருத்தம் ஒன்றை அரசு நிறைவேற்ற முன்வந்தால் அதற்கு ஆதரவளிப்பதாக ஐ.தே.க. அறிவித்துள்ளது. இந்த முறையானது நாட்டுக்கும் நல்லாட்சிக்கும் குந்தகமாக இருந்துவருகின்றது என கருதும் ஏனைய பல கட்சிகளும் அதற்கு ஆதரவு வழங்குவது சாத்தியமே. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ அதில் மனம் வைக்க வேண்டும். எதுவானாலும் அந்த வகையில் எதிர்வரும் நாள்களில் சிலபல அரசியல் திருப்பங்களை எதிர்பார்க்கலாம் என்று தோன்றுகிறது.

# எதிரணியினர் சிறுபான்மையினரை அரவணைக்க வேண்டிய தருணமிது

சேரலாதன்

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைக் கொல்வதற்கு அந்த இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மாத்தயாவுக்குத் தமது கட்சியின் சார்பில் ஆயுதங்கள் வழங்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரான சஜித் பிரேமதாஸா தெரிவித்துள்ளார். இதன் உண்மைத் தன்மையை உறுதிசெய்து கொள்ள இயலாது என்றாலும் - பெரும்பான்மையின வாக்காளரைக் கவரும் விதமாகவே சஜித் இதனைத் தெரிவித்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. தனது தந்தையாரான முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸாவின் மரணத்துக்கு விடுதலைப்புலிகளே காரணமென்பதை அவர் அறிந்திருப்பதால் புலிகள் மீதான வெறுப்பும், கோபமும் இன்னமும் அவரது மனதை விட்டு அகலவில்லை.



மறைந்த பிரேமதாஸா இன்னுமொரு முன்னாள் ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் வழிகளைப் பின்பற்றி புலிகளை அழித்து ஒழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை எதற்காக ஏந்தினர்கள் என்பதை இவர் ஒருபோதுமே எண்ணிப் பார்த்ததில்லை. மாறாக பெரும்பான்மை மக்களிடையே இனவெறிக் கருத்துக்களை விதைப்பதில் அவர் குறியாகக் காணப்பட்டார். இந்தியப்படைகள் இங்கு காலூன்றி நிற்பதை விரும்பாத பிரேமதாஸா அவர்களுடன் போரிட்டுக் கொண்டிருந்த புலிகளுக்கு ஆயுதங்களையும் பிற உதவிகளையும் வழங்கியமை வேறுவிடயம்.

தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு பண்டார நாயக்கவின் ஆட்சிக் காலத்திலே பிள்ளையார் சுழி இடப்பட்டுள்ள போதிலும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே இவை உச்சக் கட்டத்தை எட்டின. 1983ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலை இன்னமும் தமிழர்களின் மனங்களை விட்டு அகலவில்லை.

இதனால் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் தமது அவலங்களும், துன்பங்களும் அகலப் போவதில்லை என்பதைத் தமிழ் மக்கள் நன்றாகவே புரிந்துகொண்டுள்ளனர்.

கடந்த 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாததொரு இக்கட்டான சூழ்நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருந்திருக்கிறார். 'ஹெல்ப்பிங்



அம்பாந்தோட்டை' அமைப்புத் தொடர்பான வழக்கில் அவர் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுச் சிறைச்சாலைக்குச் சென்று விடுவார் என்ற நம்பிக்கையும் அப்போது காணப்பட்டது. ஆனால் அவர் அதிலிருந்து தப்பித்துக் கொண்டார். இந்த வழக்கை விசாரித்த முன்னாள் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசரான சரத் என் சில்வா - மஹிந்தரைச் சிறைக்கு அனுப்பாததையிட்டுத் தாம் வருத்தமடைவதாக இப்போது கூறி வருகிறார். இவரது கூற்று பலத்த வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பியுள்ளது.

இந்த நிலையில் 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியின் விளிம்புவரை சென்ற ரணில் விக்கிரமசிங்க இறுதி நேரத்தில் அந்த வாய்ப்பை நழுவவிட்டார். விடுதலைப்புலிகளின் வெறுப்பை அவரும் அவர் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சியும் சம்பாதித்துக் கொண்டமையே இதற்கான பிரதான காரணமாகும். புலிகளைப் பிளவுபடுத்தி அந்த இயக்கத்தின் இரண்டாவது நிலைத் தலைவராகவிருந்த கருணா அம்மானை புலிகளிடமிருந்து காப்பாற்றி பாதுகாப்பாகக் கொழும்புக்கு அனுப்பி வைத்தது தாமேயென ரணில் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்கள் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பகிரங்கமாகத் தெரிவித்து வந்தமை புலிகளைக் கடுமையாகச் சீற்றமுற வைத்தது.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்த ரணிலைப் பழிவாங்குவதற்கான சந்தர்ப்பத்துக்காக அவர்கள் காத்திருந்தனர். 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் இதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்கியது.

அந்தத் தேர்தலில் தமிழ் வாக்காளர்களின் ஆதரவுடன் வெற்றிபெற்று விடுவேன் என்ற நம்பிக்கையிலிருந்த ரணிலின் கனவைத் தகர்க்கும் வகையில் புலிகள் அறிவிப்பொன்றை விடுத்தனர். இந்த அறிவிப்பை ஏற்று வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் ஒட்டு மொத்தமாக அந்தத் தேர்தலைப் புறக்கணித்தனர். இதனால் பயனடைந்த மஹிந்த ராஜபக்ஷ சொற்ப அளவான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். 'நுணலும் தன் வாயால் கெடும்' என்பதற்கு இதுவொரு சிறந்த உதாரணமாகும்.

தற்போதும் புலிகள் இல்லாதபோதிலும் தமிழ் மக்கள் அவர்களை முற்றாக மறந்து விட்டதாகக் கூற முடியாது. ஆகவே தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானால் சஜித் பிரேமதாஸா போன்றவர்கள் தமது நாவை அடக்கியே தீரவேண்டும். எவர் எதைக் கூறினாலும் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் இடம்பெறுவது உறுதியாகிவிட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டுமொரு தடவை பதவிக் கதிரையில் அமர்வதற்கான காய் நகர்த்தல்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். ஆனால் சுதந்திரமாக இயங்கக் கூடிய பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு என்பன அமைக்கப்படாத நிலையில் இந்தத் தேர்தல் நீதியாகவும் நியாயமாகவும் இடம்பெறுமா என்பதில் சந்தேகம் நிலவுகின்றது. கடந்த காலங்களிலும் இந்த நிலையே காணப்பட்டது.

தற்போது தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காகவாவது சிறுபான்மையின மக்களை அரவணைத்துச் செல்ல வேண்டிய தேவை பிரதான கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதை உணர்ந்து கொண்டதாலோ என்னவோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் வடபகுதிக்கு வந்து சென்றிருக்கிறார். விரைவில் கிழக்கு மாகாணத்துக்கும் அவர் செல்லவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றுத்தான் ஆக வேண்டுமென்றதொரு நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது. ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியதொரு இக்கட்டான சூழ்நிலையில் அவர் காணப்படுகின்றார். இதைவிட உள்நாட்டிலும் மக்களிடையே அதிருப்தியும் வெறுப்பும் அரசின் மீது அதிகரித்துக் காணப்படுகின்றது. அண்மையில் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் மூலமாக சாமானிய மக்களும் சரி, அரச மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களும் சரி அதிக நன்மையடையப் போவதாகத் தெரியவில்லை. வரவு - செலவுத்திட்டத்தின் உள்ளடக்கத்தில் ஏதோ மாயா ஜாலங்கள் காட்டப்பட்டுள்ள போதிலும் வெளிப்படையாகப் பார்க்கும் போது மக்களுக்கு நன்மை அளிக்கும் திட்டங்களைக் காணவில்லை.

எதிர்க்கட்சியைப் பொறுத்தவரையில் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பம் ஒன்று இப்போது வாய்த்துள்ளது. ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளும் தலைமை மீதான அதிருப்தியும் இதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளன.

இந்த நிலையில் சஜித் பிரேமதாஸா போன்றவர்கள் சிறுபான்மை மக்களை வெறுப்பேற்றும் வகையில் கருத்துக்கள் வெளி யிடுவது பாதிப்பையே ஏற்படுத்தும். இவரைப் போன்றவர்கள் 2005ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஏற்பட்ட விரும்பத்தகாத அனுபவத்தை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதனைச் செய்வதற்கு இவர்கள் தவறுவார்களாயின் வாழ்நாள் முழுவதுமு எதிர்க்கட்சியிலேயே காலத்தை கடத்த வேண்டிய நிலையே ஏற்படும்.



# மலர்ந்தது இஸ்லாமிய புத்தாண்டு

இஸ்லாமிய புதியதொரு வருடமான முஹர்ரம் மாதத்தை முதலாகக் கொண்டு ஆரம்பிக்கும் இஸ்லாமியப் புத்தாண்டு தூய பிரகடனத்தை ஒவ்வொரு முஸ்லிமுக்கும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது. நடப்பு வருடத்தில் செய்த பாவங்களையும் தவறுகளையும் எண்ணி மனம் வருந்தி அவற்றுக்காக அல்லாஹ்விடத்தில் மன்னிப்புக்கோரி அவற்றை அழித்துவிட்டு புதியதொரு வருடத்தை ஈமானிய உணர்வுகளோடு வரவேற்று இஸ்லாத்துடன் பின்னிப்பிணைந்த வாழ்க்கைக்கான திட்டத்தை தீட்டிக்கொள்ளவேண்டிய தருணம் இது.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவில் குடியேறிய நிகழ்ச்சியை (ஹிஜ்ரத்தை) அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களின் வருடக்கணக்கு கணிக்கப்பட்டுள்ளது. எனவே இதனை ஹிஜ்ரி என்று அழைக்கின்றனர். அல்லாஹ்வின் அருட்கொடையால் நாம் ஹிஜ்ரி 1435ஐ கடந்து ஹிஜ்ரி 1436 இல் காலடி வைக்கிறோம்.

ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே வருடத்தின் ஆரம்ப மாதமாக முஹர்ரம் கணிக்கப்படுகிறது. ஆங்கில, தமிழ், சிங்கள வருடங்கள் சூரிய சுழற்சியைக் கொண்டு கணிக்கப்பட்டாலும் சந்திர சுழற்சியின் மூலமாகவே முஸ்லிம்களின் வருடங்கள் கணிக்கப்படுகின்றன. இது இஸ்லாமிய வருடத்தின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. ஆனால் அனைத்தும் 12 மாதங்களைக் கொண்டவை.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது யூதர்கள் ஆஷுரா தினத்தில் நோன்பு நோற்பதைக் கண்டார்கள். நபியவர்கள் அவர்களிடத்தில் நீங்கள் நோற்கின்ற இந்த நோன்பு எந்த நாள் என்று வினவினார். அதற்கு அவர்கள் "இது ஒரு புனிதமான நாளாகும். இதில் அல்லாஹ் மூஸா(அலை) அவர்களையும் அவர்களது சமுதாயத்தினரையும் ஃபிர் அவ்னிடமிருந்து காப்பாற்றினான். மேலும், ஃபிர் அவ்னையும் அவனது கூட்டத்தினரையும் கடலிலே மூழ்கடித்தான். இதனால் மூஸா(அலை) அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் முகமாக அந்த நாளில் நோன்பு நோற்றார்கள். ஆகையால் நாங்களும் நோன்பு நோற்கின்றோம்" என்றார்கள்.

மூஸாவை பின்பற்றுவதற்கு உங்களைவிட நாமே தகுதியானவர்கள் என்று கூறி, நபி (ஸல்) அவர்களும் நோன்பு நோற்று பிறரையும் நோன்பு நோற்க ஏவினார்கள். முஸ்லிம்கள் அனைத்து விடயங்களிலும் யூதர்களுக்கு மாற்றமாக தங்களது நடவடிக்கைகளை ஆக்கிக்கொள்ளவேண்டும் என்பதனையே இஸ்லாம் வலியுறுத்துகின்றது. யூதர்களும் ஆஷூரா நோன்பை நோற்று வந்ததனால் அவர்களுக்கு மாற்றமாக ஒன்பதாவது நாளும் நோற்க வேண்டும் என்று நபிகளார் கூறியிருக்கின்றார். "வருகின்ற வருடம் நான் இருந்தால் ஒன்பதாவது நாளும் நோன்பு நோற்பேன்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆனால் நபியவர்கள் அதற்கு முன்னரே மரணித்துவிட்டார்கள்.

சிறப்பு பொருந்திய புனிதமிகு 4 மாதங்கள் முஹர்ரம், துல் கஃதா, துல் ஹிஜ்ஜா, ரஜப் ஆகும்.

முஸ்லிம்களின் வருடக்கணிப்பீட்டில் முதல் மாதம் முஹர்ரம் மாதமாகும். உமர் (ரழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் நபித் தோழர்களை ஒன்றுசேர்த்து எப்பொழுது முதல் இஸ்லாமிய வருடம் ஆரம்பிக்கப் படவேண்டும் என்று ஆலோசனை கேட்டார்கள். இதன் அடிப்படையில் பலரும் பல மாதங்களை குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ்லிம்களின் முதல் மாதமாக முஹர்ரம் மாதத்தையும் வருடம் ஆரம்பிப்பது நபிகளார் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாள் என்றும் முடிவெடுத்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் உலகத்துக்கு அனுப்பப்பட்ட உன்னத நோக்கத்தை அடைந்துகொள்வதில் அவர்களுக்கு சாதகமாக அமைந்த ஒரு பெரிய திருப்புமுனை ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்படுகிறது.

எமது உள்ளத்தையும் புறத்தையும் பரிசுத்தப்படுத்தி புதிய வருடத்தோடு நிஜங்களின் நிதர்சனமாய்த் திகழும் இஸ்லாத்தை இந்த மண்ணில் உயிர் வாழச் செய்ய முன்வருவோம். ஒவ்வொரு வருடமும் எம்மைவிட்டுப் பிரிந்து செல்லும்போது எமது ஆயுள்காலம் குறைவடைந்து மரணம் எம்மை அண்மித்துக் கொண்டிருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்வோம். புதுவருடத்துடன் எமது மத்தியில் காணப்படும் அனைத்து பிணக்குகளையும் மனக்கசப்புக்களையும் உதறித்தள்ளிவிட்டு சகோதரத்துவத்தை பரஸ்பர புரிந்துணர்வை கட்டியெழுப்பி இஸ்லாத்தின் இலச்சினையை உயரச் செய்வோம்.

# வாண்மைத்திறன் மிக்க ஆசிரியர்கள்

ராஜினி மங்களேஸ்வரசர்மா,
விரிவுரையாளர், கல்விப்பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ்.பிராந்திய நிலையம்.

இன்றைய அறிவார்ந்த சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் சுயநெறிப்படுத்தப்பட்ட கற்போராகச் செயற்பட்டு தமது அறிவைத் தொடர்ச்சியாக வளப்படுத்துபவர்களாகவும் அறிவை முகாமை செய்பவர்களாகவும் அறிவு சார் தொழிலாளிகளாகவும் பல்வேறு நடிபங்குகளை ஏற்பதன் மூலம் அறிவுப் பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்ய வேண்டியவர்களாகின்றனர். இத்தகைய அறிவு மையச் சமூகத்தில் வாழவும் செயலாற்றவும் ஒவ்வொரு பிள்ளையையும் தயார் செய்ய வேண்டிய பெரிய பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்ததாகும். பால், இன, மத, சாதி மற்றும் உடலியல் சார் வேறுபாடுகளின்றி அனைத்துச் சிறார்களும் கற்பதற்கு உரித்துடையவர்கள் ஆவர். சகலருக்கும் கல்வி என்னும் இவ்விலக்கினை அடைவதற்கு கல்விப் புலம் சார்ந்தோர் குறிப்பாக ஆசிரியர்கள் விசேட கல்வித் தேவைகள் பற்றிய போதுமான அறிவையும் விழிப்புணர்வையும் கொண்டிருத்தல் மிக முக்கியமானதாகும். உடல்சார் காரணங்கள் மட்டுமன்றி சமகால உலகின் பல்வகைப்பட்ட அழுத்தங்கள் இயற்கை இடர்கள், போர், தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கங்கள் போன்ற பல்வேறு காரணங்களாலும் இன்றைய சிறார்கள் விசேட கல்வித் தேவைகளையுடையவர்களாக உள்ள நிலையில் இவர்களைக் கற்பிப்பதற்கான அறிவும் திறன்களும் ஆசிரியர்களுக்குப் பெரிதும் வேண்டப்படுகின்றன.

ஆரம்ப காலங்களில் உடல்சார் குறைபாடுடையவர்கள் மட்டுமே விசேட தேவையுடையவர்கள் எனக் கருதப்பட்டதுடன் இவர்கள் பரிதாபத்துக்குரியவர்களாகக் கருதப்பட்டு சமூக,கலாசார ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டனர். எனினும் ஏனைய சிறார்களுக்குக் கிடைக்கும் சகல வாய்ப்புக்களும் இந்தப் பிள்ளைகளுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கின் அடிப்படையில் காலப்போக்கில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக 1945ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் சாசனத்தில் 26ஆவது சரத்து ஒவ்வொரு பிரசையும் பால், இன, மத, நிற வேறுபாடுகளின்றி பொருத்தப்பாடான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை வலியுறுத்தியது. 1970களில் விசேட தேவையுடைய சிறார்களை சாதாரண பாடசாலைகளில் இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை ஏனைய மாணவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கான சுதந்திரத்தையும் வாய்ப்புக்களையும் அவர்களுக்கு வழங்கியது. எனினும் இதன்போது சாதாரண பாடசாலைகளில் உள்ள விசேட அலகுகளில் வைத்தே அவர்கள் கற்பிக்கப்பட்டனர். 1980களில் தோற்றம் பெற்ற உள்ளடங்கல் எண்ணக்கருவானது இயலாமை உள்ளவர்கள் உட்பட சகல மாணவர்களும் சாதாரண வகுப்பறைகளில் உள்ளடக்கப்பட்டு ஒரே ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் கற்பதற்கு இடமளித்தது. இதன் மூலம் மாணவர்கள் எந்தவித வேறுபாடுகளுமின்றி இணைந்து செயலாற்றவும் அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் வாழ்தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளவும் வாழ்க்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளவும் தேவையான திறன்களையும் விருத்தி செய்து கொள்கின்றனர். இந்தக் கருத்தை மேலும் உறுதி செய்யும் வகையில் 1990இல் மேற்கொள்ளப்பட்ட சகலருக்கும் கல்வி தொடர்பான பிரகடனமும் 1994 சலமன்கா உடன்படிக்கையும் சகல சிறார்களுக்கும் அடிப்படைக் கல்வி வழங்கப்படவேண்டும் என்பதையும் இது தரமானதாகவும் வேறுபாடுகளுக்கு இடமளிக்காத வகையில் இடம்பெற வேண்டும் என்பதையும் வலியுறுத்தின. உள்ளடக்கல் எண்ணக்கரு பெரிதும் முனைப்புப் பெற்றுள்ள இந்தப் புதிய யுகத்தில் ஒவ்வொரு பிரசையும் பொருத்தமான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை உறுதி செய்வதில் தேசிய அரசுகளின் வெற்றி ஆசிரியர்களின் கரங்களிலேயே பெரிதும் தங்கியுள்ளது. எந்தவொரு கல்வி ஒழுங்கமைப்பின்தும் வெற்றிக்கு தரமான ஆசிரியர்களே அத்திபாரமாகின்றனர். இந்தக் கருத்து விசேட கல்வித்துறைக்கு மேலும் பொருத்தமானதாகும்.

சமூக, பொருளாதார, உளவியல் மற்றும் உடல்ரீதியான காரணங்களால் எழக்கூடிய விசேட கல்வித் தேவைகளையுடைய அனைத்து சிறுவர்களும் தமக்குரிய கல்வியைப் பெறுவதற்கு உதவியளிக்கும் வகையில் ஆசிரியர்களின் ஆற்றல்களையும், திறன்களையும் முன்னேற்றுவதை ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் உறுதி செய்ய வேண்டும். சகல ஆசிரியர்களும் பிள்ளைகளின் விசேட கல்வித் தேவைகளை இனங்காண்பதற்கும் விளங்கிக்கொள்வதற்கும் அவர்களை பொருத்தமான விதத்தில் கையாளுவதற்கும் ஏற்ற வகையில் விசேட கல்வித் தேவைகள் பற்றிய அடிப்படை அறிவையேனும் பெற்றிருப்பது அவசியமாகும். இதன் மூலம் பிள்ளைகளின் விருத்திப் போக்குகளை விளங்கிக் கொள்ளவும் குறைபாடு களின் பிரதான வகைகளைப் புரிந்து கொள்ளவும் பிள்ளை களின் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கேற்ப தமது கலைத்திட்டத்தைப் பொருத்தப்பாடாக்கிக் கொள்ளவும் தேவை யான திறன்களையும் தன்னம்பிக்கையையும் ஆசிரியர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

சகல மாணவர்களும் தமது தனித்துவமான பெறுமானங்களை உணர்ந்து தம்மைப்பற்றி நேரான சுய எண்ணக்கருவை விருத்தி செய்வதன் மூலம் நாளாந்த வாழ்வின் சகல அம்சங்களிலும் செயலூக்கத்துடன் ஈடுபடவும் நேர்முகமான வகையில் சமூகப் பங்களிப்பை வழங்குவதற்கும் வாய்ப்பளிக்கும்வகையில் ஆசிரியர்கள் விசேட கல்வித் தேவைகள் பற்றிய விழிப்புணர்வு உள்ளவர்களாக இருப்பது அவசியமானதாகும். சாதாரண வகுப்பறைகளில் உள்ளடக்கப்படும் அனைத்து மாணவர்களுக்கும் பொருத்தமான விதத்தில் கற்றல், கற்பித்தலை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்களே பிரதான பங்காற்றுகின்றனர். அனைத்து மாணவர்களுக்கும் பொருத்தமான கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்தல், பொருத்தமான விதத்தில் கலைத்திட்டத்தை மாற்றியமைத்தல், கற்றல் வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்தல், மாணவர் மையக் கற்பித்தலை மேற்கொள்ளல் போன்றவற்றிலான, திறன்கள் ஆசிரியர்களுக்கு பெரிதும் வேண்டப்படுகின்றன. மேலும், விசேட கல்வித் தேவையுடைய சிறார்களின் பெற்றோருடனும் சக ஆசிரியர்களுடனும் பணிசார் உறவுகளை சரியான முறையில் பேணுவதும் இந்தச் சிறார்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பளித்து நேர்மனப்பாங்குடன் செயற்படுவதும் வெற்றிகரமான உள்ளடங்கல் கல்விக்காக ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகளாகும். சகலருக்கும் கல்வி எனும் இலக்கினை அடையும் வகையில் உள்ளடங்கல் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தேர்ச்சிகளை வழங்கி ஆசிரியர்களை வலுவூட்டுவதில் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தீர்க்கமான பங்காற்றுகின்றன. இலங்கையில் சாதாரண பாடசாலைகளில் உள்ளடங்கல் கல்விக்கான முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்படும் அதே சமயம் வேறுபல நிறுவனங்களும் விசேட கல்வித் தேவைகளையுடைய சிறார்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளன.

# பாதுகாப்புச் செலவு ரூ.80 ஆயிரம் கோடி

## ஒப்புதல் அளித்தது மத்திய அரசு

டில்லி, ஒக்.27
பாதுகாப்புத்துறையில் 80 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களுக்கு மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.50 ஆயிரம் கோடி மதிப்புள்ள 6 நீர்மூழ்கிக் கப்பல்களை இந்தியாவிலேயே தயாரிக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
மேலும் பீரங்கியைத் தாக்கும் இஸ்ரேலிய ஏவுகணைகள் 8,000, மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பாடு செய்யப்பட்ட டோர்னியர் கண்காணிப்பு விமானங்கள் 12 ஆகியவற்றை வாங்கவும் இந்தத் திட்டத்தின் கீழ் முடிவெடுக்கப்பட்டுள்ளது.
மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அருண் ஜேட்லி தலைமையில் நேற்று முன்தினம் பாதுகாப்புக் கொள் முதல் கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. சுமார் 2 மணி நேரத்திற்கும் மேல் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேலும் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.
முக்கியமாக, இந்தியாவிலேயே 6 நீர்மூழ்கிக் கப்பல்களைத் தயாரிக்க எடுக்கப்பட்ட முடிவு பெரியதாகக் கருதப்படுகிறது. அடுத்ததாக, 8,356 பீரங்கித் தாக்குதல் ஏவுகணைகளை ரூ.3,200 கோடி ரூபாய்க்கு வாங்க முடிவெடுக்கப்பட்டது. யு.எஸ். ஜாவ்லின் ஏவுகணைக்குப் பதிலாக இஸ்ரேல் ஏவுகணைகளை வாங்க முடிவெடுக்கப்பட்டது. மேலும் ஏவுகணைகளைச் செலுத்தும் 321 லோஞ்சர்ஸ்களையும் வாங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.
எச்.ஏ.எல். நிறுவனத்திடமிருந்து ரூ.1,850 கோடி ரூபாய் மதிப்புள்ள டோர்னியர் உயர் தொழில்நுட்ப கண்காணிப்பு விமானங்களை வாங்கவும் முக்கிய முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 362 இன்ஃபாண்ட்ரி போர் வாகனங்களை மேடக்கில் உள்ள துப்பாக்கித் தொழிற் சாலையிலிருந்து வாங்க ரூ.662 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
இந்தியக் கப்பற்படையில் தற்போது 13 நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளன. 1999-ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி 2030ஆம் ஆண்டு இதன் எண்ணிக்கை 30-ஆக உயர்த்தப்பட வேண்டும்.
இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் அருண் ஜேட்லி பேசும்போது, தேசப் பாதுகாப்பே இந்த அரசின் பிரதானம், இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள தடைகளையும் சிக்கல்களையும் அடையாளம் கண்டு அவற்றை தீர்ப்பது அவசியம் என்றார்.
நீர்மூழ்கிக் கப்பல்களை இந்தியாவிலேயே தயாரிக்கும் புதிய முயற்சிக்கு இங்கு இருக்கும் திறனுள்ள துறைமுகங்களை அடையாளம் காண சிறப்புக் குழு அமைக்கப்படும் என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (வ)






## பலத்த பாதுகாப்பின் மத்தியில் சென்னை விமான நிலையம்

ஆலந்தூர், ஒக்.27
சென்னை விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மும்பை மற்றும் ஆமதாபாத்தில் இருந்து புறப்படும் ஏர் இந்தியா விமானத்தை தீவிரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதல் மூலம் தகர்க்கத் திட்டமிட்டு இருப்பதாக உளவுத்துறை எச்சரித்துள்ளது. அதையடுத்து சென்னை விமான நிலையப் பாதுகாப்பு உஷார்ப்படுத்தப்பட்டுள்ளது.
விமான நிலையத்தின் நுழைவாயிலில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு கடும் சோதனைக்கு பின்னர் அனுமதிக்கப்படுகின்றன. மேலும் பயணிகள் தீவிர சோதனைக்கு பின்னர் உடைமைகள் ஸ்கானர் கருவி மூலம் பரிசோதனை செய்யப்படுகின்றன. ஏர் இந்தியா அதிகாரி முன்னிலையில் இந்தச் சோதனை நடத்தப்படுகின்றது.
நேற்று முன்தினம் சனிக்கிழமைசென்னையில்இருந்து மும்பை ஆகமதாபாத், டில்லி போன்ற இடங்களுக்கு புறப்பட்டு சென்ற ஏர் இந்திய விமான பயணிகள் அனைவரும் மிகுந்த சோதனைக்குப் பின்னரே அனுமதிக்கபட்டனர். அதேபோல் பன்னாட்டு விமான நிலையத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (வ)

## இந்திய வீரர்களின் இனிப்பை வாங்க மறுத்த பாக்.ராணுவம்

ஜம்மு, ஒக்.27
தீபாவளிப் பண்டிகைத் தினத்தன்று எல்லையிலுள்ள பாகிஸ்தான் இராணுத்தினர் இந்திய ராணுவம் அளித்த இனிப்பை வாங்க மறுத்துள்ளனர்.
ஜம்மு காஷ்மீர் எல்லைப் பகுதியில், போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இராணுவத்தினர் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தி வருகின்றனர்.
குறிப்பாக, சமீபத்திய பண்டிகைகளான பக்ரீத் மற்றும் தீபாவளி நேரங்களில் பாகிஸ்தான் தாக்குதல் அதிகமாக இருந்தது. இந்திய இராணுவமும் தக்க பதிலடி கொடுத்தது. வழக்கமாக, தீபாவளி நேரங்களில் எல்லையில் பணிபுரியும் இரு தரப்பு வீரர்களுக்கும் ஒருவருக்கொருவர் இனிப்புக்களை பரிமாறிக் கொள்வது வழக்கம். ஆனால், இம்முறை, எல்லையில் உள்ள 14 நிலைகளில் நான்கு நிலைகளில் பணிபுரிந்த பாகிஸ்தான் வீரர்களை தவிர மற்றவர்கள் இந்திய வீரர்கள் கொடுத்த இனிப்புக்களை வாங்க மறுத்துவிட்டனர். (வ)



## அரசின் போக்கு நீடித்தால் விபரீதமான முடிவுகள்தான்

### வைகோ காட்டம்



சென்னை, ஒக்.27
இலங்கை தமிழர்களுக்கு எதிரான மத்திய அரசின் போக்கு நீடித்தால், மத்திய அரசு விபரீதமான விளைவுகளையே சந்திக்க வேண்டியிருக்கும் என்று வைகோ காட்டமாகத் தெரிவித்துள்ளார்.
இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு, சுப்ரமணியசுவாமி கடிதம் எழுதியுள்ளதாகத் தகவல் வெளியிட்டுள்ளார்.
இதற்குக் காரணம் விடுதலைப் புலிகளை அழித்ததன் மூலம் ராஜபக்ஷ இந்தியாவைப் பாதுகாத்துள்ளார் என்றும் தகவல் தெரிவித்துள்ளார். இதற்குத் தமிழகத்தில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்நிலையில் ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ இது குறித்து மிகவும் காட்டமாக ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.
அந்த அறிக்கையில், மத்திய அரசு நேரிடையாகவே இலங்கை அரசுக்கு ஆதரவாகவும், இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகவும் உதவி செய்கிறது. இதனால்தான் சுப்ரமணியசுவாமி அத்தனை பகிரங்கமாக பாரத ரத்னா விருது வழங்குவது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.
மத்திய அரசின் இந்த நிலைப்பாடு நீடித்தால் விபரீதமான முடிவுகளையே மத்திய அரசு சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் தமது அறிக்கையில் கூறியுள்ளார் வைகோ. (வ)

## ஜம்மு, ஜார்க்கண்ட் மாநில சட்டசபை தேர்தல் நவ.25இல்

டில்லி, ஒக்.27
ஜம்மு காஷ்மீர் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி சட்டசபை தேர்தல் ஆரம்பமாகி ஐந்து கட்டங்களாக நடைபெறும் என்று தலைமை தேர்தல்ஆணையாளர் வி.எஸ். சம்பத் தெரிவித்துள்ளார்.
டில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் கூட்டத்தில் தேர்தல் திகதியை வெளியிட்ட அவர், 87 சட்டசபைத் தொகுதிகள் அடங்கிய ஜம்மு காஷ்மீர் மற்றும் 81 சட்டசபை தொகுதிகள் அடங்கிய ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் நவம்பர் 25 ஆம் திகதி சட்டசபை தேர்தல் ஆரம்பமாகி ஐந்து கட்டங்களாக நடைபெறும் என்று தெரிவித்தார்.
இரண்டாம் கட்ட தேர்தல் டிசெம்பர். 2 மூன்றாம் கட்ட தேர்தல் டிசெம்பர். 9 நான்காம் கட்ட தேர்தல் டிசெம்பர். 14, ஐந்தாம் கட்ட தேர்தல் டிசெம்பர். 20 ஆம் திகதிகளில் நடைபெறும்.
ஜம்மு காஷ்மீர் மாநில சட்டசபையின் தற்போதைய பதவிக்காலம் அடுத்த வருடம் ஜனவரி 19 ஆம் திகதியுடனும், ஜார்க்கண்ட் மாநில சட்டசபை பதவிக்காலம் ஜனவரி 3 ஆம் திகதியுடனும் முடிவடைகிறது.
தேர்தலுக்காக அங்கு 10,015 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும். (வ)

## ஹரியானா மாநில முதல்வராக பதவி ஏற்றார் மனோகர் லால்



**மொத்தமுள்ள 90 தொகுதிகளில் 47 இடங்களில் வெற்றி பெற்று பா.ஜ.க. பெரும்பான்மை பெற்றது.**

ஹரியானா மாநிலத்தின் முதல்வராக மனோகர் லால் கட்டார் நேற்று பதவி ஏற்றுக் கொண்டார்.
ஹரியானா மாநிலத்துக்கான சட்டமன்றத் தேர்தல் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது. அதில், அங்கு மொத்தமுள்ள 90 தொகுதிகளில் 47 இடங்களில் வெற்றி பெற்று பா.ஜ.க. பெரும்பான்மை பெற்றது. அதையடுத்து பா.ஜ.க.வின் புதிய முதல்வராக மனோகர் லால் கட்டார் தெரிவு செய்யப்பட்டார். இந்தநிலையில், ஹரியானா மாநிலத்தின் புதிய முதல்வராக 18 ஆண்டுகளுக்கு பிறகு ஜாட் இனத்தைச் சேராத மனோகர் லால் கட்டார் நேற்று பதவி ஏற்றுக் கொண்டார். பஞ்ச்குலாவில் நடைபெற்ற விழாவில் அவருக்கு ஆளுநர் பதவிப் பிரமாணமும், இரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். இந்த விழாவில், பிரதமர் நரேந்திர மோடி, பா.ஜ.க. தலைவர்கள் அமித் ஷா, அத்வானி உள்ளிட்ட தலைவர்கள், மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், சுஷ்மா சுவராஜ், வி.கே.சிங், மேனகா காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும், பா.ஜ.க. ஆளும் மாநில முதல்வர்கள் வசுந்தரா, ஆனந்தி பென் பட்டேல், சவுகான், பஞ்சாப் மாநில முதல்வர் பாதலும் கலந்து கொண்டனர். (வ)

## அமெரிக்க பாடசாலையில் பயங்கரம்: தோழியைச் சுட்டுக்கொன்ற மாணவன்

வொஷிங்டன், ஒக்.27
வொஷிங்டன் அருகே சியாட்டில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவன் தனது தோழியை சுட்டுக் கொன்றான். அவன் துப்பாக்கியால் சுட்டதில் மேலும் 4 மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

இறுதியில், குறித்த மாணவனும் தன்னைத் தானே சுட்டுக்கொண்டு உயிரை மாய்த்துக் கொண்டான்.

வடக்கு சியாட்டிலில் உள்ள மேரில்வில்லே பில்சக் உயர்நிலைப் பாடசாலை வளாகத்தில் உள்ள சிற்றுண்டிச் சாலைக்குச் சென்ற மாணவன் ஜெய்லென் பிரைபெர்க் (வயது 15), அங்கு சாப்பிட்டுக் கொண்டிருந்த மாணவியை நோக்கி துப்பாக்கியால் சுட்டான். சம்பவ இடத்திலேயே மாணவி உயிரிழந்தார். அங்கிருந்த மேலும் 4 பேர் மீது குண்டு பாய்ந்து படுகாயமடைந் தனர். அதன் பின்னர் பிரை பெர்க்,



தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு உயிரை மாய்த்தான். காயமடைந்த மாணவர்களில் 2 பேர், பிரைபெர்க்கின் உறவினர்கள் ஆவார்கள்.

சம்பவத்தை நேரில் பார்த்த மாணவன் ஜாரோன் வெம் கூறும்போது, பிரை பெர்க் கடும் கோபத்துடன் சிற்றுண்டிச் சாலைக்கு வந்தான். அவன் காதலித்த மாணவி அமர்ந்திருந்த பகுதியை நோக்கி சரமாரியாக சுட்டார். இதில், அந்த மாணவி உயிரிழந்தார். அவள் அருகே அமர்ந்திருந்தவர்கள் காயமடைந்தனர். பின்னர், பிரைபெர்க் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு உயிரிழந்தான். காதலில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இந்த துப்பாக்கிச் சூட்டை அவர் நடத்தியிருக் கலாம் என்று நினைக்கிறேன் - என்றார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாரும், புலனாய்வு அதிகாரிகளும் விசாரணை மேற் கொண்டு வருகின்றனர். (வ)

## தலை துண்டித்து சடலங்களை வீதியில் வீசியெறிந்த ஐ.எஸ்.

### அதிர்ச்சியூட்டும் காணொலி



பக்தாத், ஒக்.27
ஈராக் மற்றும் சிரியாவில் தொடர்ந்து அட்டூழியங்களை அரங்கேற்றி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ் தற்போது தலை துண்டித்து சடலங்களை வீதியில் வீசியுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக்-சிரியாவின் பல்வேறு நகரங்களைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ், ரக்கா நகரை தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

தங்களை எதிர்ப்பவர்களையும், இஸ்லாமிய கொள்கைகளையும் கடைப்பிடிக்க தவறியவர்களையும் ஐ.எஸ்.ஐ.எஸ். உடனடியாகக் கொன்றுவிடுகின்றனர்.

சமீபத்தில் ஐ.எஸ்.ஐ.எஸுக்கு எதிராக போர் புரியும் இராணுவ வீரர்களைக் கடத்தி வந்து, அவர்களின் தலையை துண்டித்து கொடூரமாகக் கொலை செய்துள்ளனர்.

மேலும் அவர்களின் தலை துண்டித்த சடலங்களை ரக்கா நகரில் பொதுமக்கள் நடமாடும் சாலையிலேயே வீசியுள்ளனர். இந்தநிலையில் இந்த தலையில்லா பிணங்களை பார்த்து அவ்வழியே செல்லும் பெண்களும் சற்றும் பதற்றமடையாமல், கூச்சலிடாமல் மிகவும் சாதாரணமாய் நடந்து செல்வது அதிர்ச்சியை அளிக்கிறது.

இதுகுறித்து ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், எங்களது கொள்கைகளுக்கு அனைவரும் அடிபணிய வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாமல் எங்களை எதிர்த்துப் போராடினால் இதே கதி எல்லோருக்கும் என்றும் எச்சரித்துள்ளார். (வ)

# சிறுவர்களுக்கு படுகொலை பயிற்சி

எதிரிகளை எவ்வாறு தலை துண்டித்து படுகொலை செய்ய வேண்டும் என்று சிறுவர்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பயிற்சி அளித்து வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சிரியா, ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கத்தில் உள்ள பகுதிகளில் ஜிகாத் பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. அங்கு சிறுவர்களுக்கு கழுத்தை அறுக்கவும், சித்திரவதை செய்யவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஜிகாத் பாடசாலையில் சிறுவர்களுக்கு கற்பிக்கப்படும் விடயங்கள் குறித்த காணொலி, ஒளிப்படங்களை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது. இதில் சிறுவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி இடம் பெற்றுள்ளது. அந்தப் பாடசாலைகளில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அதிகம் உள்ளனர். மனிதர்களின் கழுத்தை அறுப்பது, சித்திரவதை செய்வது போன்ற காணொலிக் காட்சிகளை கட்டாயப்படுத்தி இவர்களை பார்க்கச் செய்கின்றனர். ஏகே-47 உட்பட பல்வேறு ரக துப்பாக்கிகளை பயன்படுத்துவது குறித்தும் சிறுவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இது தவிர மதபோதனை வகுப்புகளும் நடைபெறுகின்றன. இஸ்லாமிய நாட்டின் சிங்கக் குட்டி என்ற பெயரிடப் பட்டுள்ள காணொலியில், இச்சிறுவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் எதிர்கால வாரிசுகள். எங்கள் குறிக்கோள்கள் உலகம் முழுவதும் நிலை நாட்ட தயாராகி வருகின்றனர் என்று அரபு மொழியில் கூறப்பட்டுள்ளது. (வ)

## 2 வயதுச் சிறுமியின் உயிர் பறித்த எபோலா

பமாகோ, ஒக்.27
மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் எபோலா நோய் தாக்குதலில் 2 வயது சிறுமி உயிரிழந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான கினியா, லைபீரியா, சியரா லியோன் ஆகிய நாடுகளில் எபோலா வைரஸ் நோய் வேகமாகப் பரவி வருகிறது. இதுவரை 4,800 பேர் எபோலா நோயால் பரிதாபமாக இறந்துள்ளனர்.

மாலியில் 2 வயதுச் சிறுமி, எபோலா வைரஸ் தாக்கி உயிரிழந்தாள்.

இந்தச் சிறுமி கினியாவில் இருந்து மாலி நாட்டுக்கு சமீபத்தில் தான் வந்தாள்.

இறந்தச் சிறுமியின் தாய் கினியாவில் சில வாரங்களுக்கு முன்பு இறந்து விட்டார்.

அதனால் இந்தச் சிறுமி மாலியில் உள்ள உறவினர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டாள். ஆனால் எதிர்பாராத விதமாக எபோலா தாக்கத்திற்கு ஆளாகி பரிதாபமாக இறந்து விட்டாள்.

அண்டை நாடான கினியாவுக்கும், மாலிக்கும் இடையே தினமும் பஸ் மற்றும் டாக்சி போக்குவரத்து உள்ளது. அதனால், இங்கு எபோலா நோய் பரவுவது தீவிரமாகியுள்ளது.

தற்போது அங்கு நடத்தப்பட்ட சோதனையில் 43 பேரை எபோலா நோய் தாக்கியுள்ளது. அவர்களில் 10 பேர் சுகாதார ஊழியர்கள். அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ)



இந்தோனேஷியாவில் இஸ்லாமிய புத்தாண்டு ஒரு கொண்டாட்டத்தின்போது ஐஹொான் கொடும்பாவியை ஊர்வலமாகக் கட்டி இழுத்துவரப்பட்டபோது...

## வன்புணர்வு செய்ய வந்தவரை கொன்ற பெண்ணுக்கு தூக்கு

ஈரானில் தன்னைப் பாலியல் வன்புணர்வு செய்ய முயன்றதாகத் தெரிவிக்கப்படும் ஆண் ஒருவரைக் கொன்றதாகக் குற்றம் நிரூபிக்கப்பட்டிருந்த பெண்ணொருவரை ஈரான் தூக்கிலிட்டுள்ளது.



அவருக்கு துக்குத் தண்டனை நிறைவேற்றக்கூடாது என்று ஈரானுக்குள்ளிருந்தும் சர்வதேச அளவிலும் வலியுறுத்தப்பட்டிருந்தும்கூட 26 வயது ரெய்ஹானெ ஜப்பாரிக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

தூக்கு மேடையைத் தவிர்க்க வேண்டுமானால் இறந்த ஆணின் குடும்பத்தாரிடம் இருந்து ரெய்ஹானேவின் குடும்பத்தார் ஒப்புதல் பெற வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. ஆனால் அந்த ஒப்புதலைப் பெற அவர்கள் தவறி விட்டார்கள் என்று ஈரானிய அரசு செய்தி நிறுவனம் கூறுகிறது. மேலும் தற்காப்புக்காகவே அந்த ஆணைக் கொன்றதாக ரெய்ஹானெ வழக்கில் நிரூபித்திருக்கவில்லை என்றும் அந்தச் செய்தி கூறுகிறது.

ஆனால் அந்தப் பெண்ணின் ஒப்புதல் வாக்குமூலம் அழுத்தம் கொடுத்துப் பெறப்பட்டிருந்தது என்றும், அவர் மீது மீண்டும் வழக்கு நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் ஐ.நா. வாதிட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை தூக்கிலிடப்பட்டிருந்த ரெய்ஹானெவை, அவரது தாயார் கடந்த வெள்ளியன்று சென்று பார்த்துவந்திருந்தார். (வ)

## பழங்குடியினரை ஏமாற்றி ஆவணப்படம் தயாரிப்பு

### பிரபல சினிமா இயக்குநரின் சூழ்ச்சி

பரிஸ், ஒக்.27
பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த திரைப்பட இயக்குநர் அந்தமானில் வசிக்கும் பழங்குடியினரை ஏமாற்றி ஆவணப் படம் எடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

பிரான்ஸைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் டெரிம்ஸ் என்ற திரைப்பட இயக்குநர் அந்தமானின் மாயமந்தர் என்ற தீவுக்குள் சட்ட விரோதமாக நுழைந்து ஆவணப்படம்



எடுத்துள்ளார். படம் ஏதும் எடுக்கக் கூடாது என்று விதியை மீறிய இவர், அங்குள்ள ஜரவா என்று அழைக்கப்படும் பழங்குடியினருக்கு உணவளிப்பதாகக் கூறி ஏமாற்றி ஆவணப்படம் எடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக அந்த தீவுக்கு படகில் இவரை அழைத்துச் சென்றவர்கள் உட்பட 4 பேர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில், இந்த விவகாரத்தில் இயக்குநர் அலெக்ஸாண்டருக்கு அவரது தயாரிப்பாளர் கிலேரி பெலி வெர்ட்டும் உறுதுணையாக இருந்ததால் அவரும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார் என்றும் அவர்களின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபணமானால் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

# ஆசியாவிலேயே மிகப்பெரிய வண்ணத்துப்பூச்சி பூங்கா ஸ்ரீரங்கத்தில்

ஆசியாவிலேயே மிகப்பெரிய வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனம் திருச்சி ஸ்ரீரங்கத்தில் ரூ.9 கோடி செலவில் தமிழக அரசு வனத்துறையால் அமைக்கப்பட்டு வருகிறது.

காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றின் இடையே இயற்கை எழில் கொஞ்சும் சூழல் கொண்ட திருச்சி ஸ்ரீரங்கம் மேலூர் அணைக்கரை அருகே காவிரிக்கரையில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனம் அமைக்கப்படும் என்று 2 ஆண்டுகள் முன்பு சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு 13.9.2012 ஆம் திகதி இதற்கான அடிக்கல் நடப்பட்டது. 60 சதவீத பணிகள் நடைபெற்றுவிட்டன. பூங்காவில் பல்வேறு வகை பூச்செடிகள், புல்தரைகள், நவீன ரக மரங்கள், அழகுச் செடிகள், வண்ணத்துப்பூச்சிக்கு உணவான காட்டாமணக்கு செடிகள் உட்பட பல்வேறு பூச்செடிகள், மரங்கள் போன்ற பலவகை தாவரங்கள் நடப்பட்டுள்ளன. சின்யா, பென்டாஸ், டிரைக்டரி, புலும்பாகோ, கோபி, அஸ்கோப்பியா உள்ளிட்ட அதிக பூக்கள் பூக்கும் செடிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

வண்ணத்துப்பூச்சி இனப்பெருக்கம் செய்யும் வகையில் நவீன வகை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பூங்காவில், இரும்புத் தகடுகளால் வண்ணத்துப்பூச்சி வடிவில் செயற்கையாக செய்யப்பட்ட உருவமும், கல்மரமும், வண்டுகள் உள்ளிட்ட பூச்சி வகைகள் செயற்கை கல்மரத்தில் மொய்க்கும் வகையில் அழகிய வேலைப்பாடுடன் தத்ரூபமாக செய்யப்பட்டுள்ளன. சிறுவர் பூங்கா, வண்ணத்துப் பூச்சி வடிவ குளம், 100அடி உயரத்துக்கு தண்ணீர் பீய்ச்சி அடிக்கும் வகையில் நீரூற்று, 2 தொங்கு பாலங்கள் உட்பட சிறந்த சுற்றுலாத் தலமாக அமையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

27நட்சத்திரங்களுக்கு உரிய 27 வகை மரங்களை அமைத்து நட்சத்திர வனம் அமைக்கப்பட்டு வருகிறது. ஆந்திரமாநிலம் ராஜமுந்திரியில் இருந்து சுமார் 30 அடி உயரம் வளரக்கூடிய 9 அடி உயரம் கொண்ட 5,000 மரச் செடிகள் வரவழைக்கப்பட்டுநடப்பட்டு வருகின்றன. ஆசியாவிலேயே மிகப் பெரிய கோபுரம் என்ற சிறப்பைப் பெற்றது ஸ்ரீரங்கம் ராஜகோபுரம். ஆசியாவிலேயே மிகப்பெரிய வண்ணத்துப்பூச்சி பூங்கா உள்ள பெருமையையும் ஸ்ரீரங்கம் பெறுகிறது. (வ)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | 1 | | 8 | | | |
| | | 1 | | 7 | 9 | | | 2 |
| 8 | | 4 | 2 | | | | | |
| | 3 | 7 | | | | 6 | | |
| | 8 | 5 | 9 | | 4 | 2 | 3 | |
| | | 6 | | | | 4 | 1 | |
| | | | | | 6 | 5 | | 4 |
| 5 | | | 4 | 2 | | 7 | | |
| | | 3 | | | 7 | 9 | | |

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 7 | 2 | 3 | 1 | 4 | 9 | 8 |
| 3 | 2 | 9 | 7 | 8 | 4 | 6 | 5 | 1 |
| 1 | 4 | 8 | 5 | 9 | 6 | 3 | 7 | 2 |
| 2 | 7 | 3 | 8 | 4 | 5 | 1 | 6 | 9 |
| 5 | 9 | 4 | 6 | 1 | 7 | 8 | 2 | 3 |
| 8 | 6 | 1 | 9 | 2 | 3 | 5 | 4 | 7 |
| 9 | 1 | 5 | 4 | 7 | 8 | 2 | 3 | 6 |
| 4 | 3 | 2 | 1 | 6 | 9 | 7 | 8 | 5 |
| 7 | 8 | 6 | 3 | 5 | 2 | 9 | 1 | 4 |

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....
## சிறந்த வழிபாடு



சமயம் அன்பில்தான் வாழ்கிறது. சடங்குகளில் அல்ல. இதயத்தில் உள்ள தூய்மையான உண்மையான அன்பில் தான் சமயம் வாழ்கிறது. ஒரு மனிதன் உடலாலும் மனத்தாலும் தூய்மையாக இருந்தால் அன்றி கோயிலுக்கும் போவதும் சிவபெருமானை வழிபடுவதும் பயனற்றதாகும். உடம்பாலும் மனத்தாலும் தூய்மையாக இருப்பவர்களின் பிரார்த்தனைகள் சிவபெருமானால் நிறைவேற்றப்படுகின்றன. யார் தூய்மையற்றவர்களாக இருந்து கொண்டு சமயத்தைப் பற்றி மற்றவர்களுக்குப் போதிக்கிறார்களோ அவர்கள் இறுதியில் தோல்வி அடைகிறார்கள். புறவழிபாடு என்பது நம் மனதுக்குள் நடத்தும் வழிபாட்டின் அடையாளமாகும். ஆனால் அக வழிபாடும் தூய்மையுமே உண்மையானவை. அவை இல்லாமல் புற வழிபாடுகளை செய்வதில் எந்தவிதப் பயனும் இல்லை. எனவே நீங்கள் எல்லோரும் இதை திரும்பத்திரும்பநினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்த கலியுகத்தில் மக்கள் தாங்கள் எத்தகைய கொடுமைகளை வேண்டுமானாலும் செய்யலாம். பிறகு ஒரு புண்ணிய தலத்துக்குச் சென்றால் அந்தப் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு விடும் என்று நினைக்குமளவு கீழான நிலைக்கு வந்து விட்டிருக்கிறார்கள். ஒரு மனிதன் தூய்மையற்ற மனத்தோடு கோயிலுக்குச் சென்றால் ஏற்கனவே உள்ள அவனது பாவத்தோடு மேலும் பாவங்களை அடைகிறான். இவ்வாறு வீட்டுக்குத் திரும்பிச் செல்லும் போது அவன் வீட்டிலிருந்து புறப்பட்டதை விட மிக மோசமான மனிதனாகி விடுகிறான். புண்ணிய தலங்கள் புனிதமான பொருள்களாலும் மகான்களாலும் நிரம்பி இருப்பவை. புனிதமற்ற மனிதர்கள் நூறு கோயில்கள் இருக்கும் இடங்களில் வாழ்ந்தாலும் அவை புண்ணியத் தலங்கள் ஆகாது. தூய்மையாக இருப்பது சாதி, மதம், இனம் போன்ற எதையும் பாராமல் பிறருக்கு உதவி செய்வது போன்றன எல்லா வழிபாடுகளிலும் சிறந்தது ஆகும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: எதிரிகள் வகையில் அசட்டையாக இருத்தல் கூடாது. கலைத்துறையினருக்கு முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைக்கும். பலவிதமான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள்.



**இடபம்**: உங்களுடைய உடல்நலத்தை பொறுத்தவரை உஷ்ணம் மற்றும் தோல் சம்பந்தப்பட்ட உபாதைகள் வரலாம். சிலருக்கு ஊர் விட்டு ஊர் செல்லும் நிலை ஏற்படலாம். எடுத்த காரியம் அனுகூலத்தைக் கொடுக்கும். மதிப்பு மரியாதை சீராக இருக்கும்.



**மிதுனம்**: ஒருமுறைக்கு இருமுறை விசாரித்து வாங்குவது நல்லது. நண்பர்கள், உறவினர்கள் அன்னியோன்னியமாக இருப்பர். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும்.



**கடகம்**: மதிப்பு மரியாதை கூடி செல்வாக்கு அதிகரிக்கும். முயற்சிகளில் சிறுசிறு தடைகள் வரலாம். உங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தார் புரிந்து கொண்டு அனுசரணையாக நடந்து கொள்வர். தடைகளை முறியடித்து காரிய வெற்றி காணலாம்.



**சிங்கம்**: உறவினர்கள், நண்பர்கள் மூலம் அனுகூலம் கிடைக்கும். உடல் நலனைப் பொறுத்த வரை சிறப்பாக இருக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். கோரிக்கைகள், ஒப்பந்தங்கள் நிறைவேறும்.



**கன்னி**: சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பார்கள். வேலை இல்லாமல் தவித்தவர்களுக்கு தகுந்த சம்பளத்துடன் சிறந்த வேலை கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷமாக இருப்பார்கள்.



**துலாம்**: தாயாருடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். தாய் வழி உறவினர்களுடன் இருந்த மனக்கசப்புகள், பிணக்குகள் நீங்கி புதிய விதமான உறவுகள் நீடிக்கும். வேலைவாய்ப்பில் இருந்த தாமதம் மாறும். உங்களது வாக்கு வன்மை கூடும்.



**விருச்சிகம்**: வீண் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். நண்பர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். தேவையற்ற வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். யாரைப் பற்றியும் விமர்சனம் செய்ய வேண்டாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.



**தனுசு**: வேலை செய்யும் இடங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். தூங்கப் போகுமுன் குலதெய்வத்தை வணங்கி விட்டு படுக்க செல்லவும். தேவையற்ற வீண் குழப்பங்கள், கற்பனைகளைத் தவிருங்கள்.



**மகரம்**: புகழ், பாராட்டு வந்து சேரும். நற்பெயர் எடுப்பதற்கு உண்டான சூழ்நிலைகள் உருவாகும். எதிர்பார்த்த பதவிகள் வந்து சேரும். நல்ல பயன்கள் கிடைத்தாலும் அதே நேரத்தில் விழிப்புடன் செயற்படுவதும் நன்மைதரும்.



**கும்பம்**: குழப்பங்கள் தீரும். எந்தவொரு காரியத்திலும் எதிர்பார்த்த வெற்றி தாமதமாக கிடைக்கும். ஒதுங்கி இருந்தால் கூட வலுக்கட்டாயமாக எதிலாவது ஈடுபட சுற்றமும், நட்பும் தூண்டுவார்கள். கவனமாக அதைத் தவிர்ப்பது நல்லது.



**மீனம்**: எதிலும் கவனமாக இருப்பது நல்லது. வீண் அலைச்சல் செலவு ஏற்படலாம். பயணங்களின் போது எச்சரிக்கை தேவை. புதிய முயற்சிகள் காலதாமதமாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணியை கவனிக்க வேண்டி இருக்கும்.

**நாளை**

**ஐப்பசி-11 செவ்வாய்க்கிழமை | 28.10.2014**

திதி: பஞ்சமி பி.இ.12.35 வரை
நட்சத்திரம்: மூலம்
பி.இ.04.47 வரை

சுபநேரம்:10.33-12.03 வரை
இராகுகாலம்:03.03-04.33 வரை

# இந்துக் கல்லூரி அபார வெற்றி

## சென்.ஜோன்ஸ் கூடைப்பந்தாட்ட அணிக்கு எதிராக



சென். ஜோன்ஸ், யாழ். இந்து அணிகளுக்கு இடையே நேற்று இடம்பெற்ற விறுவிறுப்பான அரையிறுதி ஆட்டத்தின் ஒரு காட்சி.

யாழ்ப்பாணம், ஒக். 27

சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை 19 புள்ளிகளால் வீழ்த்தி இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட அணி.

கொக்குவில் இந்துக் கல்லூரி 2ஆவது வருடமாக நடத்தும் கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண கூடைப் பந்தாட்டப் போட்டியின் 18 வயதுப் பிரிவு ஆண் பெண் இருபாலருக்குமான கூடைப் பந்தாட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றன. நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி ஆடியது. முதல் கால்பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் புள்ளிகளைப் பெற உற்சகத்தோடு ஆடினார்கள். முடிவில் இந்துக் கல்லூரி 16 புள்ளிகளையும், சென். ஜோன்ஸ் 10 புள்ளிக ளையும் பெற்றன. யாழ். இந்துக் கல்லூரி வீரர்கள் விஸ்னுவர்த்தன் 8 புள்ளிகளையும், சுபாங்கன் 6 புள்ளிகளையும். கீர்த்தனன் 2 புள்ளிகளையும் பெற்றுக்கொடுத்தனர். சென். ஜோன்ஸ் வீரர்கள் அஜேய் 8 புள்ளிகளையும். குகபிரியன் 2 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர்.

இரண்டாம் கால்பாதி ஆட்டத்தில் வீறுகொண்டெழுந்த சென். ஜோன்ஸ் அணியினர் அபாரமாக விளையாடினர். அவர்களின் கை ஓங்கியது. முடிவில் சென். ஜோன்ஸ் 14 புள்ளிகளையும் யாழ். இந்துக் கல்லூரி 5 புள்ளிகளையும் பெற்றனர். சென். ஜோன்ஸ் வீரர்கள் அஜேய் 8 புள்ளிகளையும், பியுஸ்லஸ் 4 புள்ளிகளையும், குகப்பிரியன் 2 புள்ளிகளையும் பெற்றுக்கொடுத்தனர். யாழ். இந்துக் கல்லூரி வீரர்கள் சுபாங்கன் 3 புள்ளிகளையும், கீர்த்தனன் 2 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர். ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்டபோது சென். ஜோன்ஸ் 24 புள்ளிகளுடன் முன்னணியில் இருந்தது. இந்துக் கல்லூரி 21 புள்ளிகளைப் பெற்றது.

மூன்றாம் கால்பாதி ஆட்டத்தில் இந்துக் கல்லூரி அதிரடியாக ஆடினர். இந்துக்களின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாத சென். ஜோன்ஸ் கிடைந்தசந்தர்ப்பங்களையும் நழுவவிட்டனர். மூன்றாம் கால் பாதி ஆட்ட முடிவில் யாழ். இந்துக் கல்லூரி அபாரமாக ஆடி 18 புள்ளிகளைப் பெற்றது. சென். ஜோன்ஸால் 7 புள்ளிகளை மட்டுமே பெறமுடிந்தது. இந்து வீரன் உதயபவன் 14 புள்ளிகளையும். கஜந்தன் 2 புள்ளிகளையும். விஸ்வரதன் 2 புள்ளிகளையும்பெற்றுக்கொடுத்தனர். சென். ஜோன்ஸ் வீரர்கள் அஜேய் 4 புள்ளிகளையும். பியுஸ்லஸ் 3 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர்.

நான்காம் கால்பாதி ஆட்டத்திலும் சென். ஜோன்ஸ் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. சந்தர்ப்பங்களைத் தவறவிட்டது. ஆனால் இந்துக்கள் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நான்காம் கால்பாதியில் மட்டும் அவர்கள் 23 புள்ளிகளைப் பெற்றனர். சென். ஜோன்ஸ் 12 புள்ளிகளைப் பெற்றது. யாழ். இந்து வீரன் உதயபவன் 4 புள்ளிகளையும். கஜந்தன் 8 புள்ளிகளையும். சாரங்கன் 7 புள்ளிகளையும், நிசாந்தன் 2 புள்ளிகளையும், சென். ஜோன்ஸ் வீரர்கள் அஜேய் 6 புள்ளிகளையும். பியுஸ்லஸ் 3 புள்ளிகளையும். கிசியந்தன் 3 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர். 19 புள்ளிகள் வித்தியாசத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தெரிவானது. (உ-23)

> “18 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் இடம் பெற்று வருகின்றன.

# பாடசாலைகள் விளையாட்டு சங்கத்தின் நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம் ஜப்27

யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டு சங்கத்தின் 2014ஆம், 2015ஆம், ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு கடந்த வாரம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. அதில் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோரின் விவரம் வருமாறு,

தலைவர்- எஸ்.கே.எழில்வேந்தன் (அதிபர், யாழ்.மத்திய கல்லூரி), உப தலைவர்கள்- மணிசேகரம் (அதிபர், மகாஜனகல்லூரி) கு.விமலன் (அதிபர், சன் [illegible] ப்பாய் இந்துக் கல்லூரி), [illegible] யலாளர்- செ.திருமாறன் (யாழ்.இந்துக் கல்லூரி), உப செயலாளர்- உதயணன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), பொருளாளர்- என்.கேதீஸ்வரன் (அதிபர்-அருணோதயக் கல்லூரி), நிர்வாக உறுப்பினர்கள்- ஐ.தயானந்தராஜா (அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி) ஆ. தங்கவேலு (அதிபர், கைதடி நுணாவில் அ.த.க), இரகுலேசன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜெயதாசன் (ஆசிரியர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன்), எஸ்.சாள்ஸ் இன்பதாஸ் (ஆசிரியர், தேவரையாளி இந்துக் கல்லூரி), என்.துசியந்தன் (ஆசிரியர், குளமங்கால் றோ.த.க), எஸ்.சிவச்செல்வன் (ஆசிரியர், விக்டோரியாக் கல்லூரி), சுபாஸ்கரன்( விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர், மகாஜனக் கல்லூரி), குமணன் (விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர், சென். ஜோன்ஸ் கல்லூரி). (ற-23)

# விளையாட்டு ஆடுகளங்களுக்கு பழைய பூங்காவில் அடிக்கல்



யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட சங்கங்களுக்கான ஆடுகளங்களை அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பழைய பூங்கா வளாகத்தில் நடைபெற்றது. ஆடுகளங்களுக்கான அடிக்கல்லை நல்லூர் ஆதீன குரு முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சேமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் நட்டார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர சபை ஆணையாளர் பிரணவநாதன், முன்னாள் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.மாவட்ட செயலக பிரதம கணக்காளர் குகதாசன், யாழ். நாக விகாரை பீடாதிபதி விமல தேரர், யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் செயலாளர் விஜின்ரஸ் அடிகளார், முஸ்லிம் சமயப் பிரதிநிதி மற்றும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட சங்கங்களின் நிர்வாகிகள், வீரர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.27

கொக்குவில் இந்துக் கல்லூரி தொடர்ந்து 2ஆவது ஆண்டாக நடத்தி வரும் கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இடம் பெறும் பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. (ற-23)

நெல்லியடி, ஒக்.27

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டு கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட் டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

அதேவேளை. நாளை நடைபெறவுள்ள மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோத வுள்ளது. (ற-108

# உதைபந்தாட்ட தொடர் நவம்பர் மாதத்தில்



யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டு சங்கத்தால் நடத்தப்படும் 2014ஆம் ஆண்டுக்கான, 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் 7ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.


மேற்படி போட்டியில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 1ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டு சங்கத்தின் செயலாளர் திருமாறனிடம் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (ற-23)

# கணதீபனுக்கு மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஒக்.27

விளையாட்டுத்துறை அமைச்சும், விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து நடத்தும் 40 ஆவது தேசிய மட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான தடகளப் போட்டி அனுராதபுர் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆண்களுகான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு கொண்ட அளவெட்டி அருணோதயக்கல்லூரியின் பழைய மாணவன் கணதீபன் 4.30



மீற்றர் பாய்ந்து 3ஆம் இ[illegible] தைக் கைப்பற்றி வெண்க[illegible] பதக்கத்தைப் பெற்றுக் கொ[illegible] டார். இவருக்கு மகாஜன[illegible] லூரி ஆசிரியர் சுபாஸ்கர[illegible] பயிற்சிகளை வழங்கியி[illegible] தார். (ற-2[illegible]



# பார்சிலோனாவை வீழ்த்தியது ரியல் மெட்ரிட்

லா லிகா உதைபந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டம் ஒன்றில் ரியல் மெட்ரிட் 3-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனாவை வீழ்த்தியது.

ஸ்பானிஷ் லீக் தொடரில், கிளஸ்சிக்' மோதல் என்று அழைக்கப்படும் ரியல் மெட்ரிட், பார்சிலோனா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

ஆட்டம் தொடங்கிய மூன்றாவது நிமிடத்திலேயே, பிரேஸிலைச் சேர்ந்த நம்பிக்கை நட்சத்திரம் நெய்மர், ரியல் மெட்ரிட் பின்கள வீரர்களை ஏமாற்றி அழகாக கோல் அடித்தார். ஆனால், ஜெரார்டு பீக்கே எதிரணி வீரர்களுடன் மோதலில் ஈடுபட ரியல் மெட்ரிட் அணிக்கு பெனால்டி கிக் கிடைத்தது. இதை எந்தத் தவறும் செய்யாமல் கோலாக மாற்றினார் ரியல் மெட்ரிட்டின் கிறிஸ்டியானோ ரொனால்டோ. அதனால் முதல் பாதி 1-1 என சமநிலை அடைந்தது.

பிற்பாதியில், டோனி க்ரூஸ் மைதானத்தின் மூலையில் இருந்து அடித்த பந்தை ரியல் மெட்ரிட் அணியின் பின்கள வீரர் பெபே தலையால் முட்டி கோல் அடித்தார். அடுத்த சிறிது நிமிடத்தில், ரியல் மெட்ரிட்டின் ரொனால்டோ, கரீம் பென்ஸிமா, ஜேம்ஸ் ரொட்ரிகஸ் ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் துல்லியமாக பாஸ் செய்தனர். இதன் விளைவு, கரீம் பென்ஸிமா தனது பங்குக்கு ஒரு கோல் அடித்தார். அந்த நிமிடத்தில் இருந்து பார்சிலோனா வீரர்கள் சோர்வடையத் தொடங்கினர்.

ஆட்டம் முடிய 20 நிமிடங்கள் இருந்தபோது, பார்சிலோனா அணியின் நடுக்கள வீரர் ஹெண்ட்ரூ இனீஸ்டா காயம் காரணமாக வெளியேறினார். நான்கு மாத தடைக்குப் பின் களம் புகுந்த லூயிஸ் செரஸம், பெஞ்சுக்குத் திரும்பினார்.

பார்சிலோனா அணியின் நம்பிக்கை வீரர் மெஸ்ஸி, கடைசி வரை கோல் அடிக்கவில்லை. முடிவில் ரியல் மெட்ரிட் வெற்றி வாகை சூடியது. (ற)

# போல்டின் அன்புப் பரிசு

உலகின் மின்னல் வேக மனிதர் உசேன் போல்ட், அவரது அம்மாவுக்கு அன்புப் பரிசு ஒன்றை வழங்கியுள்ளார்.

9 விநாடிகளில்,100 மீட்டர் ஓட்டப் பந்தய தூரத்தை, மிகச் சாதாரணமாக 9.58 விநாடிகளிலும், 200 மீட்டரை 19.19 விநாடிகளிலும் கடந்து உலக சாதனை படைத்து, ஒலிம்பிக்கில் தங்கம் தட்டிச் சென்றார் போல்ட். இது அனைவருக்கும் தெரிந்த விடயம். மின்னல் வேகத்தில் மட்டுமல்ல பாசத்திலும் உயர்ந்து நிற்கிறார் உசேன் போல்ட்.

உலகில் ஓட்டப் பந்தயங்களுக்குப் பிறகு நான் காதலிக்கும் ஒரே நபர் தன் தாய் ஜெனிபர் போல்ட் தான் என்று சொல்லும் உசேன் போல்ட், தனது அம்மாவுக்கு அன்புப் பரிசாக 'ஹொண்டா சிஆர்-வி க்ராஸ் ஓவர்' காரைப் பரிசளித்திருக்கிறார்.

இது பற்றி அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் "என் தொடர் வெற்றிகளின் உச்சபட்ச மகிழ்ச்சி என் தாயை நினைவுகூர்வது தான். அன்பினால் மட்டுமே உருவான என் அம்மாவுக்கு இந்தப் பரிசு சாதாரணம் தான். என் இறுதி மூச்சு உள்ள வரை அவரைக் காதலிக்கிறேன்"- என்று அன்பு மழை பொழிந்துள்ளார்.

(ற)



# எனது ஆசை....! மனம் திறந்தார் டோனி

என்னுடைய இயற்கையான விருப்பம் தேசிய விளையாட்டுகளை வளர்ப்பது தான் என்று மனம் திறந்துள்ளார் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி.

கிரிக்கெட் விளையாட்டில் பல சாதனைகளை படைத்து வரும் டோனி, ஏனைய விளையாட்டுகளின் வளர்ச்சிக்கும் உதவி வருகிறார். முதலில் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ரேசிங் என்ற அணியை வாங்கிய டோனி, தற்போது கோலாகலமாக அரங்கேறி வரும் இந்தியன் சூப்பர் லீக் உதைபந்துத் தொடரில் சென்னையின் எப்.சி. அணியின் உரிமையாளர்களில் ஒருவராகவும் சேர்ந்தார்.

இந்த நிலையில் அணித்தலைவர் டோனி, தேசிய விளையாட்டான ஹொக்கியின் மேம்பாட்டுக்கும் உதவ முன்வந்துள்ளார். டோனி தனது சொந்த ஊரை தலைமையிடமாகக் கொண்ட ராஞ்சி அணியை, சகாரா நிறுவனத்துடன் இணைந்து வாங்கி இருக்கிறார். ராஞ்சி ராய்ஸ் என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கும் டோனியின் இந்த அணி அடுத்த ஆண்டு (2015) ஜனவரி மற்றும் பெப்ரவரி மீதத்தில் நடைபெறும் ஹொக்கி இந்தியா லீக் போட்டியில் களம் இறங்கவுள்ளது. இந்த அணியின் சின்னத்தை (லோகோ) அறிமுகப்படுத்தும் விழாவுக்கு பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே டோனி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"ராஞ்சி அணியை வாங்கியதன் மூலம் நான் ஹொக்கியுடன் இணைந்து இருக்கிறேன். இந்த நாள் எனக்கு சிறப்பு வாய்ந்த நாளாகும். எனது முதலும் முக்கிய பொறுப்பும் கிரிக்கெட் விளையாடுவது தான். இருப்பினும் ஒரு விளையாட்டு வீரனாக தேசிய விளையாட்டுக்களை வளர்ப்பேன்"- என்று தெரிவித்துள்ளார்.

(ற)



# யுவராஜை மயக்கிய டோனி

டோனி சிறப்பாக செயல்பட்டாலும், எனக்கு கங்குலி தான் பிடித்த அணித்தலைவர் என்று யுவராஜ் சிங் கூறியுள்ளார்.

"அணித்தலைவர் பதவியில் டோனி மிகவும் சிறப்பாக செயல்படுகிறார். இந்திய அணிக்கு பல வெற்றிகளை பெற்றுக் கொடுத்து உள்ளார். 3ஆவது நிலையில் அவர் அணியை சிறப்பாக வழி நடத்தி செல்கிறார். அவருக்கு மாற்று அணித்தலைவர் தற்போது இல்லை.

ஆனால் எனக்குப் பிடித்த அணித்தலைவர் கங்குலிதான். எனது கிரிக்கெட் வாழ்க்கையில் அவரிடம் இருந்து ஏராளமான விடயங்களைக் கற்று இருக்கிறேன். அவரது தலைமையில் தான் மேம்பட்டேன். கங்குலி தலைமையில் வெளிநாட்டில் பெற்ற வெற்றிகள் சிறப்பானதாக உணர்கிறேன்"- என்று அவர் கூறியுள்ளார். (ற)

# சேரீனா, ஹாலேப் இறுதியாட்டத்தில்





உலக மகளிர் சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு, அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ருமேனியாவின் சிமோனா ஹாலேப் ஆகியோர் முன்னேறியுள்ளனர். லீக் ஆட்டத்தில் ஹாலேப்பிடம் அடைந்த தோல்விக்கு, பழி வாங்க செரீனாவுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

தரவரிசையில் முதல் 8 இடங்களுக்குள் இருக்கும் வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்கும், 'டபிள்யூ.டி.ஏ. ஃபைனல்ஸ்' எனப்படும் உலக மகளிர் சம்பியன்ஷிப் தொடர் சிங்கப்பூரில் நடைபெற்று வருகிறது.

சனிக்கிழமை நடைபெற்ற அரையிறுதியில் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள செரீனாவும், அவரது தோழியான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியும் மோதினர். ஆட்டத்தை மோசமாகத் தொடங்கினார் செரீனா. முதல் செற்றில் 2:5 என வோஸ்னியாக்கி முன்னிலையில் இருந்தார்.

தொடர்ந்து மோசமாக ஆடிய செரீனா ஒரு கட்டத்தில் வெறுப்படைந்து மட்டையைத் தரையில் போட்டு உடைத்தார். முதல் செற்றை 2:6 என செரீனா இழந்தார். 2ஆவது செற்றில் மீண்டு வந்த அவர், அந்த செற்றைத் தனதாக்கினார். 'டை பிரேக்கர்' வரை நீடித்த 3ஆவது செற்றையும் செரீனா கைப்பற்றினார். முடிவில் 2-6, 6-3, 7-6(6) என்ற செற் கணக்கில் செரீனா வெற்றி பெற்றார்.

**ஹாலேப் அசத்தல்**

மற்றொரு அரையிறுதியில், இந்த சீசன் முழுவதும் அபாரமாக ஆடி வரும் சிமானோ ஹாலேப்பும், போலந்தின் அக்னீஸ்கா ரத்வான்ஸ்காவும் மோதினர். ருமேனிய ரசிகர்கள் ஆதரவுடன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹாலேப் 6:2, 6:2 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்றார். இதன் மூலம் இறுதி ஆட்டத்தில் செரீனாவும், ஹாலேப்பும் மோதவுள்ளனர். இந்தத் தொடரின் லீக் சுற்றில் செரீனாவை ஹாலேப் 6:0, 6:2 என்ற நேர் செற்களில் தோற்கடித்திருந்தார். இது செரீனாவின் மோசமான தோல்வி என ரென்னிஸ் நிபுணர்கள் தெரிவித்தனர்.

எனவே, ஐந்து நாள்கள் இடைவெளியில் ஹாலேப்பைப் பழி வாங்க செரீனாவுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இதில் வெற்றி பெறும் பட்சத்தில், தொடர்ந்து மூன்றாவது முறையாக, டபிள்யூ.டி.ஏ. ஃபைனல்ஸ் தொடரை வென்ற வீராங்கனை என்ற பெருமை செரீனாவுக்குக் கிடைக்கும். (ற)

## தொடர்ச்சிகள்

### வடக்கு காணிப்

மேற்கொண்டு வருகின்றது என்று அந்த அமைச்சின் மேலதிக செயலாளர் அனுஷ முனசிங்க தெரிவித்துள்ளார் என சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் காணிப் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது யாழ்ப்பாணத்தில் 13 மத்தியஸ்தர் சபைகளும், கிழக்கு மாகாணத்தில் 39 மத்தியஸ்தர் சபைகளும் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் சுமார் 600 பேர் வரையில் உள்ளனர். இவர்களுக்கு அரச காணி தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் இல்லை.

இந்தநிலையில், பயிற்றப்பட்ட விசேட மத்தியஸ்தர்களைக் கொண்டு புதிதாக இணக்க சபைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவற்றுக்கு அரச காணி தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் அதிகாரமும் வழங்கப்படவுள்ளது. அதனூடாக வடக்கு - கிழக்கின் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

இந்த நடவடிக்கை கற்றுக்கொண்ட பாடங்களும் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ந-5)


மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு-2014 முடிவுகள்

HONDA

25.10.2014 அன்று துரையப்பா விளையாட்டரங்கில் நிகழ்ந்த மாபெரும் இன்னிசை நிகழ்வின் போது அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது.

மோட்டார் சைக்கிள் வெற்றி இலக்கம் - 1404
பத்து ஆறுதல் பரிசு வெற்றி இலக்கங்கள்
இல016, இல158, இல177, இல188, இல416,
இல645, இல835, இல1901, இல2372, இல2953

பரிசுக்குரியவர்கள் தங்கள் அதிர்ஷ்டலாபச் சீட்டினை 31.10.2014 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் காட்சியறையில் காண்பித்து உங்கள் பரிசினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

HONDA WORLD
NO-214 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 0212223316 / 0770387111
பிரதான வீதி, நெல்லியடி. T.P : 0212264416 / 0770387444



சேவை நலன்பாராட்டு

முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையில் 26 வருடங்கள் முகாமைத்துவ உதவியாளராக பணியாற்றி 14.10.2014 அன்று ஓய்வுபெற்ற

சூசைப்பிள்ளை மகேந்திரா
(கலிற்ரஸ்)
(முகாமைத்துவ உதவியாளர் - II)




அவர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர்களது ஓய்வுகாலம் மகிழ்ச்சி கலந்து இன்புற்று சிறக்கவும், சமூகப்பணிகளில் மேன்மேலும் உயரவும் இறையருள் வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
வலயக் கல்விப் பணிமனை, முல்லைத்தீவு.
வலயக் கல்விப் பணிப்பாளரும், பணியாளர்களும்.


### முதல்

குடா பொலிஸார் தொலை பேசி மூலமாக அறிவித்துள்ளனர்.

இரணைமாதா நகரில் வைத்து கிருஸ்ணராசா கைது செய்யப் பட்டிருக்கிறார். பொதுமக்களைச் சந்திப்பதற்காக அவர் அங்கு சென்றிருந்தார் என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர். புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் அவரைப் பின்தொடர்ந்து சென்ற பயங் கரவாதத் தடுப்புப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர் என்று கூறப்படுகிறது. மேலதிக விசாரணைக்காக அவர் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இந்த வகையில் இடம்பெற்ற முதலாவது கைது இதுவாகும்.

"பயங்கரவாதச் செயல்களை ஊக்குவித்தமைக்காக அவர கைது செய்யப்பட்டுள்ளார்" என்று நாச்சிக்குடா பொலீஸாரால் அவரது உறவினர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவரைக் கைது செய்யப்பட்டமைக்கான உத்தியோகபூர்வ ஆதாரங்கள் எதுவும் இது வரையில் கையளிக்கப்படவில்லை.

ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைக்க முயன்ற ஒருவர் பயங்கரவாதக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப் பட்டிருப்பது மனித உரிமை ஆர் வலர்கள் மத்தியில் அதிர்ச்சியை யும் அச்சத் தையும் ஏற்படுத்தி யுள்ளது. "இந்த வகையில் நடந்துள்ள முதலாவது கைது இது. ஐ.நா. விசாரணைக்குச் சாட்சியமளிக்க முன்வருவோரை அச்சுறுத்தும் நோக்குடனேயே இந்தக் கைது இடம் பெற்றுள்ளது" என்று பெயர் குறிப்பிட விரும்பாத மனித உரிமை ஆர்வலர் ஒருவர் தெரிவித்தார்.

(உ-5,402)

### எங்கள

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'எங்களைப்படிக்க விடுங்கோ குழப்ப வேண்டாம்', 'குடிபோதைப் பாவனையே குடும்ப வன்முறைக்கு காரணமாகிறது', 'மட்டற்ற கேடு மதுபானத்தால் விளையும் அதை எட்டிப் பார்க்காதே', 'போதைப் பொருள் பாவனையை ஒழிப்பதில் ஒன்றாய் செயற்படுவோம்', 'போதைப் பொருள் பாவனையைதூண்டுவோரை எமது பகுதியில் இருந்து விரட்டியடிப்போம்', 'மனித மாண்பை மதிப்போம் மனித நேயத்தை வளர்ப் போம்', 'குடியாதே குடியாதே கும்மாளம் அடிக்காதே சவுக்காலையில் குடிக்காதே', 'அப்பா குடிச்சிட்டு வீட்டில இருந்தா நான் படிக்க மாட்டன்', 'இளைஞர்கள் குடிப்பதால் எதிர்காலம் பாதிக்கப் படும்', 'சிறுவர்களைப் பாது காப்பதும் சீரான சமூகத்தின் பொறுப்புக்களே' போன்ற வாசகங்களை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாவாந்துறை கிராமசேவகர் அ.சர்வேஸ்வரன், "எமது பிரதேசங்களில் கடந்த காலங்களை விட என்றுமில்லாத அளவுக்கு மதுபாவனை அதிகரித்துள்ளது. குடிப்பழக்கத்தால் அடிமையானவர்கள் மட்டுமன்றி அவர்களைச் சுற்றியுள்ளவர்களும் பாதிக்கப்படுகின்றனர் குறிப்பாக பிள்ளைகளது எதிர்காலம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே இளைஞர்கள் இதிலிருந்து மீண்டு எதிர்காலத்தை வளமுடையதாக மாற்ற வேண்டும்"- என்று தெரிவித்தார்.

(ந-14,ரி)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்

### திருமதி கலியுகாம்பிகை (பவா) முருகதாசன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், காங்கேசன் துறையை வசிப்பிடமாகவும் யாழ். பெருமாள் கோவிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலியுகாம்பிகை (பவா) முருகதாசன் நேற்று 26.10.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 27.10.2014 திங்கட்கி ழமை பி.ப 3 மணிக்கு அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தம்பு சுப்பிரமணியம்

(C.T.B. மணியம்)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சுப்பிரமணியம் (C.T.B மணியம்) நேற்று (26.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பு- சடைச்சி தம்பதியரின் மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும்,சாந்தி,ஜெயந்தி, வரதராஜா,ஜெயராஜா, பிரேமராஜா,சிவராஜா,ஆனந்தி நிசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும்,கஜேந்திரன், ஜெயசங்கர், மங்களேஸ்வரி,கவிதா, வித்திரா, குமுதினி,சத்தியசீலன், தனேந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா பேரம்பலம்

(ஓய்வு பெற்ற சாவகச்சேரி ப.நோ.கூ.ச கிளை முகாமையாளர்)



கல்வயலைப் பிறப்பிடமாகவும் தற்போது கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பேரம்பலம் நேற்று (26.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-வள்ளிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரரும் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் (ஓய்வு பெற்ற பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்) அவர்களின் உடன்பிறவாச் சகோதரரும் வைரமுத்துவின் (முன்னாள் இ.போ.ச ஊழியர்) மைத்துனரும் சிவபாக்கியத்தின்(ஓய்வு பெற்ற S.P.H.M) சகலனும் பிரசாந்தினி(சுவிஸ்), மதியானந்தன்(விரிவுரையாளர், தொழில் நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்), சுதர்சினி(கனடா), புவிவதனி(கனடா), கோகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கலாநிதி செந்தில் குமார்(விரிவுரையாளர், சவுதி அரேபியா), ராம்குமார் (உதவி முகாமையாளர்-துறைமுக அதிகாரசபை, கொழும்பு), தாட்சாயினி (கொழும்பு), சுந்தரகுமார், புவனச்சந்திரன், குணரத்தினராசா, சுகந்தினி (ஆசிரியை, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோரின் பெரிய தந்தையும் கபிஷா, சதுஷிகன், தேனுஷிகன், அபிசரன், அபிசிகா, அபினா, ஆரூயன், அஜுயன், அன்பினி, மதுஷா, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.10.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று , பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 03.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இலங்கைநாயகி அம்மன் கோவிலடி
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.
T.P : 021 2230876 / 0777485294

தகவல்:
வயிரமுத்து மதியானந்தன்
(மருமகன்)

(53632) (08)

## மரண அறிவித்தல்

### சுப்பையா நல்லமுத்து

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நல்லமுத்து 26.10.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சின்னையா அப்பாச்சி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனவியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இராசம்மா, பரஞ்சோதியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நஞ்சிதமலர் (ஓய்வுபெற்ற பரிசாரகர், யாழ். போதனா வைத்தியசாலை), சரஸ்வதி (ஓய்வுபெற்ற பரிசாரகர், முழங்காவில் வைத்தியசாலை), வைஜேந்திமாலா, காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தங்கராஜா, மற்றும் அருந்தவநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், தயானந்தி (கிராம அலுவலர், நுணாவில் மேற்கு), தயாதேவி (மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி), தயாளரதி (யாழ். மேல் நீதிமன்றம்), காலஞ்சென்ற அனுசன், சுதாகரன் (நீதிவான் நீதிமன்றம், சாவகச்சேரி), கோகிலறமணன் (தபால் ஊழியர், உருத்திரபுரம்) ஆகியோரின் பேர்த்தியும், பிணவியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில்* பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உலவம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருதங்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
0215680251

# பணிப்புறக்கணிப்பு நேற்று ஏழாம் நாள்

## சுகாதாரப் பரிசோதகர்களின் போராட்டம் தொடர்கிறது

மட்டக்களப்பு,ஒக். 27
கிழக்கு மாகாணத்தில் பொது சுகாதாரப் பரிசோதகர்களால் முன்னெடுக்கப்படும் பணிப் புறக்கணிப்பு ஏழாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.
இது தொடர்பில் அகில இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் உப தலைவர் ஜீ. சரவணபவன் கூறுகையில்;
இதுவரை மாகாண சுகாதார திணைக்களத்தால் எங்களின் கோரிக்கைகளுக்கு எந்தவித மான பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளவில்லை. ஆனால் பொது சுகாதார உத்தியோகத்தர்களுக்கு உரிய முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு மட்டக்களப்பு பிராந்தியத்திலிருந்து கல்முனைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.
மேலும், பொது சுகாதாரப் பரிசோதகர்களின் கோரிக்கைக்கு அமைய குறித்த இடமாற்றம் தொடர்பில் மற்றுமொரு குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பீ. கே. ஞானகுணாளன் தெரிவித்தார். (ஒ-10)

## மஹிந்தவை ஆதரிப்பது தொடர்பில் மட்டக்களப்பில் நடந்த கூட்டம்



மட்டக்களப்பு, ஒக். 27
"வென்றெடுத்த சுதந்திரத்தை பாதுகாப்போம்" எமது உரிமைகளை காத்திடுவோம் எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் சனிக் கிழமை விசேட கூட்டம் ஒன்று மட்டக்களப்பு மாநகர சபை யின் நகர மண்டபத்தில் நடை பெற்றுள்ளது.
மட்டக்களப்பு மாவட்ட தொழிற் சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் இராஜன் மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம செயலாளர் லெஸ்லி தேவேந்திரா, ஜனாதிபதியின் தொழிற் சங்க இணைப்புச் செயலாளர் என்.வி. கல்கட்டி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்தின் தலைவர் பந்துல் சமன் குமார், அரச கூட்டுத்தாபன தனியார் வியாபாரிகள் சங்க செயலாளர் றஞ்சித் ஹெட்டியாராச்சி, ஸ்ரீலங்கா சுதந்திர புகையிரத ஊழியர் சங்க பிரதம செயலாளர் நதிரா மனோச், ஸ்ரீலங்கா சுகாதார ஊழியர் சங்க பிரதம செயலாளர் ரோஜ் டிமெல் ,மீள்குடியேற்றப் பிரதியமைச்சரின் ஊடக இணைப்பாளர் எம்.ஜீவானந்தம், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசாந்தன், உட்பட மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.
இங்கு கருத்துத் தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் இராஜன் மயில்வாகனம் இன மத பிரதேச வேறுபாடுகள் இன்றி செயற்பட்டு வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எல்லோரும் ஆதரிப்பது எமது கடமையாகும் எனத் தெரிவித்தார். (ஒ-10)

# மூதூர், காத்தான்குடி கடற்கரைகளில் கரையொதுங்கும் மீன் இனங்கள்



மூதூரில்



காத்தான்குடியில்

காத்தான்குடி, ஒக். 27
திருகோணமலை மூதூரிலுள்ள களப்பு பகுதிகளில் மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குவதாக பிரதேச மீனவர்கள் தெரிவித்துள்ள அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் வங்காள விரிகுடா காத்தான்குடி கடற்கரையில் நேற்று அதிகாலையிலிருந்து இறந்த நிலையில் சிறிய ரக மீன்கள் மற்றும் நண்டுகள் கரையொதுங்கி வருவதாக காத்தான்குடி பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.
மூதூர் களப்பு பகுதிகளில் மீன்கள் கரையொதுங்குவது குறித்து கடற்றொழில் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் உபாலி சமரதுங்க கூறுகையில், திருகோணமலை, மூதூர் களப்புகளில் அல்கா பெருக்கம் மீன்கள் இறப்பதற்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இறால் பாலம் அருகில் பெருமளவான மீன்கள் கரையொதுங்கியதை அடுத்து, மேற்கொண்ட ஆய்வுகளின் இறுதி முடிவு நாரா நிறுவனத்தால் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார். இதேவேளை- ஆய்வுகள் நிறைவடையும் வரை மூதூர் பிரதேச களப்புகளில் மீன்பிடி நடவடிக்கைகளை தற்காலிகமாக தடை செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும் உபாலி சமரதுங்க சுட்டிக்காட்டினார்.
காத்தான்குடி கடற்பரப்பில் கரையொதுங்கும் மீன்கள் தொடர்பில் இலங்கை கடற்றொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் டொமின்கோ ஜோர்ஜிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:
கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இவ்வாறு கடலில் மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கும் சம்பவம் இடம்பெற்றது. இது கால நிலை மாற்றம் மற்றும் கடலிலுள்ள கடற் பாறைகளில் ஏற்பட்டுள்ள நீரின் உட்புறச் சூழலில் ஏற்படும் மாற்றங்களால் நடைபெறுவதாக நறா நிறுவனம் தெரிவித்துள்ளது- என்றார்.
கடலில் மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குவதை பார்வையிட பெரும் திரளான மக்கள் கடலுக்கு வரும் அதே வேளை இந்த காலநிலை தொடரும் பட்சத்தில் மீன்கள் அதிகமாக இறந்த நிலையில் கரையொதுங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-10)

## இ.போ.ச. பஸ் மீது கல்முனையில் கல்வீச்சு

கல்முனை பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் மீது கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
அக்கரைப் பற்றிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பய ணித்த பஸ் மீதே, நேற்றுக் காலை 9 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரால் பஸ் மீது கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
சந்தேக நபர்கள் இதுவரை அடையாளங் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.
தாக்குதலில் பஸ் கண்ணாடிகளுக்கு சேதமேற்பட்டுள்ள போதிலும், சாரதிக்கும் பயணிகளுக்கும் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை.
சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (ஒ-10)

# கதீப்மார் இமாம்களின் ஒன்றுகூடலில் ஜம்இய்யதுல் உலமாக்கள் வெளிநடப்பு

காத்தான்குடி,ஒக்.27
காத்தான்குடி கதீப்மார் இமாம்கள் சம்மேளனத்தினால் புதிய காத்தான்குடி அன்வர் பள்ளி வாசலில் சனிக்கிழமை இரவு நடத்தப்பட்ட ஹஜ்ஜுப் பெருநாள் ஒன்றுகூடல் மற்றும் ஹிஜ்ரி 1436 முஹர்ரம் இஸ்லாமிய் புதுவருட நிகழ்வில் பங்கேற்ற காத்தான்குடி ஜம் இய்யதுல் உலமாவில் அங்கம் வகிக்கும் முக்கிய உலமாக்கள் சிலர் சிறிது நேரம் நிகழ்விலிருந்து வெளிநடப்பு செய்தனர்.
கதீப்மார் இமாம்கள் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட குறித்த ஹிஜ்ரி 1436 முஹர்ரம் இஸ்லாமிய புதுவருட நிகழ்வில் அகில இலங்கை சுன்னத் வல் ஜமாஅத் சூபிச உலமா உகள் சபையின் பொதுச் செயலாளர் மௌலவி எம்.எல்.ஏ.எம். காசீம் (பலாஹி) வருகைதந்ததையடுத்தே அங்கு அதிதிகளாக அழைக்கப்பட்ட காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமாவில் அங்கம் வகிக்கும் முக்கிய உலமாக்கள் சிலர் நிகழ்விலிருந்து வெளிநடப்பு செய்து நிகழ்வை சிறிது நேரம் பகிஷ்கரித்தனர்.
காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமாவில் அங்கம் வகிக்கும் முக்கிய உலமாக்கள் "காசீம் மௌலவியை அழைத்திருக்கக் கூடாது. அவர் இருந்தால் நாங்கள் வைபவத்தில் கலந்து கொள்ளமாட்டோம். காசீம் மௌலவியை எடுத்தால் ரவூப் மௌலவியையும் எடுக்க வேண்டும் அவருக்கும் இவருக்கும் என்ன வித்தியாசம், காசீம் மௌலவியை வெளியேற்றுங்கள். காசீம் மௌலவி இஸ்லாமிய அகீதா கொள்கையில் பிழையானவர்" என்று தெரிவித்தனர்.
இதன்போது குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக அழைக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் வருகை தந்திருந்தபோதும் நிலைமையை அறிந்து உள்ளே வராமல் வெளியில் நின்றவாறே சென்று விட்டார். இதையடுத்து நிலைமையை விளங்கிக் கொண்ட பள்ளிவாசல்கள் கதீப்மார் மற்றும் இமாம்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி ஏ.எல்:. ஆதம்லெப்பை (பலாஹி) மற்றும் அதன் செயலாளர் மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா (பலாஹி) ஆகியோர் உள்ளே சென்று காசீம் மௌலவியிடத்தில் விடயத்தை தெரிவித்ததையடுத்து காசீம் மௌலவி வைபவத்தை விட்டு வெளியேறினார்.
இதையடுத்து நிகழ்விலிருந்து வெளியேறிய காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமாவில் அங்கம் வகிக்கும் முக்கிய உலமாக்கள் மற்றும் பிரமுகர்கள் உள்ளே சென்று அமர்ந்தனர்.
பின்னர் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மற்றும் காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் அஸ்பர் ஆகியோர் தொலைபேசி மூலம் அழைக்கப்பட்டு வருகைதந்தனர். பின்னர் நிகழ்வு தொடர்ந்து நடைபெற்றது.
(ஒ-10)


## மரண அறிவித்தல்



### தம்பு சோமசுந்தரம்

(பிரபல விவசாயி, 3ஆம் வாய்க்கால் -பரந்தன்)

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சோமசுந்தரம் 24.10.2014 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் சுவர்ணா, கிருஷ்யந்தன் (லண்டன்), விவேகானந்தன்(கனடா), சிவநேசன் (பொறுப்பதிகாரி நெல் ஆராய்ச்சி நிலையம், பரந்தன்), சுகலியா (கனடா), சுகுணா (லண்டன்), சுகிர்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரவிக்குமார்(பொறியியலாளர்), கெங்காதேவி(லண்டன்) வளர்மதி (கனடா), வனிதா, யசோதரன்(கனடா), கலாநிதி அருள்(லண்டன்), இராசேந்திரம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2014) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மீசாலை வடக்கு, வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை மேற்கு,

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/17225)(4.3.6)


# பகலகம குளத்தை பார்வையிட்டனர் மீராசாகிப் உதுமாலெப்பை குழுவினர்

அம்பாறை, ஒக். 27
அம்பாறை மாவட்டத்தின் தெஹியத்தகண்டி பிரதேச செயலாளர் பிரிவில் நீண்ட காலமாக தூர்ந்துபோயுள்ள பகலகம குளத்தை கிழக்கு மாகாண நீர்ப்பாசன மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் மீராசாகிப் உதுமாலெப்பை தலைமையிலான அதிகாரிகள் சனிக்கிழமை சென்று பார்வையிட்டனர்.
தெஹியத்தகண்டி பிரதேச செயலாளர் திருமதி ஹெஹன் நாயக்க, அமைச்சின் உதவிச் செயலாளர் எம்.ஐ.சலாகுதீன், நீர்ப்பாசன பிராந்திய பணிப்பாளர் நிஹால் சிறிவர்த்தன, மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் மத்திய மாகாணங்களுக்கு பொறுப்பான அதிகாரிகள், நீர்ப்பாசன அதிகாரிகள் ஆகியோர் அங்கு சென்றிருந்தனர். இந்தக் குளத்தை புனரமைப்பதன் மூலம் 380 ஏக்கர் விவசாய நிலங்களுக்கான நீரையும் பகலகம மக்களுக்கான குடி தண்ணீரையும் பெற்றுக் கொடுக்க முடியும் என அமைச்சர் மீராசாகிப் உதுமாலெப்பை தெரிவித்தார்.
மேலும், விவசாயிகளுக்கு நீர்ப்பாசனம் மற்றும் குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்தும் வகையில் தெஹியத்தகண்டி பகலகம குளத்தின் புனர்நிர் மாண வேலைக்கான மதிப்பீட்டு அறிக்கையை உடன் மேற் கொள்ளுமாறும் அமைச்சர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்.
(ஒ-10)

## தவறிவிட்டது

உரும்பிராய் வடக்கு, உரும்பிராயைச் சேர்ந்த துரைசிங்கம் பிரியந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (920442749V), சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம், என்பவற்றுடன் இன்னும் சில ஆவணங்கள் அடங்கிய பேஸ் கடந்த (20.10.2014) யாழ்நகர் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

(53626) (45.3) T.P. 077 647 5748

## நிர்மாணிப்பவர்களின் தேசிய சங்கம் வடமாகாணக் கிளை பதவி வெற்றிடம்-முகாமைத்துவ உதவியாளர்

கல்வித்தகைமை- க.பொ.த.உ/த (G.C.E A/L) சித்தியடைந்திருத்தல்.

தமிழ் மொழியுடன், ஆங்கிலம், சிங்களம் ஓரளவு பேசத் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

கணனி அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

குடிசார் (Civil) தொழில்நுட்ப அனுபவம் விசேட தகைமையாக கருதப்படும்.யாழ்நகர எல்லைக்குள் வதியும் ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் சுயமாக தயாரிக்கப்பட்டு தொலைபேசி இலக்கம் இருப்பின் குறிப்பிட்டு கீழ்வரும் அலுவலக முகவரிக்கு 03.11.2014 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அல்லது நேரில் அனுப்பிவைக்கலாம்.

முகவரி : தலைவர்
நிர்மாணிப்பவர்களின் தேசிய சங்கம்
இலங்கை வடமாகாணக்கிளை
இல.124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.

## எதிர்கால செயற்பாடு: ஆராய்வதற்கு குழு

### அமைந்தது ஜாதிக ஹெல உறுமய

ஜாதிக ஹெல உறுமய அரசுடன் இணைந்து செயற்படுவதா? இல்லையா? என்பது குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க ஏழு பேரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜாதிக ஹெல உறுமய முன் வைத்த ஆலோசனைகள் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது முடிவை அறிவித்துள்ளது. இந்த முடிவு குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க ஜாதிக ஹெல உறுமயவின் ஏழுபேர் கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்படுமென அக்கட்சியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ற)

## அபிவிருத்திக்காக கிராமங்களை இனங்காணும் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஒக்.27

பின்தங்கிய கிராமங்களுக்கு மேலதிக அபிவிருத்திகளை முன்னெடுக்கு முகமாக நாளை செவ்வாய்கிழமை வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கிராமங்களை அபிவிருத்திக்காக இனம் காணும் கூட்டம் நடைபெறவுள்ளது. வலி. மேற்கு பிரதேச செயலர் அம்பலவாணவர் சோதிநாதன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறும்.

அதில் வேள்ட்விசன் செயற்பாட்டு முகாமையாளர் வலி. மேற்கு வேட்ள் விசன் இணைப்பாளர் ஆகியோர் கருத்துரை வழங்குவர். வலி. மேற்கு பிரதேச சபை திட்டமிடல் அலுவலர்கள் மற்றும் வேலைபைப்பகுதி தொழில்நுட்ப அலுவலர்களை கலந்து கொள்ளுமாறு வேள்ட்விசன் நிறுவன அதிகாரி கேட்டுள்ளார். (ற-50)

## எமது சிறகுகள்(Wings) விளையாட்டுக்கழகத்தினால் 28/09/2014 அன்று நடாத்தப்பட்ட சீட்டிழுப்பு நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களின் விபரங்கள் வருமாறு

1ஆம் பரிசு - ஜெ.தசிக்கா(180, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்)
2 ஆம் பரிசு - செ.தேவதாஸ் (17/1, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்)
3ஆம் பரிசு - அ.பேரிமேனகா( 52, கொண்டடி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்)
ஆறுதல் பரிசில்கள் - ஆர்.ஜனோஜன்(கோப்பாய் கிழக்கு, கோப்பாய், யாழ்ப்பாணம்)
-ரி.அர்சு(3, எச்சமோட்டை வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்)
-பஸ்ரினி(மன்னார்)

மேற்படி நபர்கள் தமக்குரிய பரிசில்களை எமது காரியாலயத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

(தொடர்புகளுக்கு -077 1920206) -நிர்வாகம்-

## மரண அறிவித்தல்



### கந்தையா பொன்னம்பலம்

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னம்பலம் 24.10.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-தையல்முத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், மகாலஷ்சுமி அவர்களின் அன்புக்கணவரும், சுதேசபாலன் (பிரான்ஸ்), சத்தியபாலன் (கனடா), விஜயலஷ்சுமி, தேவமலர் (கனடா), பாலகுமாரன் (பிரான்ஸ்), சுகந்தினி(கனடா), அருள்தேவி(கனடா), யோகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகா (பிரான்ஸ்), மஞ்சுளா(கனடா), சோதிராஜா, பிறேம் (கனடா), சிவதர்ஷினி(பிரான்ஸ்), மோகனச்சந்திரன்(கனடா), இரவீந்திரன்(கனடா), விஜியந்தி(கனடா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், பவளம், தங்கச்சியம்மா, குமாரசாமி மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராணிமலர், தவராஜா, கனகாம்பிகை(கனடா), மகேந்திரராஜா (டென்மார்க்), மல்லிகாதேவி(கனடா), மன்மதராஜா(கனடா) ஆகியோரின் அன்பு மச்சானும், மைதிலி, மிதிலன், கிருஷாந் (பிரான்ஸ்), சுருதி, கோகுல் (கனடா), அருந்ததி, மாலதி, சகிலா, திபாஷினி, பபிசா, கபிசா, லெனிசா(பிரான்ஸ்), சங்கீதன், லக்ஷனா(கனடா), ரணுஜன், வர்ணஜா(கனடா), ஆர்யன், ஆதன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை 28.10.2014 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கலைவாணி மக்கள் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். T.P : 021 300 1208 (53630)(4.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி சிதம்பரநாதன்

(இளைப்பாறிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், குற்றப் புலனாய்வுத்துறை(CID))



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி சிதம்பரநாதன் கடந்த (25.10.2014) சனிக்கிழமை அமரராகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி- தங்கமுத்து தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான தம்பையா- மாணிக்கம் தம்பதியரின் மருமகனும் அன்னபூரணியின் அன்புக் கணவரும் ஸ்ரீரங்கன், இராகுலன், கோகுலன், தவகுலன், குருகுலன் மற்றும் காலஞ்சென்ற தனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜன்சி, தயாநிதி, சத்தியா, ராதிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கணேசன், கதிர்காம லிங்கம், பார்வதி மற்றும் தில்லைநாயகி, மீனாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நர்த்தகி, தாரகி, விகாஷ், கிரிஷ், ஆசிகா, பிர்த்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான குருதாசன், இலங்கைநாதன் மற்றும் இராசேஸ்வரி, கனகரத்தினம் பவானியம்மா, ஞானசுவுந்தரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி, சிவநாதன் ஆகியயோரின் சகலரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(27.10.2014) திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் பொறளை ஜெயரத்தின மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 1.00மணிக்கு கிரியைகள் நடைபெற்று பி.ப 3.00 மணிக்கு பொறளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி : 011 2363954
077 3561262
(c/17246)(08)

தகவல் : குடும்பத்தினர்.
12B, 1/1, 46 ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் மாணிக்கவாசகர்

(ஓய்வுபெற்ற பிரதி அஞ்சல்மா நாயகம், வடமாகாணம்)

வண்ணார் பண்ணை, கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மாணிக்கவாசகர் நேற்று (26/10/2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சுந்தராம்பாள் தம்பதியினரின் அன்பு மகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், புவிராஜ் (சிரேஷ்ட வலய முகாமையாளர் - [வடக்கு, கிழக்கு] அலியான்ஸ் இன்சூரன்ஸ்), புவனா (லண்டன்), Dr.வதனா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்தி, ஞானசம்பந்தர் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதேஷ், தோகன்யா, யுகராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்வநாயகி மற்றும் கனகசபாபதி (கனடா), ஈஸ்வரி, வடிவாம்பிகை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27/10/2014) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20/10 A, ஐயர் பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (53631)

தகவல்:
குடும்பத்தினர்
021 205 5401

## ஆத்ம சாந்தி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 1937 * 11 * 10



மறைவு 2014 * 09 * 28

### அமரர் கனகர் சின்னராசா

3/1, ஸ்ரான்லி கல்லூரி வீதி, கச்சேரி, யாழ்பாணம்

28/09/2014 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் கூறி தேற்றியோருக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவர்களுக்கும், இறுதிக் கிரியையின்போது பல்வேறு வகையில் உதவி, ஒத்தாசை நல்கியோருக்கும், அன்னார் நோயுற்று இருந்தபோது பல வகையில் ஆதரவு நல்கிய உறவினருக்கும், எமது உளப்பூர்வ மான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (27/10/2014) திங்கட் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

3/1 ஸ்ரான்லி கல்லூரி வீதி, கச்சேரி,
யாழ்ப்பாணம்.T.P : 021 2220292 (53629)

குடும்பத்தினர்

# தொடர்ச்சிகள்

## நால்வரை

அதன் தலை வெட்டப்பட்டு கொழும்பிலுள்ள ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது. (ற)

## புலிகளின்

எஸ்.ஜே. சமரக்கோன் அரசு பதவியிழப்புக்கு மேலதிகமாக எதிர்வரும் நாள்களில் நெருக்கடியான நீதித்துறை தீர்ப்புகளை எதிர்கொள்ள நேரிடும் என்று எச்சரித்துள்ளார்.

2005ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த வெற்றிபெற மாட்டார் என்று 50 சோதிடர்கள் தெரிவித்திருந்தனர். மஹிந்தவுக்கு ஆதரவாக எட்டுப்பேர் மட்டுமே கருத்து வெளியிட்டிருந்தனர்.

அவர்களில் எஸ்.ஜே. சமரக்கோன் முக்கியமானவர். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவே ஜனாதிபதியாவார் என்றும், இரண்டு தடவைகள் பதவி வகிப்பதுடன், விடுதலைப் புலிகளின் முடிவு குறித்தும் எஸ்.ஜே. சமரக்கோன் தெளிவான எதிர்வு கூறலை வெளியிட்டிருந்தார்.

அது மட்டுமன்றி அவரது எதிர்வு கூறலுக்கேற்ப சரத் பொன்சேகா மீதான தற்கொலைத் தாக்குதல், மங்கள-ஸ்ரீபதி அரசிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் இணைந்து கொண்ட சம்பவம் போன்ற நிகழ்வுகளும் அச்சொட்டாக நடந்து முடிந்திருந்தது என்று கூறப்பட்டுள்ளது. (ற)

## இராமாவில்

நலன்புரி நிலையம் அமைந்திருந்த பகுதியைப் பார்வையிட்டனர். படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்த இந்தப் பகுதியில், மக்கள் மீளக்குடியமர்வு இடம்பெற்றுள்ளது என்பதை உறுதிப்படுத்து வதற்காகவே இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது. கமலேஸ் சர்மாவுடன் இணைந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளும் அங்கு சென்றிருந்தனர்.

இந்தக் குழுவினரை மீளக் குடியமர்ந்த அந்தப்பகுதி மக்கள் வரவேற்றனர். கடந்த 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடந்த வருடமே மக்கள் தமது சொந்தக் காணிகளில் மீளக் குடியமர்த்தப்பட்டனர் என்றும், இந்தக் குடும்பங்களில் 69 பேருக்கு இந்திய வீடமைப்புத் திட்டத்தின் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தென்மராட்சி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.ரகுநாதனால், அந்தக் குழுவினருக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ற-9)

## வியாழக்கிழமை

முற்பதிவு செய்துகொள்வதற்காக கடந்த வாரம் அதிகளவான பொதுமக்கள் புகையிரத நிலையம் வருகை தந்தனர். இந்த நிலையில், யாழ் - கொழும்பு சேவையில் ஈடுபடும் குளிரூட்டப்பட்ட கடுகதி, கடுகதி, யாழ்.தேவி, தபால் புகையிரதம் ஆகிய ரயில்களின் இருக்கைகள் முழுவதும் முற்பதிவு செய்யப்பட்டன. அத்துடன், யாழ் - கொழும்பு மாத்தறை (ஞாயிற்றுக் கிழமை மட்டும்) செல்லும் ரயிலுக்கான இருக்கைகளும் முற்பதிவு செய்யப்பட்டு பூர்த்தியாகியுள்ளன.

இதனால், இன்று (நேற்று) ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர்ந்து வரும் 5 நாள்களுக்கு. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான ரயில்களின் ஆசனப் பதிவுகள் அனைத்தும் முற்பதிவு செய்யப்பட்டுவிட்டன. இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக, குறித்த ரயில்களில் மேலதிகப் பெட்டிகளை இணைப்பது பற்றி உத்தேசிக்கப்பட்டு வருகின்றது. எனினும் அது தொடர்பில் இதுவரையில் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப் படவில்லை"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## கிணற்றுக்குள்

தப்பட்டது. யாழ்.போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

தற்போது மழைவீழ்ச்சி ஆரம்பமாகியுள்ள நிலையில் கிணறுகளில் நீர்மட்டம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. எனவே பெற்றோர் தமது குழந்தைகள் தொடர்பில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்று வைத்தியசாலைத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர். (ற-4)

## அரசுக்கு

இதன் போது 20இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்தனர். அவர்களில் 12 பேர் பெண்களாவர். மாணவர்களின் போராட்டங்களை ஒடுக்குவதையே அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ளனர் என்பதையே இந்தச்சம்பவம் உணர்த்துகிறது.

எனவே, மாணவர்களை ஒடுக்கிய செயல் கண்டிக்கத்தக் கது. தனிப்பட்ட குழுக்களுக்கு உள்ள கருத்துச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் போன்றவற்றை இலங்கை அரசு மதிக்க வேண்டும்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## புலித் தடை

தையும் கருத்தில்கொள்ள வேண்டும். நடைமுறை விதிகளின் அடிப்படையில் சட்ட ரீதியாக புலிகளுக்கு எதிரான தடை நீக்கம் பற்றிய தீர்ப்பு இது என்பதும் முக்கியமானது. பிரிட்டனும் ஏனைய உறுப்பு நாடுகள் போன்று குறிப்பிட்ட தீர்ப்பு மற்றும் பொருத்தமான அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்ந்து வருகிறது. இதேவேளை அடுத்த மூன்று மாத காலத்திற்கு விடுதலைப் புலிகளின் சொத்துக்களின் முடக்கம் நீடிக்கும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-5)

## இலங்கை

தெரிவித்துள்ளார். பத்திரிகைக்கு நேர்காணல் ஒன்றை அளித்துள்ளார். அதன்போதே அவர் மேற்கண்ட கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இலங்கை அரசு இந்த விடயத்தில் அலட்சியமாக இருந்த காரணத்தினாலேயே ஐரோப்பிய நாடுகளும் அசட்டையாக இருந்தன. அது விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கத்துக்கு வழியேற்படுத்தியது. இன்னொரு புறத்தில் விடுதலைப் புலிகளுடனான பிரச்சினையில் இலங்கை அரசை ஐரோப்பிய நாடுகள் கைவிட்டுள்ளன என்பதற்கான சமிக்ஞையாகவும் இதனை எடுத்துக் கொள்ளலாம்.

2006ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் மீதான தடை விதிக்கப்பட்டது. அப்போதைய வெளிவிவகார அமைச்சு இந்த விடயத்தில் சிறப்பாக செயல்பட்டது. இன்னொரு புறத்தில் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மனைவி சுகந்திகா இந்த விடயத்தில் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தார்.

ஆனாலும் இலங்கை அரசு ராஜதந்திர விடயங்களில் அவரது பங்களிப்பை தொடர்ந்தும் பெற்றுக் கொள்ளாமல் ஒதுக்கி விட்டது. ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்பை முன்னுதாரணமாகக் கொண்டு எதிர்வரும் காலத்தில் அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படலாம். அந்த வகையில் இந்தத் தடை நீக்கத்தின் மூலமாக விடுதலைப் புலிகள் அமைப்பு சர்வதேச ரீதியாகப் பெரும் வெற்றியொன்றைப் பெற்றுள்ளது.

மறுபுறத்தில் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தால் புலிகள் அமைப்பின் மீதான தடை நீக்கம் இலங்கைக்குப் பெரும் அபாயமாக உருவெடுத்துள்ளது. எதிர்வரும் நாள்களில் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைக்குழுவின் அறிக்கையின் பின்னர் இலங்கை மீது சில தடைகள் விதிக்கப் படலாம்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## கமலேஷ்

சார்பானவர்களையும், அரசுக்கு சாதகமான செயற்றி ட்டங்களையும் மாத்தி ரமே அவர் பார்வையிட்டார்.

"ஏற்கனவே திட்டமிட்ட சந்திப்புக்களையும், அரசுக்கு சாதகமான செயற் றிட்டங்களையுமே பார்த்துள்ளார். மக்களால் முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்குரிய விடயங்கள் எதனையும் கமலேஷ் சர்மா பார்வையிட அக்கறை காட்டவில்லை. பயணத்தை ஒழுங்குபடுத்திய அரச அதிகாரிகளும் அதனைச் செய்ய முனையவில்லை"- என்று தமிழ் சிவில் சமூகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கைக்கு ஐந்து நாள் பயணமாக வந்துள்ள பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா, யாழ்.மாவட்டத்திற்கு நேற்றுக் காலை வருகை தந்தார். வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி, தேவைநாடும் மகளிர் அமைப்பினர் ஆகியோரைச் சந்தித்தார்.

இதற்கு மேலாக, ரில்கோ விடுதியில் சிவில் சமூகத்தினர் எனச் சொல்லப்படும் சிலருடனும் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா சந்திப்புக் களை மேற்கொண்டிருந்தார். தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்களோ அல்லது வழமையாக வெளிநாடுகளிலிருந்து வருகின்ற இராஜதந்திரிகளைச் சந்திக்கும் சிவில் சமூகத்தைச் சேர்ந்த எவருமோ குறித்த சந்திப்பில் கலந்து கொள்ள வில்லை.

அத்துடன் குறித்த சிவில் சமூக சந்திப்பை, அரச அதிகாரிகளே மேற்கொண்டுள்ளனர். குறித்த சிவில் சமூக சந்திப்பு தொடர்பில் கேள்விகள் எதனையும் கேட்க வேண்டாம் என்று பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா, பாதுகாப்பு பிரிவினர் ஊடாக ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். இதே போன்று சந்திப்பில் கலந்து கொண்ட சிவில் சமூகம் என்று சொல்லப்படுவோரும் ஊடகங்களுக்கு கருத்து எதனையும் தெரிவிக்க மறுத்து விட்டனர்.

கொடிகாமம் அல்லாரையில், இராணுவத்தினரிடமிருந்து பொதுமக்களுக்கு கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் விடுவிக்கப்பட்ட காணிகளையும் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் பார்வையிட்டார். அதன்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர்களுள் ஒருவராகிய ஆனந்தராஜா மற்றும் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

குறித்த காணிகள் விடுவிக்கப் பட்டமையால் நீங்கள் சந்தோசமாக இருப்பது தெரிகின்றது என்று பொதுநலவாய அமைப்பின் செயலாளர் இதன் போது மக்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காணிகளை விடுவிக்குமாறு கோரி தொடர் போராட்டங்களை நடத்தி 24 வருடங்களாக அவல வாழ்கை வாழ்ந்து கொண்டிருக்கும் வலி.வடக்கு மக்களை பொதுநலவாய அமைப்பின் செயலாளர் எட்டியும் பார்க்கவில்லை என்று வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்தார்.

ஒரு பக்கச் சார்பாக காட்டுவதற்கும், அரசுக்கு சாதகமான செயற்றிட்டங்களை மாத்திரமே காண்பித்து, யாழ்ப்பாணத்தின் உண்மை நிலைமையை அதிகாரிகள் மறைக்க முற்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். (ற-5)

## வடக்குக்கான

காப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று சண்டேலீடர் பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாணத்திற்குப் பயணம் மேற்கொள்ளும், வெளிநாட்டவர்களுக்கு கட் டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கடவுச்சீட்டுடன் வடக்கு மாகாணத்திற்கு பயணம் மேற்கொள்ளும் சகலரும், பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த நடைமுறை கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில், பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக, சண்டேலீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அதில், இலங்கையில் பிறந்து வெளிநாடுகளில் வசிப்போர் தமது உறவினரைப் பார்க்கவோ அல்லது அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவோ வடக்குக்கு தடையின்றி செல்ல முடியும். அவர்கள் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெற வேண்டியதில்லை.

ஆனால் இலங்கையில் பிறக்காதவர்கள் கட்டாயம் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றே வடக்குக்குப் பயணிக்க முடியும் என்று தெரிவித்தார் என்று குறிப்பிட்டுள்ளது. (ற-5)

## தமிழர்களின்

லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் 44 ஆவது தேசிய மாநாடு கொழும்பில் நேற்று நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில் போர் முடிந்து ஐந்து வருடங்களைக் கடந்துள்ள போதிலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் - முஸ்லிம் மக்களுக்குத் தொடர்ச்சியாக உரிமைகள் மறுக்கப்பட்டே வருகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆட்சி நிலவினால் மட்டுமே அந்தப் பகுதியில் வாழும் மக்கள் பாதுகாப்பாக இருக்கமுடியும். இதுவே எமது நிலைப்பாடும் கூட. உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் தமிழ் மக்களுடன் முஸ்லிம் மக்களும் இணைந்து அஹிம்சைவழிப் போராட்டத்தில் ஈடுபடவேண்டும் என்று நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

வடமாகாண சபைக்கு அரசு முழுமையான அதிகாரங்களை வழங்குமானால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட அனைத்து முஸ்லிம்களையும் மீளவும் அவர்களது சொந்த நிலங்களிலேயே நாம் குடியமர்த்துவோம்"- என்று அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

அஸ்வர் எம்.பி. பாய்ச்சல்

மாவை. சேனாதிராசா தனது உரையின்போது, புத்தளத்தில் 20 ஆயிரம் சிங்கள மக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் காணி உரிமைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டி மேடையில் பேசிக்கொண்டிருந்தார். அப்போது, மேடைக்குக் கீழே முதல் வரிசையில் அமர்ந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், மாவை.சேனாதிராசா தெரிவித்த குறிப்பிட்ட கருத்திற்கு மறுப்புத் தெரிவித்தார்.

இதற்கு மாவை.சேனாதிராசா, "நான் இது தொடர்பாக இங்கு விவாதிக்க விரும்பவில்லை. இது நாடாளுமன்றமுமில்லை" - என்று சிரித்துக் கொண்டே தெரிவித்துத் தனது உரையைத் தொடர்ந்தார்.

பிறகு, அந்த மாநாட்டின்போது இடம்பெற்ற நூல் வெளியீட்டின்போது மேடையேறிய நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் மாவை சேனாதிராசாவின் தோளில் தட்டிக் கை குலுக்கிக் கொண்டார்.

இந்தச் சர்ச்சைகளுக்குப் பிறகு உரை நிகழ்த்திய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ, "மாவை.சேனாதிராசா எம்.பியின் பேச்சு மற்றும் அதற்கு அஸ்வர் செயற்பட்ட விதம் ஆகியவை தனக்கு நாடாளுமன்றில் இருக்கின்றதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தியது"- என்று தெரிவித்து நிகழ்வில் சிரிப்பொலியை அதிகரிக்கச் செய்தார். (ற-5)

## ஐ.நா.

சபை தலையிட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்கு சாட்சியமளிப்பதற்கு விடுக்கப்படும் எச்சரிக்கையாகவே இதனை நாம் நோக்கு கின்றோம்"- என்று அவர் தெரிவித்தார். (ற-5)

## புலிகள்

இவ்வாறு குறிப்பிட்டார்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் ஆயுத ரீதியாக தோற்கடிக்கப்பட்டு அழிக்கப் பட்டிருக் கின்றார்கள். அவர்கள் மீளவும் தலை தூக்கினால், அவர்களின் தலையிலேயே அடித்து அழிப்போம். ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற தடை நீக்கத்துக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் தான் மேன்முறையீடு செய்ய வேண்டும்.

வடக்கு மாகாணசபைக்கு வழங்கிய நிதி பெருமளவு செலவு செய்யப்படவில்லை. ஏனைய 8 மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணம் திறம்பட செயற்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு மக்கள் மீது அக்கறையில்லா விடினும், எமக்கு மக்கள் மீது அக்கறை இருக்கின்றது.

அவர்கள் மக்களுக்கு செய்யாது விடினும், நாம் அவற்றைச் செய்வோம். அவர்கள் வழங்கிய பணத்துக்கு முதலில் செலவைச் செய்யட்டும். அது போதாது என்று மீளவும் கேட்டால் அதனை வழங்குவது தொடர்பில் ஆலோசிப்போம்" - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

## ஐ.நா.வுக்கான

கள் தொடர்பில் சாட்சியங்களைச் சமர்ப்பிப்பதற்காக தனி நபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு வழங்கப்பட்டிருந்த காலஅவகாசம் எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை ஜெனீவா நேரப்படி நள்ளிரவுடன் நிறைவுபெறுகின்றது. இதற்கமைய இறுதி விசாரணை அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்னதாக கிடைக்கப்பெற்ற சாட்சியங்களை விரிவாக அலசி ஆராய்வதற்கான காலஅவகாசம் விசாரணைக்குழுவுக்குக் கிடைக்கும் என்று ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அடுத்த ஆண்டு மார்ச் மாதக் கூட்டத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த இறுதி அறிக்கை பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவுக்கு அறிவுறுத் தப்பட்டுள்ளது. (ற)

# ஆசிரிய ஆலோசகர்கள் புதிய சேவையில் உள்ளீர்ப்பு

அச்சுவேலி, ஒக்.27

ஆசிரிய ஆலோசகர்கள், இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை என புதிய சேவையில் உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கான புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு கல்வி அமைச்சால் தயாரிக்கப்பட்டு அரச சேவைகள் ஆணைக்குழுவின் பரிசீலனையின் பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் வெளியிடப்படவுள்ளது.

இது தொடர்பான விவரங்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புக்கு முன்னர் வெளியிடப்படலாம் என்று கூறப்படுகின்றது.

ஆசிரிய ஆலோசகர்கள் கல்விக் கோட்ட மட்டத்தில் பாடரீதியில் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வருகின்றனர். இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளவர்கள் ஆசிரிய ஆலோசகர்களாகப் பணி புரிகின்றனர். ஆனால் அவர்களுக்கு ஆசிரியர் களுக்கான சம்பளத்துடன் ஆலோசகர் பணிக்கு மாதாந்தம் குறிப்பிட்ட தொகை படியாக வழங்கப்படுகின்றது. ஆனால் அவர்களின் கடமை நேரம் அலுவலக நேரம் வரை 4.30 இருப்பதோடு பாடசாலை தவணை விடுமுறை தினத்திலும் கடமையில் இருக்க வேண்டும்.

ஆசிரிய ஆலோசகர்கள் தமது சேவைக்கென தனிச்சேவை உருவாக்கவேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். அவர்களின் கோரிக்கை கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் இருந்து வந்தது. தற்போது புதிய கேள்விப் பிரமாணக்குறிப்பு தயாரிக்கப்பட்டு அரச சேவைகள் ஆணைக்குழுவில் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஆணைக்குழு அங்கீகரித்த நிலையில் அமைச்சரவையின் அனுமதியுடன் வெளியிடப்படவுள்ளது. புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் ஆசிரிய ஆலோசகர்களுக்குப் புதிய சம்பளத் திட்டம் மற்றும் சேவை ரீதியிலான உரிமைகள் கடமைப் பொறுப்புக்கள் வரையறை செய்யப்பட்டுள்ளது. (வ-11)

## இலங்கையில் சீன தலையீடு கரிசனை காட்டும் இந்தியா

டில்லி, ஒக்.27

இலங்கையில் சீனாவினால் மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் இந்தியா விசேட கவனம் செலுத்தியுள்ளது என்று இந்திய ஊடங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்குப் பயணம் செய்திருந்த பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இந்திய அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு களின் போதே மேற்படி விவகாரம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை கடற்பரப்புக்குள் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் நுழைந்தமையானது இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்றும் அந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டி யுள்ளதாக அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)



கிளிநொச்சி கனகாம்பிகை குளம் பகுதியில் பாவனையற்ற கிணற்றில் 4 அடி நீளமான சிறுத்தை ஒன்று வீழ்ந்துள்ளது. கிணற்றில் சிறுத்தை இருப்பதை அவதானித்த கிராம மக்கள் இராணுவ அதிகாரிகளின் உதவியுடன் அதனைப் பாதுகாப்பாக மீட்டு வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைத்தனர். (ற)

# எனது பதிவுகளுக்காகக் காத்திருங்கள்

### பேஸ்புக் பக்கத்தில் ஸ்டீபன் ஹொக்கிங்

லண்டன், ஒக்.27

பிரிட்டன் நாட்டு விஞ்ஞானியும் கணித நிபுணருமான ஸ்டீபன் ஹொக்கிங் அவரது பேஸ்புக் பக்கத்தில் தமது பதிவுகளுக்காக ஆர்வத்துடன் காத்திருங்கள் என்று கூறி உள்ளார்.



கடந்த 7 ஆம் திகதி தன்னை பேஸ்புக்கில் இணைத்துக் கொண்ட ஸ்டீபன் ஹொக்கிங் அவரது ஆதரவாளர்களுக்கும் ரசிகர்களுக்கும் வெள்ளிக்கிழமை பகிர்ந்து கொண்ட பேஸ்புக் நிலை குறிப்பில்,

'இந்த உலகத்தை எது வாழச் செய்கிறது என்பதை எண்ணி எப்போதும் நான் வியப்பதுண்டு. நேரமும் விண் வெளியும் மிகவும் புதிரானது. அவை நாம் சிந்திப்பதை நிறுத்திவிடாது. அவ்வாறான சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள கிடைத்த வாய்ப்பு என்னை வியக்கச் செய்கிறது. உங்களுடன் எனது பயணத்தை அவ்வப்போது பகிர்ந்துகொள்வதில் நான் மிகவும் ஆர்வத்துடன் உள்ளேன். எனது பக்கத்தை பார்த்தமைக்கு நன்றி என்று ஸ்டீபன் ஹொக்கிங் குறிப்பிட்டுள்ளார்.

இயற்பியலாளரான ஸ்டீபன் வில்லியம் ஹொக்கிங், பிரிட்டனைச் சேர்ந்தவர். பல கணித கோட்பாடுகளையும் அண்டவியல் குறித்த ஆராய்ச்சியையும் மேற்கொண்டுள்ளார். தனது 21 வயதில் லேட்டரல் ஸ்க்லெரோசிஸ் என்ற குணப்படுத்தப்பட முடியாத நோய் தாக்கி அவரது கை, கால் பாதிக்கப்பட்டு, பேச்சையும் இழந்தார்.

இந்த நிலைமையிலும் அவர் தனது நிபுணத்துவத்தைக் கைவிடாது கணினி மூலமாக மற்றவர்களுடன் தொடர்பு கொண்டு இயற்பியல் ஆராய்ச்சிகளிலும், எழுத்துத் துறையிலும், பொதுவாழ்விலும் மிகவும் ஈடுபாட்டுடன் இயங்கி வருகிறார்.

தற்போது அவர் அனைத்து தரப்பு மக்களும் இணைய கூடிய தளமான பேஸ்புக்கில் இணைந்துள்ளது அவரை பின்பற்றுபவர்களை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. இது வரை தனது பேஸ்புக் பக்கத்தில் 1,102,183 விருப்பங்களை ஸ்டீபன் ஹொக்கிங் பெற்றுள்ளார். (வ)

## குற்றங்களும் கைதுகளும்

### மகளின் மீது தாயார் திருட்டுக் குற்றச்சாட்டு

கரணவாய்

வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சுமார் 25 பவுண் தங்க நகைகள் மற்றும் 2 லட்சம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிக்கொண்டு தலைமறைவாகி விட்டதாக மகளுக்கு எதிராக தாயாரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது.

கரணவாய் பகுதியைச் சேர்ந்த தாயார் ஒருவரே தனது மகளுக்கு எதிராக மேற்படி முறைப்பாட்டைச் செய்ததுடன், தனது மகள் தங்க நகைகள் மற்றும் பணம் என்பவற்றுடன் இரணைமடுவைச் சேர்ந்த இளைஞர் ஒருவருடன் சென்றுவிட்டதாக தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அதனை அடுத்து இதுதொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-108)

### பொல்லால் தாக்கி ஒருவர் கொலை

அக்கரப்பத்தனை

அக்கரப்பத்தனை, ஊட்டுவில் பிரேமோர் தோட்டத்தில் பொல்லால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக்கொலை சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.15 அளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

ஊட்டுவில் பகுதியைச் சேர்ந்த 56 வயதான ஒருவரே தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் நுவரெலியா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் 2 சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்களைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குடும்பத்தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (வ)

### இளைஞரைத் தாக்கியோர் தப்பி ஓட்டம்

தென்மராட்சி

வீதியில் நடந்து சென்ற இளைஞரை மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் மோசமாகத் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மட்டுவில் மடத்தடியில் இடம்பெற்றது. மட்டுவில் மத்தியைச் சேர்ந்த சந்திரன் மயூரன் (வயது—25) என்பவர் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)

### சிறுமி துஷ்பிரயோகம்; நால்வர் கைது

அத்துருகிரிய

அத்துருகிரியவில் 15 வயது சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஹான விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய நபர் உள்ளிட்ட மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறுமியைக் கடத்துவதற்கு உதவிய சிறுமியின் உறவுக்கார பெண்கள் இருவரும் ஓட்டோச் சாரதியும் கைதாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மஹரகம பகுதிக்கு சிறுமி கடத்திச்செல்லப்பட்டு துஷ்பிரயோ கத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (வ)

# அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருக

### மட்டு.களுதாவளை மீனவர் கூ. ச. தலைவர் கோரிக்கை

மட்டக்களப்பு, ஒக்.27

அடிப்படைத் தேவைகள் இதுவரை நிறைவேற்றப்படாமையால் கடற்றொழிலாளர்கள் பெரியளவில் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் தங்களது தேவைகளை நிறைவேற்றித் தருமாறும் மட்டக்களப்பு, களுதாவளை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செல்லையா இராமலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'களுதாவளை கிராமத்தில் 175 குடும்பங்கள் மீன்பிடியை முழு நேர ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டுள்ளன.

இந்தத் தொழிலை சிறப்பாகவும் விருப்புடனும் மேற்கொள்வதற்கு அடிப்படை வசதிகளான வீதி சீரின்மை, மின்சாரம் இல்லாமை உள்ளிட்டவை தடையாகவுள்ளன.

களுதாவளை கடற்கரைக்குச் செல்லும் சுமார் 200 மீற்றர் நீளமான பிரதான வீதியானது குன்றும் குழியுமாக உள்ளது. கடந்த ஆழிப்பேரலையால் இந்த வீதி மிகவும் சேதமடைந்துள்ளது.

இதனால், மீன்களைப் பிடித்து சிறந்த விலைக்கு விற்க முடியாதுள்ளது. காரணம் இந்த வீதியால்; மீன்களை ஏற்றிச் செல்லும் வாகனாங்கள் வரமுடியாதுள்ளது.

களுதாவளை கடற்கரையிலிருந்து மீன்களை வீதிக்கு கொண்டுவருவதற்கு அதிகளவு பணத்தை வழங்கி, மீன்களை காவிச் சென்று மீன்களை ஏற்றும் வாகனங்கள் தரித்து நிற்கும் இடத்துக்குக் கொண்டு சேர்க்க வேண்டியுள்ளது. இதனால், எம்மிடம் வருகின்ற மீன் வியாபாரிகள் நாம் கஷ்டப்பட்டு பிடித்த மீன்களை குறைவான விலைக்கே பெற்றுக் கொள்கின்றார்கள்.

இதனால், ஒவ்வொரு நாளும் எமது மனித உழைப்பில் நஷ்டம் ஏற்படுவதுடன், இந்தத் தொழிலில் வெறுப்பும் எமது மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதை விட, எமது கடற்கரை பிரதேசத்தில் மின்சார வசதி இல்லை. இரவு வேளைகளில் கடற்றொழிலுக்கு செல்கின்றவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வெளிச்சமின்மையால் இரவு வேளைகளில் கரைவலை மீன்களை இனங்காண முடியாதுள்ளதால், இரவு வேளை கடற்றொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளது. ஆழ்கடல் மீன்பிடியாளர்களும்; கரை வருவதற்கு சிரமப்படுகின்றனர்.

இவ்வாறான சிரமங்களுக்கு மத்தியில் இந்தத் தொழிலை நாம் மேற்கொண்டு வருகின்றோம். தேவை அறிந்து சேவையாற்ற யார் முன்வருவார்கள் என்ற அங்கலாய்ப்புடன் இருக்கின்றோம். இவை தொடர்பில் தேர்தல் காலங்களில் வரும் அரசியல்வாதிகளிடம் முன்வைத்தோம். எவரும் நிறைவேற்றித் தருவதாக இல்லை' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# புலித் தடை நீக்கத்துக்கு எதிராக மேன்முறையிட வேண்டும் அரசு

*ரணில் விக்கிரமசிங்க கோருகின்றார்*

கொழும்பு, ஒக்.27
ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்துக்கு எதிராக இலங்கை அரசால் மேன்முறையீட்டை மேற்கொள்ள முடியும். எனினும் அரசு எவ்வித மேன்முறையீட்டையும் மேற்கொள்ள முனையவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க,
"ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் விடுதலைப் புலிகளின் தடை நீக்கத்துக்கு எதிராக மேன்முறையீடு செய்ய அரசு துணியாத போது ஐரோப்பாவில் உள்ள விடுதலைப் புலிகளின் பெருமளவு சொத்துக்கள் மீண்டும் கே.பி குழுவுக்கு சென்றடைந்து விடும்.
எனவே அரசு, ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் விடுதலைப்புலி தடை நீக்கத்துக்கு எதிரான மேன்முறையீட்டை மேற்கொள்ள வேண்டும்"- என்று தெரிவித்தார்.
எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்புரிமை இல்லாமையால் குறித்த மேன் முறையீட்டை அரசால் நேரடியாக மேற்கொள்ள முடியாது என்று இலங்கை அரசாங்கம் கூறி வருவதையும் ரணில் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை இலங்கையின் சார்பில் குறித்த மேன்முறையீட்டை செய்யுமாறு ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ற)



*பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதி கமலேஷ் சர்மா யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் நேற்றுக்காலை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை சந்தித்து கலந்துரையாடினார். ஆளுநர் அலுவலகத்தில் சுமார் 1 மணித்தியாலயம் இச்சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பின் போது, பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வடமாகாண சபை தொடர்பிலும், வடமாகாண அபிவிருத்தி தொடர்பிலும் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-106)*

# வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்குமா ஹெல உறுமய?

கொழும்பு, ஒக்.27
வரவு-செலவுத் திட்டம் தொடர்பிலான வாக்கெடுப்பின் போது ஜாதிக ஹெல உறுமய எதிராக வாக்களிக்கக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.
ஜாதிக ஹெல உறுமய கட்சி அண்மையில் ஏழு அம்ச கோரிக்கைகள் அடங்கிய ஆவணமொன்றை ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளது. 19ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குதல் உள்ளிட்ட சில கோரிக்கைகள் இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.
இந்த கோரிக்கைகள் தொடர்பில் அரசு இதுவரையில் உரிய கவனம் செலுத்தத் தவறியுள்ளது என்று ஜாதிக ஹெல உறுமய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. இவ்வாறான ஒரு பின்னணியில் எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ள வரவு-செலவுத் திட்டம் தொடர்பிலான இரண்டாம் மூன்றாம் வாசிப்புக்களின் போது அரசுக்கு எதிராக வாக்களிக்க நேரிடும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித் துள்ளார்.
வரவு-செலவுத் திட்ட வாக் கெடுப்பின் போது எதிராகவோ அல்லது வாக்களிப்பில் பங்கேற்காமல் விடுவதன் மூலமோ அரசின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் என தெரிவித்துள்ளார். இந்த தீர்மானத்தை சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கீகரிப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, வரவு-செலவுத் திட்டத்தில் எவ்வாறான ஓர் அணுகுமுறையை பின்பற்றுவது என்பது குறித்து இன்று விசேட கூட்டமொன்று நடத்தப்பட உள்ளது என்றும் இதில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அந்தக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (ற)

# வடக்கு பயணத் தடை; பல நாடுகள் அதிருப்தி

கொழும்பு, ஒக்.27
வெளிநாட்டுப் பிரஜைகள் வடக்கு மாகாணத்திற்கு பயணம் செய்வது தொடர்பில் காணப்படும் கெடுபிடிகள் குறித்து பல நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன. குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட நாடுகளே இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளன.
இலங்கைப் பயணம் தொடர்பில் பல நாடுகள் தமது நாட்டுப் பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ளன. அத்தியாவசியமில்லை என்றால் இலங்கையின் சில பகுதிகளுக்கான பயணங்களைத்தவிர்த்துக் கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
வடக்குக்குப் பயணம் செய்யும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு உடையவர்கள் முன்கூட்டியே அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை குறித்தே அவை எச்சரிக்கை விடுத்துள்ளன. இலங்கையின் ஒரு சில பகுதிகளுக்கான பயணங்களின் போது எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது என்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ற)

**அமெரிக்க லொத்தர் விசா- V2 Travels**
இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
இன்னும் ஒருசில தினங்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
கிளிநொச்சி 0771516537 | யாழ்ப்பாணம் 0773867257 | நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் இப்பயிற்சியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
வாரநாள் பிரிவுகள் ஆரம்பம் - 30.10.2014 வியாழன்
1.காலை 8.00-10.00 2.காலை 10.00-12.00
வார இறுதிநாள் (சனி, ஞாயிறு) பிரிவுகள் ஆரம்பம் - 01.11.2014
மாலை 03.00-05.00
(நெல்லியடியில் புதிய பிரிவுகள் ஆரம்பம் 01.11.2014 சனிக்கிழமை மாலை - 03.00 மணி)
SAAMSON Experts in English Training
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

# எதிர்க் கட்சியாகவே மு.க. செயற்படுகிறது

*அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.27
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சியாகவே செயற்படுகின்றது என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.
அண்மையில் சம்மாந்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். அவசர அவசரமாக தீர்மானம் எடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. முஸ்லிம் சமூகத்தை பாதுகாப்பதே கட்சியின் நோக்கமாகும். தியாகங்களை செய்ய தயாராக இருக்க வேண்டும்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

**வேலை வாய்ப்பு**
காட்வெயார் விற்பனை நிலையம் ஒன்றுக்கு கிளிநொச்சியில் இருந்து கீழ் காணும் பதவிகளுக்கு அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.
1) முகாமையாளர்
2) விற்பனையாளர்
3) உதவியாளர்
விளம்பர இல. 5021
C/O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/17250) (4.3.6)

**FRENCH LANGUAGE CENTRE**
FALC REGISTERED FRENCH CENTRE.
**FRENCH CLASSES**
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
850 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்...
நவீன முறையிலான கற்பித்தல்கள் Audio, Video மூலம் & A/C வகுப்பறைகள்
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: போலி ஆசிரியர்களிடம் சென்று ஏமாறாதீர்கள்....
ஆரம்பம்:01.11.14 Sat 8.00am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்:01.11 Sat 4.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
021 320 2973
0779 789 456

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136 நாடுகளில் 1040 கிளைகள்.
ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஒரிரு மாதங்களும் படிக்கலாம். LETTRE & PHOTOCOPIES இலவசம். ஆரம்பம் 02.11.2014



குறிப்பு: வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே. பொய் விளம்பரங்களை நம்பாதீர்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கச்சேரி → புகையிரதகடவை → AF or ஆரியகுளத்திலிருந்து ஸ்ரான்லிறோட் → AF

## மரண அறிவித்தல்



## கயிலாசபிள்ளை நந்தகுமார்

(ஊடகச் செயலாளர், வடமாகாண ஆளுநர் அலுவலகம், கல்வி இணைப்பாளர், வடமாகாண கல்வி அமைச்சர்)

உபதபாற்கந்தோர் வீதி, அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கேணியடி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட கயிலாசபிள்ளை நந்தகுமார் 25.10.2014 சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் சிரோமினியின்(பிரதி முதல்வர், யா/உயரப்புலம் மெதடிஸ்தமிஷன் வித்தியாலயம்) அன்புக் கணவரும், வேதாசினி, வர்ணவி(மாணவர்கள், யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கயிலாசபிள்ளை -பரமேஸ்வரிதம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், இராசநாயகம் காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், க.விஜயகுமார் (அதிபர், யா/நவாலி ஸ்தான அ.மி.த.க. பாடசாலை), காலஞ்சென்ற திருமதி சரோஜினிதேவி, க.பாலகுமார்(ஜேர்மனி), க.கலாதேவி(ஆசிரியை, யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், குலநாயகம் (ஓய்வுபெற்ற பிரதேசசபைச் செயலாளர் -கரவெட்டி), கௌரிமனோகரி (ஆசிரியை, யா/அராலி சரஸ்வதி ம.வி), பவானி (ஜேர்மனி), சசிகலா, நிரஞ்சலா, சுஜித்தா, செந்தீசன், மாலினி, சறோஜி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், குணராசா, பத்மநாதன், மோகனகுமார், றோஸ், வேதநாதன், வசந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகலனும், விதுரன், குபேரன், ருக்ஷாயினி, ரூபலவன், கிந்துசன், Dr.பவந்தன் (கொழும்பு), கஜந்தன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்), சேந்தன் ஆகியோரின் சிறிய தந்தையும், ரஜிவதா, அபிதாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்
077 691 3071 (53613)(6.4.3)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.